# பொருளியல்

## பொருளியல் – I

## 500

## பல்தேர்வு வினாக்கள்

M.C. சுதாகரன் B.Com (Hons)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ECONOMICS

## Economics -I

### 500
### Multiple Choice questions
### With
### Answers




**M.C.Suthakaran B.Com (Hons)**
**(Teacher, J/Sandilipay Hindu College)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **Subject** | :- | *Economics* |
| **Title** | :- | ***Economics* -I *500 M.C.Qs*** |
| **Author** | :- | *Mr.M.C.Suthakaran* |
| **Copy Right** | :- | *Mrs.Raseetha Suthakaran* |
| **Edition** | :- | *1st Edition - March 2008* |
| **Pages** | :- | *VIII + 140* |
| **Copies** | :- | *1000* |
| **Address** | :- | *"Thishalaya"*<br>*Maligawathai,*<br>*Chankanai.* |
| **Publisher** | :- | *J/Sandilipay Hindu College,*<br>*Sandilipay* |
| **Printers** | :- | *Sairam Printers, Chankanai* |
| **Price** | :- | *Rupees Three hundred only*<br>*(300/=)* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எனக்கு

உருத்தந்து,

அமுதூட்டி, அறிவூட்டி,

உயர்நிலைக்கு ஏற்றிட்ட,

என்னுயிர் அன்னைக்கும் தந்தைக்கும்

இந்நூலை சமர்ப்பணம் செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பொருளியல் பாடம் 1970களில் தான் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் முக்கியமானதாக அங்கீகாரம் பெற்றது. வணிக, முகாமைத்துவ கற்கை நெறிகள் பல்கலைக்கழக மட்டத்தில் அறிமுகமான காலத்தில் கணக்கியல், வணிகம் போன்ற பாடங்கள் பாடசாலை மட்டத்தில் க.பொ.த. உயர்தர மட்டத்தில் முக்கியத்துவம் பெற்றன. அதனுடன் இணைந்து பொருளியல் பாடமும் முக்கியத்துவம் பெற்றது. ஆனால் கலைப்பட்டதாரிகளில் பொருளியலை விரும்பி, மதிப்புடன் கற்கும் காலம் 1960களிலிருந்தே தொடர்ந்து வந்தது. பல்கலைக்கழக மட்டத்தில் பொருளியல் சிறப்புப்பட்டம் கவர்ச்சிகரமானதும் திறமை மிக்கவர்களுக்குரியதாகவும் கருதப்பட்ட காலமிருந்தது. எனினும் பின்பு வணிக முகாமைத்துவ பட்டங்கள் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் முதன்மை பெற பொருளியல் பாடத்தின் முன்னுரிமையும் அதிகரித்தது. வியாபாரக்கல்வி என்பது இலாபகரமான கல்வியாகவும். உயர் தொழிற்கல்வி (Professional Education) யாகவும் வளர்ந்தபோது பொருளியல் பல கிளைகளாகி பெருவிருட்சமாகிவிட்டது. விவசாய பீடம், பொறியியல் பீடம், கட்டிடக்கலை சார்ந்த மாணவர்களுக்கும் இன்றியமையாத பாடங்களில் ஒன்றாக பொருளியல் பல் வகைமையுடன் வளர்ந்து வருகிறது. உலகின் முதலாவது இலாபகரமானபட்டமாக உயர்ந்துநிற்கும் M.B.Aல் பொருளியல் முதன்மையான பாடமாகும்.

இந்த வளர்ச்சி வரலாறு தான் பாடசாலைகளில் பொருளியல் பாடத்தின் பிரதான இடத்தை பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஏற்படுத்தியது. பொருளியல் ஒரு விஞ்ஞானபாடமாக கலை, வணிக முகாமைத்துவ துறைகளில் அங்கீகாரம் பெற்றுள்ளது. அண்மைக்காலத்தில் "Z" புள்ளிகளை உயர்த்துவதிலான இதன் முக்கியத்துவத்தை மாணவர்களும் உணர்ந்துள்ளனர். இதனால் இதன் பயன்பாட்டுத்தேவை அதிகரித்துள்ளது.

பொதுவாக "ஆசிரியர் நல்லாப்படிப்பித்தால் பொருளியல் இலேசான பாடம் அல்லது கஷ்டமானபாடம்" என்ற உணர்வலை மாணவரிடையில் காணப்படுகிறது. ஆசிரியர்.மா.செ.சுதாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் படிப்பிப்பதில் வல்லவர். குரு விசுவாசம் மிக்கவர். உண்மை ஈடுபாட்டுடன் நீண்டகாலமாக கற்பித்து வருபவர். "யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும்பாலும் எல்லா தனியார் கல்விநிலையங்களிலும் கற்பிக்கும் முன்னணி ஆசிரியர் சுதாகரன்" எனும் கடின உழைப்பினால் பெற்ற நல்ல பெயர் அவருக்கு உதவுகிறது.

இப்போது நல்லாசானுக்குரிய மற்றொரு பாய்ச்சல் அறிவை வாய் மொழியிலிருந்து எழுத்துக்கு மாற்றுவதாகும். கற்பித்தலிலிருந்து கற்பதற்கான வளமாக (*Learning resource*) மாற்றுவதாகும். இந்த முயற்சியில் அவர் நிறையவே வெற்றிபடைய மனதார வாழ்த்துகிறேன்.

பரீட்சை அச்சுறுத்தலிருந்து மாணவர்களைக் காப்பாற்றும் நோக்கில் வினாவிடைமாதிரியில் நூல்களை எழுதும் தேவை கூர்மையடைந்துள்ளது. தனது தொழில் அனுபவங்களினூடாக மாணவர் தேவைகளையும் பிரச்சினைகளையும் துல்லியமாக இனங்கண்டு "பொருளியல் - I 500 பல்தேர்வு வினாக்கள்" என்ற இந்நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இதில் அறிமுகப் பொருளாதாரம், சந்தைப் பொருளாதாரம், பேரினப் பொருளாதாரம், அரச பொருளாதாரம் என்ற நான்கு அலகுகளிலும் தலா 125 வினாக்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். மாணவர்கள் இந்நூலைப்பயன்படுத்தி பரீட்சைகளில் வெற்றிபெற முடியும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

பாடசாலைகளில் பொருளியல் கற்பிக்கும் ஏனைய ஆசிரியர்களும் இதனை ஒரு ஆதார நூலாக கொண்டு வினா வங்கியை உருவாக்கி வினைத்திறனுடன் கற்பிக்கமுடியும்.

இவ்வாறு பல பயன்பாடுடையதாக இந்நூலை எழுதிய எனது அன்புக்குரிய தம்பி மா.செ.சுதாகரன் எதிர்காலத்தில் கற்பித்தலிலும் நூலாக்க முயற்சியிலும் அதிக ஊக்கத்துடன் செயற்பட்டு முன்னேறுவதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மாணவருலகம் இதனை வாங்கி பயன் பெற்று கல்வியில் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

*மா. சின்னத்தம்பி*
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*கல்வியியற் துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*14. 03. 2008*
*திருநெல்வேலி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பொருளியல் கற்பிக்கும் ஆசானாக கல்வியுலகினால் அறியப்பட்ட திரு.M.C.சுதாகரன் அவர்கள் உயர்தர வகுப்பு மாணவர்களின் தேவைகருதி தனது இரண்டாவது நூலாக "500 பல்தேர்வு வினாக்களைக் கொண்ட பொருளியல் -I இனை வெளியீடு செய்வதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்

எமது கல்லூரியில் பொருளியல் ஆசிரியராக மிகத்துடிப்புடனும், ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றும் திரு.M.C.சுதாகரன் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாது ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தன் முத்திரையைப் பதித்த ஆசிரியர்களில் ஒருவராக விளங்குகின்றார்.

இவர் தனது பணிகளில் மேலும் உயர்ந்தோங்க வேண்டுமென வாழ்த்தி இந்நூல் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டி நூலாக அமையும் என்ற நம்பிக்கையுடன் ஆசி வழங்குகின்றேன்.

*யா / சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.*
*சண்டிலிப்பாய்.*
*20. 03. 2008*

**வ. ஸ்ரீகாந்தன்,**
**அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"தேசிய கணக்கீடு" எனும் எனது முதலாவது நூலுக்கு கல்வி உலகு வழங்கிய ஆதரவினால் உந்தப்பட்டு "பொருளியல் -I 500 பல்தேர்வு வினாக்கள்" எனும் இரண்டாவது நூலை வெளியிடுவதில் அகமகிழ்கின்றேன்.இம்முயற்சிக்கும் எல்லாம் வல்ல இறைவனுடன் நீங்களும் பக்கபலமாக இருப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

உயர்தரப் பொருளியல் மாணவர்கள் பொருளியல் பாட வினாத்தாளில் கட்டுரை அமைப்புக்கள், கணக்குகள் என்பவற்றில் உயர் புள்ளிகளைப் பெறுகின்றபோதும் பல்தேர்வு வினாக்களில் நுணுக்கமாக சரியான ஒரு விடை மட்டுமே கேட்கப்படுவதால் புள்ளிகளை இழக்கின்றனர். இதனைக் கருத்திற் கொண்டே பொருளியல் - I அலகில் அனைத்துப் பாடப்பரப்புக்களையும் உள்ளடக்கி 500 பல்தேர்வு வினாக்களைத் தொகுத்துள்ளேன். இந்நூல் பொருளியல் சார்ந்தவர்களுக்கு நிச்சயம் உதவுமென கருதுகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பெருமதிப்பிற்குரிய யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் பேராசான் உயர்திரு.மா.சின்னத்தம்பி அவர்களுக்கும் நூல் அறிமுகம் செய்த தேசிய கல்வி நிறுவக முன்னாள் பொருளியல் வள ஆளணியர் திரு.சி.சிவகுமாரன் அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய கல்லூரி முதல்வர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களுக்கும் எனது இதயம் சார்ந்த நன்றியறிதல்களை சமர்ப்பிக்கின்றேன். மேலும் எனது கற்றல், கற்பித்தல், இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு சகல வழிகளிலும் துணைநிற்கும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிச் சமூகத்திற்கும் அச்சுப்பதித்த சங்கானை சாய்ராம் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலாசிரியன்

23.03.2008 M.C சுதாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. அறிமுகப் பொருளாதாரம் | 1-36 |
| 02. சந்தைப்பொருளாதாரம் | 37-73 |
| 03. பேரினப்பொருளாதாரம் | 74-105 |
| 04. அரச பொருளாதாரம் | 106-136 |
| 05. விடைகள் | 137-140 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அலகு – 01

# அறிமுகப் பொருளாதாரம்

01 பொருளியல் கருத்தின் படி இலவசப் பொருட்களை விபரிக்கும் சிறந்த முறையாவது, அப்பொருள்

1. நுகர்வோருக்கு பூச்சிய விலையில் கிடைக்கும் என்பதாகும்.
2. உற்பத்தியில் அருமையான வளங்கள் பயன்படுத்துவதில்லை என்பதாகும்.
3. அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் என்பதாகும்.
4. நிலம் அல்லது கடலிலிருந்து நேரடியாகப் பெறப்படுகிறது என்பதாகும்.
5. நிலையான அமையச் செலவில் உற்பத்தி செய்யப்படமுடியும் என்பதாகும்.

02. இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடம் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி இயல் தகவு வளையியைக் காட்டுகிறது இப் பொருளாதாரத்தின் உற்பத்தி மட்டமானது புள்ளி A இருந்து B நோக்கி மாற்றமடைவதன் அமையச் செலவானது




1. 20 அலகு ஆடைகளாகும்
2. பூச்சியமாகும்
3. 10 அலகு உணவு ஆகும்
4. ஓரலகு உணவுக்கு ½ அலகு ஆடை ஆகும்.
5. 30 அலகு ஆடைகளும் 20 அலகு உணவுமாகும்.

03. உலகில் கலப்புப் பொருளாதார முறைமையைகள் காணப்படுவதற்கான ஒரு காரணம் யாதெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தாராளச் சந்தைப் பொருளாதாரங்கள் வளங்களை திறன் மிக்க விதத்தில் ஒதுக்கீடு செய்கின்ன என்பதாகும்.
2. இலாபம் உழைக்கும் நோக்கமானது புதிய நிறுவனங்கள் கைத்தொழிலில் பிரவேசிப்பதை அதைரியப்படுத்தும் என்பதாகும்.
3. போட்டித் தன்மையானது எப்போதுமே விரும்பத்தக்க ஒன்றன்று என்பதாகும்.
4. தாராளச் சந்தைப் பொருளாதாரம் வருமானப் பங்கீட்டு சமமின்மைகளை உருவாக்கலாம் என்பதாகும்.
5. தாராளச் சந்தைப் பொருளாதாரத்தில் ஊழிய உற்பத்தித்திறன் குறைவென்பதாகும்.

04. கட்டில்லா சந்தைப் பொருளாதாரமொன்றிற்கும் ஒரு மத்திய திட்டமிட்ட பொருளாதாரத்திற்குமிடையிலான முக்கிய வேறுபாடுகளிலொன்று யாதெனில், முன்னையதில்

1. சில சாதனங்கள் தனியார் துறைக்கும் வேறு சில அரசுக்கும் உடமையாகவிருத்தலாகும்.
2. சந்தைப் பொருளாதாரமொன்றில் மட்டுமே சாதனங்கள் அருமையாக விருப்பதாகும்.
3. எல்லா சாதனங்களும் தனியார் துறைக்கு உரித்தாகவிருப்பதும் அவை சந்தை சக்திகளினூடாக ஒதுக்கீடு செய்யப்படுதலுமாகும்.
4. பெரும்பாலான சாதனங்கள் மூலதனப் பண்டங்களின் உற்பத்திக்கே கையாளப்படுதலாகும்.
5. சாதனங்கள் சந்தைச் சக்திகளால் ஒதுக்கீடு செய்யப்படுவதால் அவை அருமைத்தன்மை இல்லாதனவாக இருப்பதாகும்.

05. திட்டமிட்ட பொருளாதாரமொன்றில் யாருக்கு உற்பத்தி செய்வது? என்ற வினா பிரதானமாக

1. போட்டிச் சந்தைகளில் வருமானக் கொடுப்பனவுகளுக்காக சாதனங்களின் விற்பனையால்.
2. சமூக வழக்காறுகளைக் கையாண்டு சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு உற்பத்தியைப் பங்கீடு செய்வதன் ஊடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குறைந்த வருமானம் உழைப்போருக்கு பொருட்களையும் சேவைகளையும் விலைகளையும் அரசாங்கம் தானே நிர்ணயித்தலினூடாக
4. அரசாங்கம் பொருளாதாரத் திட்டமொன்றின் அங்கமாக வேதனங்களையும், விலைகளையும் தானே நிர்ணயித்தலின் ஊடாக.
5. பொருள் கொள்வோருக்கும் தொழில் வழங்குனருக்கும் இடையே பேரம் பேசலினூடாக நிர்ணயிக்கப்படும்.


06. அருமைத்தன்மைப் பிரச்சனையானது சார்பருமை
1. கலப்புப் பொருளாதாரமொன்றில் தங்கியிருக்கும் பொருளாதாரங்களில் மட்டுமே காணப்படும்.
2. விலைகளை வீழ்ச்சியடையச் செய்யுமானால் நீக்கப்பட்டு விடும்.
3. சில பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதைக் குறிக்கும்.
4. கிடைக்கும் சாதனங்களைக் கொண்டு மனித தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாவிடில் காணப்படும்.
5. இப்பொழுது காணப்பட்டபோதும் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது நீங்கிவிடும்.

07. தனியார் பண்டங்களையும் பொதுப்பண்டங்களையும் உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தைக் கருதுக.
அப்பொருளாதாரம் உற்பத்திசாத்திய எல்லையில் செயற்படும்போது பொதுப்பண்டங்களின் உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு
1. தனியார் பண்டங்களின் உற்பத்தியைப் பாதிக்க மாட்டாது.
2. தனியார் பண்டங்களின் அமைய விலையை உயர்த்தும்.
3. தனியார் பண்டங்களின் உற்பத்தி குறைவதைக் குறிக்கும்.
4. உற்பத்தி சாத்திய எல்லைக்கோட்டை இடப்புறமாக நகர்த்தும்.
5. பொதுப்பண்டங்கள் போட்டியற்றனவாதலால் மொத்த உற்பத்தியை அதிகரிக்கும்.

08. பின்வரும் வரிப்படம் பொருளாதாரம் ஒன்று தொடர்பான உற்பத்தி சாத்தியங்களின் வளையியைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உற்பத்தி மட்டம் வளையியில் X இலிருந்து Y இற்கு நகர்வதனால் இன்றைய, வருங்கால வாழ்க்கைத் தரங்களின் மீது ஏற்படும் மாற்றங்களின் சரியான சேர்க்கையைக் காட்டுக.

| | இன்றைய வாழ்க்கைத்தரம் | வருங்கால வாழ்க்கைத்தரம் |
|---|---|---|
| 1. | தேய்வு | தேய்வு |
| 2. | தேய்வு | அதிகரிப்பு |
| 3. | அதிகரிப்பு | தேய்வு |
| 4. | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| 5. | அதிகரிப்பு | மாறாதிருத்தல் |

09. அருமைத்தன்மையுள்ள வளம் பின்வருவனவற்றுள் எது?
   1. நிலக்கரி   2. நீர்   3. வினைத்திறனுள்ள உழைப்பு
   4. காலம்   5. மேற்கூறிய அனைத்தும்

10. அனைத்து நாடுகளும் எதிர்கொள்ளும் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினை
   1. பெருமளவு பணம் சொற்ப பண்டங்களின் பின் செல்வதாகும்.
   2. புவியின் கிடைத்தற்கரிய வளங்களின் மிகையான உபயோகம்.
   3. சூழல் மாசடைதல்.
   4. எல்லைக்குட்பட்ட வளங்களினால் வரையறுக்கப்பட்ட எல்லையற்ற விருப்பங்கள்.
   5. அதிகரிக்கும் வறுமை.

11. அதிகரித்த சிறப்புத் தேர்ச்சியின் விளைவாகப் பின்வருவனவற்றுள் எது ஏற்படுதல் மிகச் சாத்தியமானது?
   1. உற்பத்தி குறைந்து போதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அதிகரிக்கும் அலகுக் கிரயங்கள். உற்பத்திச் செலவு
3. தொழிலாளி ஒருவருக்கான கூலிகள் குறைந்து போதல்.
4. உற்பத்தித் திறன் அதிகரித்தல்.
5. தொழினுட்ப அறிவு குறைந்து போதல்.


12. சந்தைப் பொருளாதாரம் ஒன்றிலே விலைப் பொறிமுறை ஒன்றினால் சாதிக்கமுடியாதிருப்பது பின்வருவனவற்றுள் எது? 4
1. நுகர்வோர் நாட்டங்களிலான மாற்றங்கள் குறித்து சைகை காட்டுதல். சைகைத் தொழிற்பாடு
2. கேள்வியிலான மாற்றங்களுக்கு ஏற்ப நிரம்பலைச் சரிப்படுத்தல்.
3. மிகையான நிரம்பலையும் மிகையான கேள்வியையும் தவிர்த்தல்.
4. சகல வகையான பண்டங்களினதும் நியாயமான பங்கீட்டை உறுதிப்படுத்தல்.
5. வரையறைக்குட்பட்ட வளங்களை மாற்று உபயோகங்களுக்குப் பங்கீடு செய்தல். பங்கீட்டுத் தொழிற்பாடு

13. பின்வருவனவற்றுள் எது கட்டாயமாக ஒரு சந்தைத் தோல்வியைக் குறிக்கும்? விலைப் பொறிமுறையின் தோல்வி
1. அதிகரிக்கும் உற்பத்திச் செலவு.
2. கேள்வி அதிகரிப்பின் காரணமாக விலைகள் உயர்தல்.
3. நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள் இனிமேலும் தேவைப்படாததால் அவை முடப்படுதல்.
4. தமது உற்பத்தி காரணமாக எழும் புற நன்மைகள்/வெளிவாரி தொடர்பில் தமது உற்பத்தியாளர்கள் விலையொன்றை அறவிடமுடியாமை. நன்மை கறை உ-1
5. தனியார் செலவுகளும் சமூகச் செலவுகளும் சமமாக இருத்தல்.

14. இங்கு தரப்பட்டுள்ள வரிப்படம் மூலதனப் பொருட்களையும் நுகர் பொருட்களையும் உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்திச் சாத்திய வளையியைக் காட்டுகிறது. இவ் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள பொருளாதாரம் தனது உற்பத்தி மட்டத்தை X புள்ளியிலிருந்து Y புள்ளிக்கு மாற்றுமாயின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது

1. மூலதனப் பொருட்களின் 70 அலகுகள் அமயச் செலவினை ஏற்படுத்தும்.
2. நுகர்பொருள்களின் 250 அலகுகள் அமயச் செலவினை ஏற்படுத்தும்.
3. வேலையின்மையில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
4. அமயச் செலவினை ஏற்படுத்தமாட்டாது.
5. நுகர்பொருட்கள் துறையிலிருந்து மூலதனப் பொருட்கள் துறைக்குச் சாதனங்களை மாற்றும்.

15. கலப்புப் பொருளாதாரமொன்றில் சாதனங்களானவை

1. நுகர்வோரதும் உற்பத்தியாளரதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
2. நுகர் பொருட்களின் உற்பத்திக்கு ஒரு பகுதியும் மூலதனப் பொருட்களின் உற்பத்திக்கு இன்னொரு பகுதியும் ஒதுக்கீடு செய்யப்படும்.
3. பகுதியளவில் சந்தைச் சக்தியினாலும் பகுதியளவில் அரசினாலும் ஒதுக்கீடு செய்யப்படும்.
4. முற்றிலும் முயற்சியாளரின் செலவீட்டுத் தீர்மானங்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.
5. முற்றிலும் நுகர்வோரது செலவீட்டுத் தீர்மானங்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.


16. சந்தைத் தோல்வி என்பது

1. கேள்வியானது நிரம்பலுக்குச் சமமாகவில்லாத நிலையாகும்.
2. சந்தையானது சாதனங்களைத் திறமையாக ஒதுக்கீடு செய்யாத நிலையாகும்.
3. நிறுவனங்கள் ஒரு தொழிலை விட்டு வெளியேறுவதால் ஏற்படும் நிலையாகும்.
4. மத்திய ரீதியில் திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களோடு மட்டும் தொடர்புள்ள நிலையாகும்.
5. அரசாங்கமானது கட்டில்லாச் சந்தைச் சமநிலை விலையிலும் பார்க்க உயர்ந்த விலையை நிர்ணயிப்பதன் விளைவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பின்வரும் வரிப்படம் ஆடை, அரிசி என்பவற்றால் வரையறுக்கப்பட்ட ஒரு உற்பத்திச் சாத்திய வளையியைக் காட்டுகிறது.




இப்பொருளாதாரம் தனது உற்பத்தியை A புள்ளியிலிருந்து B புள்ளிக்கு மாற்றுமாயின் ஆடை, அரிசி என்பவற்றின் அமையச் செலவு பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் எது சரியானது?

1. அரிசியின் அமயச் செலவு அதிகரிக்க. ஆடையின் அமயச் செலவு குறையும்.
2. அரிசியின் அமயச் செலவு குறைய, ஆடையின் அமயச் செலவு அதிகரிக்கும்.
3. அரிசி, ஆடை என்ற இரண்டினதும் அமயச் செலவு அதிகரிக்கும்.
4. அரிசி, ஆடை என்ற இரண்டினதும் அமயச் செலவு குறையும்.
5. ஆடையினதும் அமயச்செலவு மாறாதிருக்க அரிசியின் அமயச் செலவு அதிகரிக்கும்.

18. பொருளாதாரப் பண்டம் என்பது யாது?
1. இலாபத்தில் விற்கப்படும் ஒரு பண்டம்.
2. அதிகரித்துச் செல்லும் திறன் கொண்ட நிலைமைகளின் கீழ் உற்பத்தி செய்யப்படும் ஒரு பண்டம்.
3. தனியார் துறையினால் மட்டும் நிரம்பல் செய்யப்படக்கூடிய ஒரு பண்டம்.
4. அமயச் செலவு உள்ள ஒரு பண்டம்.
5. பொதுத்துறையினால் மட்டும் நிரம்பல் செய்யப்படக்கூடிய ஒரு பண்டம்.

19. திட்டமிட்ட பொருளாதாரமொன்றில் எதனை உற்பத்தி செய்வது என்ற பொருளாதார பிரச்சினையானது தீர்மானிக்கப்படுவது
1. முயற்சியாளரது எதேச்சையான தீர்மானங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நுகர்வோரதும் அரசாங்கத்தினதும் கூட்டுத்தீர்மானங்களினால்
3. பகுதியளவில் சந்தைச் சக்திகளினாலும் பகுதியளவில் அரசினாலும்
4. அரசாங்க அறிவுறுத்தல்களினால்
5. நுகர்வோரது செலவீட்டுத் தீர்மானங்களினால்

20. பின்வருவனவற்றுள் ஒன்று சந்தைத் தோல்விக்கான காரணமன்று. அது எது?

1. பொதுப் பண்டங்கள் இருத்தல்
2. புறச்செலவுகள்
3. புற நன்மைகள்
4. நுகர்வோர் இறைமை
5. தனியுரிமைகள் காணப்படும்

21. பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் எல்லா சமூகங்களும் தெரிவுப் பிரச்சினைக்கு மூலம் கொடுக்கப்படுகின்றன என ஏன் நாம் கூறுகின்றோம்.

1. மனிதத் தேவைகள் வரையறையற்றவையாக இருப்பதனால்
2. பொருளாதாரங்கள் குறைவிருத்தியுடையவையாக இருப்பதனால்
3. மூலவளங்கள், மனிதத் தேவைகள் தொடர்பில் அருமைத்தன்மை உடையவையாகவும் மாற்றுப் பயன்பாடு உடையவையாகவும் இருப்பதனால்.
4. உற்பத்திக்காரணிகளின் பல்வேறுபட்ட சேர்க்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட தொகை பொருட்கள் சேவைகளையே உற்பத்தி செய்யமுடியுமென்பதால்.

22. சமூகத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையான யாருக்காக உற்பத்தி செய்யப்படுகிறது என்பதனால் கருதப்படுவது யாது?

1. உற்பத்தி தொடர்பான தீர்மானத்தை எடுப்பதில் உற்பத்தியாளர் இலக்கு வைத்துள்ள நுகர்வோர் தொகுதி எது என்பதனையாகும்.
2. உற்பத்தியானது ஏற்றுமதிக்குரியதா அல்லது உள்நாட்டு சந்தைக்குரியதா என்பதனையாகும்.
3. உற்பத்தியானது நுகர்வுக்குரியதா அல்லது முதலீட்டுக்குரிய என்பதனையாகும்.
4. பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு எவ்வழியில் வீட்டுத்துறையினரிடையே பங்கீடு செய்யப்படுகின்றது என்பதனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ஆரம்பப் புள்ளிக்கு குழிவான உற்பத்திச்சாத்திய வளையியொன்றினை அனுமானித்துக்கொள்க. அத்தகைய வளையி ஒன்றுக்கு இயைவான கீழ்நோக்கிய அசைவு எதனைக் குறிக்கின்றது? மிகப் பொருத்தமான விடையைக் குறிப்பிடுக.

1. ஒரு பொருளின் உற்பத்தி குறைவடைதலும் இன்னொரு பொருளின் உற்பத்தி அதிகரித்தலும்
2. தரப்பட்ட ஒரு தொகை மூலவளங்கள் மாற்றுச் சேர்க்கையான பொருட்களை உற்பத்தி செய்யும்.
3. உற்பத்தியில் அமையச் செலவு உள்ளது.
4. ஒரு பொருளின் மேலதிக அலகொன்றை உற்பத்தி செய்வதற்காக இன்னொரு பொருளில் இழக்கப்படும் அலகுகளின் தொகையானது அதிகரித்தல்.

24. ஒரு பொருளாதாரப் பண்டத்தின் சிறப்பியல்பு எது?

1. நுகர்வோன் தேவையினை திருப்திப்படுத்தும் பொருளாக இருத்தல்.
2. அப்பொருள் மனித வாழ்விற்கு முக்கியமானதாக இருத்தல்.
3. வழங்கப்படும் பொருள் உற்பதி சாதனங்களின் பயன்பாட்டை ஏற்படுத்துவதாக இருத்தல்.
4. இப்பொருளை உற்பத்தி செய்வது இலாபகரமுடையதாக இருத்தல்.

25. X, Y ஆகிய இரு பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு எளிதான பொருளாதாரத்தில் தொடக்கப் புள்ளிக்கு குழிவானவகையில் அமையும் ஒரு உற்பத்திச் சாத்திய எல்லை எதனைக் காட்டுகின்றது?

1. எல்லா வளங்களும் முழுமையாக பயன்படுத்தப்பட்டால் X, Y ஆகியவற்றில் வெவ்வேறு அளவுகளை உற்பத்தி செய்யலாம்.
2. வளங்கள் முழுமையாக நிலவுகின்ற தொழில்நுட்ப பின்னணியிலும் உத்தம முறையிலும் பயன்படுத்தும் இடத்து அதிகரித்துச் செல்லும் அமையச்செலவில் X, Y ஆகியவற்றில் மாற்று அளவுகளை உற்பத்தி செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கிடைக்கும் வளங்களும் தொழில்நுட்பமும் கொண்டு பொருளாதாரத்தினால் அடையப்படக்கூடிய பொருளாதார வளர்ச்சி மட்டம்.

4. உற்பத்திச் சாதனங்களை மாற்று வழிகளில் பயன்படுத்தி X,Y ஆகியவற்றில் வெவ்வேறு அளவுகளை உற்பத்தி செய்யலாம்.

26 முயற்சியாண்மையின் தனித்துவமான தொழிற்பாட்டை இனங்காண்க.

1. உற்பத்தி முறைமையின் திறமையான முகாமை.
2. ஒரு உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
3. எதனை, எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது பற்றிய தீர்மானங்களை எடுத்தலும் காரணிச்சேவைகளை பயன்படுத்தி நடைமுறைப்படுத்தலும்.
4. உற்பத்தியில் ஆபத்துக்களை ஏற்படுத்தல்.

27. மனித முதல் பின்வரும் முறைகளில் எதனால் ஆக்கப்படுகிறது?

1. புதிய முதல் உபகரணங்களுடன் ஊழியத்தினைப் பயன்படுத்தல்.
2. முதல் உபகரணங்கள் உற்பத்தி செய்வதில் வேலையற்ற ஊழியத்தினை பயன்படுத்தல்.
3. ஊழியப்படையின் கல்வி மட்டத்தினை உயர்த்துதலும், அறிவு, திறன் ஆகியவற்றைப் பயிற்சி, கற்றல் என்பவற்றினூடாக விருத்தி செய்தலும்.
4. ஊழியச் செறிவான உற்பத்தி முறைகளைப் பயன்படுத்தல்.

28. பின்வரும் கூற்றுக்களில் எது பொருளாதாரத்தின் பங்களிப்பினை சிறப்பாக விபரிக்கின்றது?

1. குறைந்தபட்ச செலவிலான பொருட்கள் சேவைகளின் உற்பத்தி
2. பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தவும் அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலும் சென்மதி நிலுவையிலும் பற்றாக்குறைகளையும் குறைந்த பட்ச அளவிலும் வைத்திருத்தலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சமூகத்தின் மனித தேவைகளை திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து வழங்கல்.
4. உற்பத்தி முறைமையினை திட்டமிடுதலும் இலக்குகளை வரையறை செய்தலும்.

29. மாணவன் ஒருவனுக்கு பல்கலைக்கழக கல்வியின் அமையச் செலவு என பின்வருவனவற்றில் எதனைக் கூறுவீர்கள்?
   1. மாணவனுக்கு ஏற்படும் சீவனச் செலவும் புத்தகங்களின் செலவும்.
   2. பல்கலைக்கழக மாணவனாக இருக்கும் பொழுது வேலை செய்யக்கூடிய வாய்ப்புக் கிடைக்கப்பெற்றிருந்தால் அதனால் இழப்பாக இருந்துள்ள வருமானம்.
   3. பல்கலைக்கழக மாணவன் ஒருவனுக்கு கல்விக்காக ஏற்படும் சராசரி அரசாங்க செலவு.
   4. ஒரு பல்கலைக்கழக மாணவன் குறித்த பெற்றோரினால் செய்யப்பட்ட செலவு

30. பின்வரும் கூற்றுக்களில் சந்தைப் பொருளாதாரத்தின் பிரதான இயல்பொன்றினை விபரிக்கும் கூற்று எது?
   1. அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுத் திட்டத்திற்கமைய நிறுவனங்கள் பொருள் உற்பத்தி பற்றி தீர்மானித்தல்.
   2. வெவ்வேறு பொருளாதார நடவடிக்கைகளிடையே சாதனங்களின் பயன்பாட்டை சந்தையினூடாக இயங்கும் சார்பு விலைகள் நிர்ணயித்தல்.
   3. உற்பத்தி தொடர்பாக ஊழியச் செறிவான முறைகள் பயன்படுத்தப்படுதல்.
   4. எப்பொழுதும் கேள்வி, நிரம்பல் சக்திகளினால் விலைகள் நிர்ணயிக்கப்படுதல்.

31. நிலம் என்ற உற்பத்திக் காரணியாக பின்வரும் பொருள்களில் எதை வகைப்படுத்த முடியும்?
   1. ஒரு தேயிலைத் தோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒரு இயற்கைக் காடு
3. நீர்ப்பாசனத்துக்காகக் கட்டப்பட்ட ஒரு புராதன குளம்
4. ஒரு இரத்தினக்கல் சுரங்கம்

32. கீழ்வருவனவற்றுள் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
1. ஊழியம் நிறை பயன்பாட்டிலிருப்பின் உற்பத்திப் புள்ளியானது எப்போதும் உற்பத்தி இயல்தகவு எல்லையின் மீது காணப்படும்.
2. வழிநடாத்தப்பட்ட பொருளாதாரத்தில் எதுவித விலைகளும் இலாபங்களும் இல்லை.
3. வேலையின்மை நிலைமையின் போது இரு பொருளின் உற்பத்தியையும் அமையச் செலவின்றி அதிகரிக்க முடியும்.
4. ஏற்றுமதி இடம்பெறும் போது உற்பத்திப் புள்ளியும் நுகர்வுப்புள்ளியும் ஒரே இடத்தில் காணப்படும்.

33. ஒரு தூய சந்தைப்பொருளாதாரத்திற்கான (Pure Market Economy) முக்கிய இயல்பு
1. விலைப்பொறி முறையின் சுதந்திரமான செயற்பாடு இருத்தல்.
2. தனியார் துறையில் இலாபங்களில் கட்டுப்பாடு இருத்தல்.
3. சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிடல்.
4. நுகர்வோர் இறைமையுடையவர்களாக இருத்தல்.

34. X,Y எனும் இரு பண்டங்கள் தொடர்பில் உற்பத்திச் சாத்திய எல்லையை வெளிப்புறமாக இடம்பெயரச் செய்யத்தக்க காரணியை இனங்காண்க?
1. முகாமையின் மாற்றமொன்றை தொடர்ந்து உற்பத்தியின் வினைத்திறமையீனங்கள் குறைந்து போதல்.
2. இரு கைத்தொழில்களிலும் திருத்தமான தொழிநுட்பங்கள் கைக்கொள்ளப்படுதல்.
3. X கைத்தொழிலில் ஊழியத்தின் உற்பத்தித்திறன் மேம்பாடடைதல்.
4. உற்பத்தி அதிகரிப்பை ஏற்படுத்தும் போது.

35. X,Y என்னும் பண்டங்களை உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தில் அமையச் செலவு மாறாதிருக்கும் நிலைமையை இனங்காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. X உம் Y உம் நெருங்கிய பிரதியீடுகளாகும்.
2. Xஇன் ஓர் அலகினை உற்பத்தி செய்வதற்குத் தியாகம் செய்யப்பட வேண்டிய Y அலகுகளின் எண்ணிக்கை மாறாதிருக்கிறது.
3. இரு பண்டங்களினதும் நிரம்பல் வளையிகள் கிடையான நேர்கோடுகளாக உள்ளன.
4. இரு பண்டங்களினதும் நிலையான செலவுகள் உற்பத்திச் செலவுகளின் முக்கியமான ஒரு பகுதியாக உள்ளன.

36. வளங்களின் உற்பத்தித் திறன் கோட்பாட்டை விளக்கும் கூற்றினை இனங்காண்க.
1. உற்பத்தியில் பயன்படும் காரணிகள் அளவினை அதிகரித்தல்.
2. உள்ளீகள் அதிகரிக்கும் வீதத்திலும் குறைவாக வெளியீடு அதிகரித்தல்.
3. குறிப்பிட்ட வெளியீடொன்றில் பயன்படுத்தப்படும் உள்ளீகளின் அளவு குறைதல்.
4. குறைந்த இலாபமுடைய நடவடிக்கைகளிலிருந்து கூடிய இலாபமுடைய நடவடிக்கைகளுக்கு காரணிகளை மாற்றுதல்.

37. ஒரு பொருளியல் மாணவன் என்ற ரீதியில் நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய கூற்றினை இனங்காண்க.
1. வரட்சிக்காலத்தில் மழை இல்லாததனால் நீர் ஒரு அருமைப் பொருளாகின்றது. அதனால் அது ஒரு பொருளாதாரப் பண்டமாகின்றது.
2. மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைப்பதனால் பாடசாலைப் பாடப்புத்தகங்களை ஒரு பொருளாதாரப் பண்டமாகக் கருதுவதில்லை.
3. உற்பத்திச் சாத்திய எல்லைக்கு இடதுபக்கமாக ஒரு புள்ளியில் சாதனங்களின் நிறைந்த பயன்பாடு காட்டப்படுகின்றது.
4. நகரத்தில் வாழ்கின்றவர்களுக்கு குடிதண்ணீர் ஒரு பொருளாதாரப் பண்டமாகும்.

38. பின்வரும் கூற்றுக்கள் உற்பத்திச் சாத்திய எல்லைகளைப் பற்றி குறிப்பிடுகின்றன. நீர் ஏற்றுக்கொள்ளும் கூற்றினை அடையாளப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உற்பத்திக் காரணிகளின் இருப்பு அதிகரித்தாலே உற்பத்தி எல்லை வலது பக்கமாக அசைவுறும்.
2. ஊழியம் நிறைவுப் பயன்பாட்டிலிருந்தால் உற்பத்திப்புள்ளி எப்பொழுதும் எல்லையில் அமையும்.
3. எல்லையின் சாய்வு உற்பத்தியின் அதிகரிக்கும் அமையச் செலவினை பிரதிபலிக்கின்றது.
4. எல்லையில் உள்ள புள்ளிகள் சமூகத்தினால் தெரிந்து கொள்ளக்கூடிய பொருள்களின் மாற்று அளவுச் சேர்க்கைகளைக் காட்டுகின்றன.

39. நீர் ஏற்றுக்கொள்ளாத கூற்றினை இனங்காண்க.
1. ஒரு திட்டமிடப்படும் பொருளாதாரத்தில் விலைகள், இலாபங்கள், ஆகியவற்றின் பங்களிப்பு இல்லை.
2. திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களாக இருந்தவை, சந்தைப் பொருளாதாரங்களாக மாற்றப்பட்டு வருபவை இக்காலத்தில் நிலை மாற்றப்பொருளாதாரங்களாகக் கருதப்படும்.
3. தொழில் நிறுவனங்களின் தனியார் உடமை முதலாளித்துவத்தின் பிரதான இயல்பாகும்.
4. எந்த ஒரு சமூகமும், எத்தகைய? எவ்வாறு? யாருக்காக? என்ற அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

40. பின்வரும் பொருட்கள், சேவைகள் எதற்கு வழிவந்த கேள்வி காணப்படும்.
1. கணணி தொழிற்படுத்துனரின் சேவைகள்
2. சேட்டுக்கள்
3. பாண்
4. குடும்பப் பிரயாணத்துக்குப் பயன்படுத்தும் மோட்டார் வாகனம்

41. கீழ்வருவனவற்றுள் ஓர் இலவசப் பண்டம் எது?
1. அரசினால் வழங்கப்பட்ட இலவச உணவு
2. குழாய் நீர்
3. இலவச சிங்கப்பூர் பயணம்
4. நீர்
5. நீர்வீழ்ச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. பின்வருவனவற்றுள் நேர்ப் பொருளியல் (Positive Economic) கூற்று எது?

1. பொருளியல் விஞ்ஞானத்திற்கு அடிப்படை அருமை ஆகும்.
2. உணவுப் பங்கீட்டு முறை ஒரு நியாயமற்ற ஒதுக்கீட்டு முறை ஆகும்.
3. சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தில் விலை நிர்ணயிக்கப் படுவது நேர்மையானதாகும்.
4. எந்தவொரு பொருளாதார முறையிலும் என்ன? எப்படி? யாருக்கு? என்ற வினாக்களுக்கு தீர்வு காணவேண்டிய தேவையுண்டு
5. வழிநடத்தப்பட்ட பொருளாதாரம் சந்தைப் பொருளாதாரத்தினை விட சிறப்பாகத் தொழிற்படுகின்றன.

43. கீழே தரப்பட்ட வரைபடங்கள் இரண்டு நாடுகளின் உற்பத்திச் சாத்திய வளையிகளாகும். X,Y பண்டங்களில் A புள்ளியில் உற்பத்தி செய்யும் பொருட்சேர்க்கை முறையே எது?




1. 750, 250
2. 825,350
3. 750,300
4. 250,750
5. 200,800

44. பின்வரும் கூற்றுக்களில் கட்டில்லா பொருளாதாரமொன்றின் பிரதான இயல்பினை விபரிக்கும் கூற்று எது?

1. மாறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளிடையே சாதனப் பயன்பாட்டை சந்தையின் சார்பு விலைகள் தீர்மானித்தல்.
2. கேள்வி நிரம்பல் எனும் முரண்பட்ட சக்திகளினால் விலைகள் நிர்ணயிக்கப்படல்.
3. சந்தைப் பொருளாதாரத்தில் பல்வேறு காரணங்கள் கருதி அரசாங்கம் தலையிடுதல்.
4. நுகர்வோர் பூரண இறைமையையுடையவர்கள்.
5. புறவிளைவுகள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. ஓர் உற்பத்தி இயல்தகவு எல்லை குறித்து நிற்பது

1. தரப்பட்ட இரு காரணிகளைப் பயன்படுத்தி பொருளாதாரம் ஒன்று உற்பத்தி செய்யக்கூடிய இருவேறுபட்ட பண்டங்களின் உச்சமட்ட உற்பத்தியாகும்.
2. தரப்பட்ட காரணிகளைப் பயன்படுத்தி பொருளாதாரம் ஒன்று உற்பத்தி செய்யக்கூடிய இருவேறுபட்ட பண்டங்களின் உச்சமட்ட உற்பத்தியாகும்.
3. பொருளாதாரமொன்றின் கிடைக்கத்தக்க மாற்றுப் பயன்பாடுடைய வளங்களின் அளவைக் காட்டுவதாகும்.
4. பொருளாதாரமொன்றின் தொழில்நுட்பம் மாறாநிலையிலான உச்சமட்ட உற்பத்தியாகும்.
5. சாத்திய எல்லையின் சரிவு உற்பத்தியில் அதிகரித்துச் செல்லும் அமையச் செலவினைக் காட்டுகிறது.

46. நிறைதொழில் மட்ட நிலையின் பண்புகளில் ஒன்றாக அமையாதது எது?

1. உற்பத்தி சாத்திய எல்லையின் மீது உற்பத்திப் புள்ளி காணப்படல்.
2. இரு பொருட்களின் உற்பத்தியையும் அமையச் செலவின்றி ஒரே நேரத்தில் அதிகரிக்க முடியாமை.
3. இரு பொருட்களின் உற்பத்தியையும் அமையச் செலவின்றி ஒரே நேரத்தில் அதிகரிக்க முடிதல்.
4. உச்ச செயற்திறன் வாய்ந்த உற்பத்தியாக காணப்படும்.
5. ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க மற்றைய பொருளின் உற்பத்தியை தியாகம் செய்தல்.

47. மத்திய திட்டமிடல் பொருளாதாரமொன்று எவ்வாறு உற்பத்தி செய்வது? என்ற பிரச்சனைக்கு தீர்வு காண்பது.


1. விலை முறைமையினால் மேற்கொள்ளப்படும்.
2. அரசின் தொழில்நுட்பத் தெரிவால் மேற்கொள்ளப்படும்.
3. அரசின் பங்கீட்டு முறையினால் மேற்கொள்ளப்படும்.
4. திட்டமிடல் முறையினால் மேற்கொள்ளப்படும்.
5. ஊழியச் செறிவினால் மேற்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. உற்பத்திக் காரணிகளின் விலை நிர்ணயம் பற்றிய பிரச்சனையானது ஏதனைக் குறிக்கும்.
   1. என்ன பொருளை உற்பத்தி செய்தல்
   2. வேலையின்மை
   3. அருமைப்பிரச்சனை
   4. எவ்வாறு பங்கீடு செய்தல்.
   5. சாதன ஒதுக்கீடுத் தெரிவுப் பிரச்சனை

49. 50ம் வினாக்களுக்கு பின்வரும் உற்பத்திசாத்திய எல்லையைக் கருத்திற்கொண்டு விடையளிக்க.




49. அடையக்கூடிய புள்ளிகளைக் காட்டும் தொகுதி
   1. A,B,H 2. F,I 3. H,I 4. G,D,I 5. A,C,E,G

50. விரைவான பொருளாதார வளர்ச்சியை எய்தும் வகையில் காணப்படும் உற்பத்திப்புள்ளி.
   1. D 2. B 3. F 4. H 5. C

51. தியாகச் செலவு பூச்சியமாக இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்றல்லாதது.
   1. வளங்கள் பல பயன்பாட்டைக் கொண்டிருக்காத போது
   2. வளங்கள் ஏராளமாக (அருமையற்று) காணப்படும் போது
   3. நிறை தொழில் மட்டம் காணப்படும் போது
   4. குறிப்பிட்ட தேவைக்கு மட்டும் வளங்கள் பயன்படுத்தப்படும் போது.
   5. குறை தொழில் மட்டம் காணப்படும் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. பொருளாதாரத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனையான எவ்வாறு பங்கீடு செய்தல் என்பதன் கருத்து யாது?
   1. உற்பத்தியானது நுகர்வுக்கானதா அல்லது முதலீட்டுக்கானதா என்பதாகும்.
   2. பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தி எவ்வழியில் குடித்தனத் துறையினரிடையே பங்கீடு செய்யப்படுகின்றன என்பதாகும்.
   3. உற்பத்தி தீர்மானத்தின் போது உற்பத்தியாளரின் இலக்கு எது என்பதாகும்.
   4. தொழில் நுட்பம் சார்ந்த ஒரு தெரிவுப் பிரச்சனையாகும்.
   5. வளங்களை எண்ணற்ற மனித தேவைகள் சார்பாக ஒதுக்கிடுதல்.

53. பின்வருவனவற்றுள் பிழையான கூற்றினைத் தெரிவு செய்க?
   1. சாத்திய எல்லையின் நகர்வின் மூலம் வளங்களில் ஏற்படும் மாற்றம் வெளிக்காட்டப்படுகிறது.
   2. அளவுத்திட்டச் சிக்கனமின்மைகள் காரணமாக அதிகரிக்கும் அமையச் செலவு ஏற்படுகிறது.
   3. சந்தர்ப்பச் செலவானது வளங்களின் அருமைத் தன்மையினால் மட்டும் ஏற்படுவதில்லை.
   4. மெய் உலகில் உற்பத்தி சாத்திய எல்லையானது ஏக பரிமாணமானதாக காணப்படுகிறது.
   5. நிறை தொழில் மட்டப் புள்ளிகள் எப்போதும் உற்பத்தி சாத்திய எல்லையில் அமைந்திருப்பதில்லை.


54. பொருளியலானது ஏன் ஒரு சமூக விஞ்ஞானமாக கருதப்படுகிறது?
   1. சமூக, அரசியல், கலாச்சார மாற்றங்களை விபரிப்பதால்
   2. சமூகத்தின் கூறுகளை விளக்குவதால்
   3. பொருளாதாரம் எனும் சமூக அமைப்பினை ஆய்வு செய்வதால்.
   4. ஆய்வுகளை மேற்கொள்வதால்.
   5. அருமையினை விளக்குவதால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. அனைத்து நாடுகளும் எதிர்கொள்ளும் மூலாதாரப் பொருளியல் பிரச்சனை எது?
   1. சூழல் மாசடைதல்  2. பரிமாற்றம்  3. வறுமை
   4. மாற்றுப் பயன்பாட்டினால் எழுகின்ற தெரிவு
   5. வரையறையுடைய வளங்களினால் வரையறுக்கப்பட்ட மனித தேவைகள்

56. கீழேயுள்ள உற்பத்தி சாத்திய எல்லையை கருத்திற் கொள்க.
இங்கு A புள்ளியிலிருந்து B புள்ளிக்கு நகர்வதன் மூலம் வெளிப்படுவது யாது?




   1. வேலையின்மையில் குறைவு.
   2. Y பண்டத்தில் உற்பத்தி குறைவு.
   3. திறமையின்மை அதிகரிப்பு.
   4. பூச்சிய அமையச்செலவு ஏற்படும்.
   5. இரு பண்டங்களிலான உற்பத்தி அதிகரிப்பு.

57. பின்வருவனவற்றுள் நீர் ஏற்றுக் கொள்ளக்கூடிய கூற்று எது?
   1. ஆக்கச் செலவு காணப்படினும் மனித தேவையை பூர்த்தி செய்யாதவையாக இருப்பின் அது பொருளாதாரப் பண்டமன்று.
   2. இலவசப் பண்டங்களுக்கு எல்லையற்ற நிரம்பலுண்டு.
   3. பேனா நண்பி ஒருத்தியால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பேனை பொருளாதாரப் பண்டமன்று.
   4. எவ்வாறு பங்கீடு செய்தல் எனும் பிரச்சனை சகல பொருளாதாரங்களிலும் காணப்படுவதில்லை.
   5. மாற்றுப் பயன்பாடு வளங்களுக்கு ஏற்படாத போது சந்தர்ப்பச் செலவு குறைவடைந்து செல்லும்.

58. பொருளியல் விடயப்பரப்புடன் தொடர்புடைய தேவைகளின் தொகுதி
   1. சுயமரியாதை, குடும்பம்  2. காதல், நட்பு
   3. விழித்தல்  4. சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்
   5. உளவியல் தேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. உற்பத்தித் தொழிற்பாட்டின் தொடர்ச்சித்தன்மையை உறுதிப்படுத்தல் கீழ்வருவனவற்றில் எதனால் ஏற்படும்.

1. மூலதன புனரமைப்பை மேற்கொள்ளல்.
2. மெய்ச் சொத்துக்களை அதிகரித்தல்.
3. தனியார் முதலீடுகளை அதிகரித்தல்.
4. ஆபத்து நட்டங்களை ஏற்றல்.
5. குடித்தன சேமிப்பை உயர்த்தல்.

60. பின்வருவனவற்றில் ஏற்றுக்கொள்ளமுடியாத கூற்று எது?

1. சமவுடைமைப் பொருளாதாரத்தில் நியாயமான இலாபம் உண்டு.
2. வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அமையச் செலவு ஏற்படுவதில்லை.
3. வளங்களை முழுமையாக பயன்படுத்தினால் வருங்காலத் தலைமுறையினருக்கு வளங்கள் இல்லாமல் போகும்.
4. உற்பத்தி சாத்திய வளையிலுள்ள அனைத்துப் புள்ளிகளும் உற்பத்தியின் உச்ச செயற்திறனைக் காட்டுகின்றன.
5. நிறைதொழில் மட்ட நிலையின்போது ஒரு பண்ட உற்பத்தியை அதிகரிக்க மற்றைய பண்ட உற்பத்தியை குறைத்தல் வேண்டும்.

61. குறிப்பிட்டதொரு பண்டம் இலவசப் பண்டமாகவிருந்து, சிக்கனப் பண்டமாக மாற்றமடைவதற்கு பிரதான காரணமாக அமைவது.

1. பயன்பாடு குறைந்து செல்லல்.
2. மாறும் செலவு/ பணச்செலவு ஏற்படல்.
3. மனித தேவைகளை நிறைவேற்றல்.
4. இயற்கையின் கொடை முதல்களாக இருத்தல்.
5. உரிமை கோர முடியாதிருத்தல்.

62. மாற்றுப் பயன்பாட்டை மதிப்பிடப் பயன்படுவது

1. தனிப்பட்ட செலவு
2. மெய்செலவு
3. வெளிவாரிச் செலவு
4. உட்கிடையான செலவு
5. சமூகச் செலவு

63. ஊழிய விளைதிறனை அதிகரிக்கும் காரணி அல்லாதது.

1. முகாமைத்துவம் திறமையாக்கப்படல்
2. தொழில்நுட்ப பின்னடைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மனித மூலதன நடவடிக்கைகள் அதிகரிக்கப்படல்
4. தொழில்நுட்ப முன்னேற்றம்
5. ஊழியத்தின் வினைத்திறன் அதிகரித்தல்.

64. ஒரு நேர்ப் பொருளியல் கூற்று அல்லாதது.
1. 2006இல் பொருளாதார வளர்ச்சி 7.4%
2. ஆசியாவின் ஒரு நாடு இலங்கையாகும்.
3. விலை குறைந்தால் கேள்வி அதிகரிக்கும்.
4. வட்டிவீதம் குறைவடைய சேமிப்பு குறைவடையும்.
5. வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப குறைந்தபட்ச கூலி 10000/= ஆக அதிகரிக்கப்படல் வேண்டும்.

65. மனித தேவைகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாத கூற்று எது?
1. அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படாத நிலை வறுமையாகும்.
2. அனைத்து மனித தேவைகளும் பொருளியல் பரப்பில் ஆராயப்படுகின்றன.
3. மனித தேவைகள், விருப்பங்கள் என்பன எல்லையற்றவை.
4. தேவைகள் பொருள்சார் எண்ணக்கரு மட்டுமன்றி பல்துறை சார்ந்த எண்ணக்கருவாக உள்ளன.
5. மனித தேவைகளை நிறைவேற்றுபவை பண்டங்களாகும்.

66. பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
1. கிணற்று நீர் இலவசமல்லா பண்டமாகும்.
2. ஆற்றங்கரை நீர் இலவசப்பண்டமாகும்.
3. இடம்பெயர்ந்தோருக்கு இலவசமாக வழங்கப்படும் அரிசி பொருளாதாரப் பண்டமாகும்.
4. நீர் எப்போதும் இலவசப் பண்டமாகும்.
5. சூரிய அடுப்புக்குப் பயன்படுத்தப்படும் சூரிய வெளிச்சம் இயற்கைப் பண்டமாகும்.

67. இலங்கையில் ஊழியப்படை பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.
1. 10 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையின் எண்ணிக்கையை கணிப்பதன் மூலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 10 வயதிற்கு மேற்பட்ட வேலை செய்பவர்களின் எண்ணிக்கையை கூட்டுவதன் மூலம்.
3. 10 வயதும் அதற்கு மேற்பட்டதுமான வேலை செய்பவர்களையும் வேலை தேடுவோரையும் கூட்டுவதன் மூலம்.
4. வேலை செய்வோரையும் வேலை தேடுவோரையும் கூட்டுவதன் மூலம்.
5. 15-64 வயது சனத்தொகையிலிருந்து பொருளாதாரமற்ற முயற்சியில் ஈடுபடுவோரை கழிப்பதன் மூலம்.

68. பொருளியல் மாணவர் என்ற வகையில் நீர் ஏற்காத விடயம் எது?
1. பொருளாதாரமல்லாப் பண்டங்களுக்கு எல்லையற்ற நிரம்பல் உண்டு.
2. தேவைகளை விட விருப்பங்கள் அளவற்றவை.
3. மனித வாழ்க்கைக்கு இலவசப் பண்டங்களும் பொருளாதாரப் பண்டங்களும் பயன்படுகின்றன.
4. அருமை மையப் பிரச்சனையாகும்.
5. ஓரலகு உள்ளீட்டுக்கான வெளியீட்டின் அளவு அதிகரித்தல் வளங்களின் உற்பத்தித் திறன் அதிகரிப்பாகும்.

69. ஒரு நியமப் பொருளியல் கூற்றல்லாதது.
1. சென்றவருடம் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி 19.3% ஆக அதிகரித்தது.
2. வறியவர்களுக்கான சமுர்த்தி உதவிக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.
3. 8%-10% வரையிலான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாயின் முதலீட்டை 35%-40% வரை உயர்த்தல் வேண்டும்.
4. நாட்டின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரே நேரத்தில் 100% வேலையற்றோருக்கும் வேலை வழங்கவேண்டும்.
5. இலங்கை போன்ற வளர்முக நாடுகள் தமது உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு சிறந்த முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1. செல்வந்த நாடுகளிலும் செல்வந்தர்களிலும் அருமைப் பிரச்சனை உண்டு.
2. பொருளியலின் மையப்பிரச்சனை அருமையாகும்.
3. நாட்டின் உற்பத்தி இயலளவை வளத்திரட்சி தீர்மானிக்கின்றன.
4. இலங்கை கடலால் சூழப்பட்டுள்ளமையால் மீன்களுக்கு அருமையில்லை.
5. சூரியஒளி, காற்று போன்றவற்றுக்கு அருமை தோன்றுவதில்லை.

71. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பது எதைக் குறிக்கின்றது?

1. உயர் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்.
2. விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல்.
3. இயற்கை வளங்களைப் பாதுகாத்து நிகழ்கால எதிர்கால தலைமுறையினரின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
4. வளங்களை பூரணமாகப் பயன்படுத்தல்.
5. நியாயமற்ற வருமானப் பங்கீட்டினை உருவாக்கல்.

72. சமூகப் பொதுப்பணி மூலதனம் அல்லாதது

1. பாடசாலை
2. வைத்தியசாலை
3. பல்கலைக்கழகம்
4. மின் உற்பத்தி ஆலைகள்
5. கல்வியியல் கல்லூரிகள்

73. பொருளியலில் இயற்கைப் பொருட்களை (Free Goods) விபரிக்கும் சிறந்த முறை.

1. நிலையான அமையச் செலவில் உற்பத்தி செய்யமுடியும் என்பதாகும்.
2. உற்பத்தியில் அருமையான வளங்கள் பயன்படுத்தப் படுவதில்லை என்பதாகும்.
3. நிலத்திலிருந்து நேரடியாக பெறப்படுகிறது என்பதாகும்.
4. அரசினால் இலவசமாக வழங்கப்படும் என்பதாகும்.
5. நுகர்வோருக்கு பூச்சியவிலையில் தாராளமாக கிடைக்கும் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. நவீன உற்பத்தி முறையானது பின்வரும் எவ்வியல்பினை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

1. பணம் பொதுவான பரிமாற்று ஊடகமாக காணப்படல்.
2. உற்பத்தி திறன்மட்டம் உயர்வாக இருத்தல்.
3. தொழிற்பிரிப்பும் சிறப்புத்தேர்ச்சியும் இருத்தல்.
4. சர்வதேச வர்த்தக விருத்தி, நாணயமாற்றுவீத வளர்ச்சி என்பன காணப்படல்.
5. பொருட்கள் நேரடிப்பரிமாற்ற முறையில் இடம்பெறல்.

75. பின்வருவனவற்றில் இலவசப் பொருளுக்கு உதாரணமாகக் கூறக்கூடியது.

1. கப்பல் பயணத்தை மேற்கொள்ள பயன்படும் கடல்நீர்.
2. மின் விசிறியொன்றிலிருந்து பெறப்படும் காற்று.
3. குளத்தில் பெறப்படும் நீர்.
4. நிலவுக்குச் சென்ற விஞ்ஞானி சுவாசிப்பதற்குப் பயன்படுத்தும் வளி.
5. பசு தன் கன்றுக்கு கொடுக்கும் பால்.

76. சரியான கூற்றினை இனங்காண்க.

1. முதலாளித்துவ பொருளாதாரமொன்றில் தனியார் முயற்சி மாத்திரமே உண்டு.
2. முதலாளித்துவப் பொருளாதாரமொன்றில் வளங்களின் ஒதுக்கீடானது சந்தைச் சக்திகளால் திசைப்படுத்தப்படுகின்றது.
3. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அனைத்துப் பண்டங்களும் சிக்கனப்பண்டங்களாகும்.
4. சமதர்மப் பொருளாதாரத்தில் இலாபத்திற்கான செயற்பங்கு எதுவுமில்லை.
5. வளப்பற்றாக்குறை என்பது அனைத்து நாட்டிலும் இயற்கை வளங்களின் கிடைக்கக் கூடிய தன்மைக்கு ஒரு பௌதீக வரையறை உண்டு என்பதாகும்.

77. ஊழிய நிரம்பல் வளையி பின்னோக்கி நகருவதற்கு காரணம் அல்லாதது.

1. தொழிலில் ஏற்படும் சலிப்புத் தன்மை
2. சமூகக் கடமைகளை நிறைவேற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வருமானவரி போன்றவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ளல்.
4. ஊழியம் நோய்வாய்ப்பட்டிருத்தல்.
5. சம்பளமட்டம் அதிகரித்தல்

78. பொருளாதார முறைமைகள் வேறுபடுவதற்கான அடிப்படைக் காரணம்.
1. மனித தேவைகள் அதிகமாக இருத்தல்.
2. அடிப்படைத் பொருளாதாரப் பிரச்சனைகள் பொதுவாக இருத்தல்.
3. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் முறையிலான வேறுபாடு.
4. வருமானப் பகிர்வுப் பிரச்சனை இருத்தல்.
5. வளங்கள் வரையறையுடையவை.

79. உற்பத்தி சாத்திய எல்லையை நகர்த்தாத காரணியாக கொள்ளமுடியாதது எது?
1. சாதன ஒதுக்கீட்டை அதிகரித்தல்.
2. தனியார் மயப்படுத்தலினால் முகாமை திறமையாக்கப்படல்.
3. வேலைக்கு அமர்த்தப்படாத உழைப்பு வேலைக்கு அமர்த்தப்படுதல்.
4. புதிய தொழிலாளர்கள் வேலைகள் ஆட்சேர்க்கப்படுதல்.
5. பொருள் ஒன்றுக்கான கேள்வி குறைதல்.

80. மாறுநிலைப் பொருளாதாரங்கள் எனக் குறிப்பிடத்தக்க நாடு அல்லாதது எது?
1. சீனா 2. பல்கேரியா 3. வடகொரியா
4. செக் குடியரசு 5. ருமேனியா

81. தூய முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முக்கிய அம்சம் பின்வருவனவற்றுள் எது?
1. வருமானப் பரம்பல் சமனாக இருத்தல்.
2. உற்பத்திக் காரணிகள் அரச, பொது உடமையாக இருத்தல்.
3. கட்டுபடுத்தப்படாத சுயாதீனமாக விலைப்பொறிமுறை இயங்குதல்.
4. நுகர்வோர் இறைமை இருத்தல்.
5. புறவாரிக் கிரயம் கருத்திற் கொள்ளப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82 பொருளாதாரப் பண்டம் ஒன்றுக்கான பிரதான தகுதி விதி எது?
1. மனித தேவைகளை நிறைவேற்றுபவை
2. வளப்பயன்பாட்டுச் செலவைக் கொண்டிருத்தல்.
3. விலை செலுத்தவேண்டும் என்பது
4. அருமையற்றிருத்தல்.
5. உரிமை மாற்றப்பட முடியாதிருத்தல்.

83. பொருளாதாரமொன்று வருமான சமத்துவத்தை (ஒப்புரவு) பேண வேண்டியதன் காரணம் என்ன?
1. சென்மதி நிலுவைப் பற்றாக்குறையை சமப்படுத்த
2. வருமானம் கூடியவர்களின் வருமானத்தைக் குறைக்க
3. சமூகநலச் சேவைகளை மேற்கொள்ள
4. சமூக நீதியினூடாக வறுமை நிலையைக் குறைக்க
5. விருத்திமுறை வரியைப் பின்பற்ற

84. நவீன உற்பத்தியின் சிறப்பியல்பு அல்லாதது
1. பணத்தின் உபயோகம் 2. பேரளவு உற்பத்தி
3. சிறப்புத் தேர்ச்சி 4. தனியார் மயமாக்கல்
5. சர்வதேச வர்த்தக விருத்தி

85. பொருளாதார நன்மை கருதி குறித்த ஊழியம் வழங்கும் ஊழிய மணித்தியாலங்கள்
1. ஊழியப்படை 2. ஊழிய வழங்கல்
3. ஊழியப் பிரிப்பு 4. மனித வளம்
5. ஊழியப்படை பங்கு பற்றல் வீதம்

86. காரணித் திரட்டு என்பதன் கருத்து
1. உற்பத்திக் காரணிகளின் நிரம்பலும் உற்பத்தித்திறனும்
2. முயற்சியாண்மையும், உட்கட்டுமான வசதிகளும்.
3. தொழில்நுட்பக் கிடைப்பனவும் முகாமை மட்டமும்
4. காரணி வளப்பேற்றின் அளவு
5. அனைத்தும் சரியானவை

87. மனித மூலதனம் எவ்வாறு மதிப்பிடப்படுகிறது.
1. மனித மூலதனம் = அறிவு + ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மனித மூலதனம் = இறுதி மூலதனம் – ஆரம்ப மூலதனம்

3. மனித மூலதனம் = பொருளாதாரப் பொதுப் பணி மூலதனம் + சமூகப்பொதுப் பணி மூலதனம்

4. மனித மூலதனம் = மெய்ச் சொத்துக்கள்

5. மனித மூலதனம் = ஊழியப்படை – பயிற்றப்படாத தொழிலாளர்

88. முயற்சியாண்மையின் விசேட ஆளுமைப் பண்பாக கருத முடியாதது எது?

1. தலைமை தாங்கும் பண்பு
2. தூரநோக்கு
2. தன்னம்பிக்கை
4. சாதனை படைக்கும் துணிச்சல்
5. காரணிகளை இணைத்தல்

89. பின்வருவனவற்றில் பொருளாதார நோக்கமாக கருதக்கூடியது?

1. நியாயத்துவத்தைக் கடைப்பிடித்தல்
2. பூரண தொழில் நிலையை ஏற்படுத்தல்.
3. பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தியை ஏற்படுத்தல்
4. பொருளாதார உறுதியை ஏற்படுத்தல்
5. மேற்கூறிய யாவும்

90. உழைப்பின் பண்பாக கருத முடியாதது

1. அழியும் தன்மை உடையது
2. உயிர்வாழும் மனித வளம்
3. ஊழிய நிரம்பல் நிலையானது
4. உழைப்பு சக்தி பிரிபடும் தன்மையற்றது
5. பேரம்பேசும் ஆற்றல் உடையது.


91. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. ஆக்க இயல்தகவு எல்லையின் நகர்வின் மூலம் சாதன ஒதுக்கீட்டில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டலாம்.
2. வெளிநோக்கி குவிவாக காணப்படும் சாத்திய வளையியானது அதிகரிக்கும் அமையச் செலவைக் குறிக்கும்.
3. யதார்த்தத்தில் சந்தர்ப்பச்செலவு வளையியானது ஏக பரிமாண வடிவமுடையதாக காணப்படும்.
4. உட்கிடையான செலவு ஏற்படுவதற்கு பிரதான காரணம் அருந்தல் ஆகும்.
5. சமவுடமைப் பொருளாதாரத்தில் பொருட்தட்டுப்பாடுகள், மிகை இருப்புக்கள் இருப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


92. பின்வரும் சாத்திய வளையிக்குரிய சமன்பாட்டை இனங்காண்க.




1. $Y=20-0.2x$
2. $Y=100+0.2x$
3. $Y=100-0.2x$
4. $Y=100-5x$
5. $Y=20+5x$

93. பின்வருவனவற்றுள் இடைநிலைப் பொருட்களைக் கொண்ட தொகுதி எது?
   1. எரிபொருள், பசளை, கிருமிநாசினி
   2. எரிபொருள், பசளை, பெருந்தெருக்கள்
   3. கிருமிநாசினி, துணி, இயந்திரம்
   4. பொறிகள், உழைப்பு, மூலப்பொருட்கள்
   5. விதைகள், கட்டிடம், மின்சாரம்

94. பின்வரும் சாத்திய வளையியின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சிக்கான அமையச்செலவைக் குறிப்பிடுக.




1. OS எனும் அளவிலான நுகர்வுப் பொருள்
2. UV எனும் அளவான மூலதனப் பொருள்
3. ST எனும் அளவான நுகர்வுப் பொருள்
4. RQ எனும் அளவான மூலதனப் பொருள்
5. OT எனும் அளவான நுகர்வுப் பொருட்கள்

95. பின்வருவனவற்றுள் தவறான கூற்று அல்லாதது
   1. அருமையான வளங்களை நிகழ்கால சமூகம் முழுமையாக பயன்படுத்துவதால் எதிர்கால சமூகம் பாதிக்கப்படும்.
   2. நிறை தொழில்மட்ட நிலையினை எய்தியுள்ள ஒரு பொருளாதாரம் சாத்திய வளையிக்கு இடதுபுறப்புள்ளியில் தொழிற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வளங்களின் வினைத்திறனை முகாமை மட்டுமே தீர்மானிக்கிறது.

4. திட்டமிடல் பொருளாதாரத்தில் அதிகரித்த அரசியல் தலையீடே அரசாங்கத் தோல்விக்கு பிரதான காரணியாகும்.

5. விவசாயப் பொருட்களுக்கான சாதன ஒதுக்கீட்டில் ஏற்படும் வீழ்ச்சி சாத்திய எல்லையில் ஒரு இடப்பெயர்ச்சியை ஏற்படுத்தும்.

96. சமூக விஞ்ஞானத்துக்குள் அடங்காத துறை எது?

1. பொருளியல் 2. அரசியல் 3. வரலாறு

4. இந்து நாகரீகம் 5. புவியியல்

97. புறவாரிக் கிரயம் இருப்பின்

1. தனிப்பட்ட கிரயத்தை விட சமூகக் கிரயம் உயர்வாகும்.

2. தனிப்பட்ட நன்மைகளை விட சமூக நன்மைகள் அதிகமாகும்.

3. தனியார் செலவுகளும் சமூகச் செலவுகளும் சமனாக காணப்படும்.

4. கேள்வி, நிரம்பல் கோடுகள் வலது புறம் நகரும்

5. குறை உற்பத்தி ஏற்பட்டு சந்தைத் தோல்வி ஏற்படும்.

98. கட்டில்லா சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசாங்கம் தலையிட காரணமல்லாதது

1. வருமானச் சமமின்மையை நீக்குதல்

2. பொதுப்பண்ட உற்பத்திகளை வழங்கல்

3. வெளிவாரி விளைவுகளை ஒழுங்குபடுத்தல்

4. சட்டத்தையும் ஒழுங்கையும் கையாளல்

5. இலாப நோக்கினை தூண்டுதல்

99. ஒரு சமவுடமைப் பொருளாதாரத்திலிருந்து சந்தைப் பொருளாதாரம் எவ்வகையில் வேறுபடுகிறது.

1. பொருளாதாரத்தில் பெரும்பங்கு அரசுடமையாக இருக்கும்.

2. வருமான ஏற்றத்தாழ்வு ஒப்பீட்டளவில் குறைவாகும்.

3. விலைப் பொறிமுறையே தீர்மானங்களை மேற்கொள்ளும்

4. அரசின் உயர்சேவைக் குழு தீர்மானங்களை மேற்கொள்ளும்

5. தனியார் முயற்சியாண்மையும் அரசாங்க முயற்சியாண்மையும் இணைந்து காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. பின்வருவனற்றுள் எது தொழிற்பிரிப்பின் பிரதான நன்மையாகும்.
1. உற்பத்திச் செலவு குறைதல்
2. நேரச் சிக்கனம் ஏற்படல்
3. தொழிலாளர் திருப்தி கொள்ளல்.
4. பொருட்கள் சேவைகளின் தரம் அதிக்கும்
5. தொழிலாளர் சலிப்புத் தன்மை அடைவர்

101. ஓர் உற்பத்தி சாத்திய வளையியில் இரண்டு பொருட்களினதும் உற்பத்தியையும் ஒரே நேரத்தில் அதிகரிக்க முடியவில்லை. இதனால் விளக்கப்படும் எண்ணக்கரு யாது?
1. வேலையின்மை
2. பங்கீட்டு வினைத்திறன்
3. உற்பத்தி வினைத்திறன்
4. பொருளாதார வளர்ச்சி
5. வேலையின்மை குறைவு

102 வங்கியொன்றின் வைப்பாளர் ஒருவருக்கு பரிசுச் சீட்டிழுப்பில் பரிசொன்று கிடைக்கிறது. இதன் மூலம் 50 இலட்சம் பெறுமதியான வீட்டினை அல்லது 40 இலட்சம் பெறுமதியான வாகனத்தைப் பெறமுடியும். இவர் வாகனத்தைப் பெறுவதற்கான அமையச் செலவு யாது?
1. ரூபா 40 இலட்சம்
2. ரூபா 10 இலட்சம்
3. ரூபா 90 இலட்சம்
4. ரூபா 50 இலட்சம்
5. ரூபா 60 இலட்சம்

103. ஓர் உற்பத்தி சாத்திய வளைகோட்டில் அமைந்துள்ள ஒரு உற்பத்திச் சேர்க்கையானது நுகர்வோர் சுவையைப் காட்டுவதுடன் உரிய வீதத்தில் வளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையையும் காட்டுகிறது. இதன் கருத்து என்ன?
1. பங்கீட்டில் வினைத்திறன்
2. ஊழிய வினைத்திறன்
3. உற்பத்தியில் வினைத்திறன்
4. நிறைதொழில் மட்டம்
5. மூலதன உற்பத்திதிறன்

104. பண்டம் என்பதை எவ்வாறு வரையறுப்பீர்?
1. உற்பத்திச் செலவுடைய பொருட்கள் சேவைகள்
2. அமையச் செலவின்றி கிடைக்கும் பொருட்கள் சேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நுகர்வோர் தேவையினை நிறைவேற்றமுடியாத பொருட்கள் சேவைகள்.

4. நுகர்வோர் தேவையினை திருப்திப்படுத்தும் பொருட்கள் சேவைகள்.

5. அருமையின்றி கிடைக்கும் பொருட்கள் சேவைகள்.


105. அருமை என்ற எண்ணக்கருவை முதலில் முன்வைத்தவர்

1. அடம்ஸ்சிமித்
2. சாமுவெல்ஸ்
4. லெனின்
4. லயனல் றொபின்சன்
5. கெயின்ஸ்

106. பிழையான கூற்றை அடையாளம் காண்க.

1. ஆக்கக் காரணிகள் அனைத்தும் பெறுமான இழப்புக்கு உட்படுகின்றன.
2. இலாபம் நிதிவருட முடிவிலான ஓர் ஒப்பந்தக் கொடுப்பனவாகும்.
3. உயிர்வாழா வளமான நிலம் குறைந்து செல்லும் எல்லை விளைவு விதிக்கு உட்பட்டது.
4. குறிப்பிட்டதொரு நேரத்தில் உள்ள நிலையான சொத்துக்கள் இருப்பு மாறி ஆகும்.
5. தனியார் முதலீடுகளானவை இலாபத்தன்மையாலும் பாதுகாப்புத் தன்மையாலும் தீர்மானிக்கப்படுகின்றன.

107. கீழுள்ள உற்பத்தி சாத்திய வளையியின் படி தவறான கூற்றைத் தெரிக.




1. இரு பண்ட உற்பத்திகளிலும் வேலையின்மையை குறைக்க முடியும்.
2. X பண்ட உற்பத்தியை குறைக்காமல் y பண்ட உற்பத்தியை அதிகரிக்க முடியும்.
3. y பண்ட உற்பத்தியை குறைக்காமல் X பண்ட உற்பத்தியை அதிகரிக்க முடியும்.
4. அமையச் செலவின்றி இருபண்டங்களினதும் உற்பத்தியை அதிகரிக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குறித்தவொரு பண்ட உற்பத்தியை அதிகரிப்பதற்கு மற்றைய பண்ட உற்பத்தியைக் குறைத்தல் வேண்டும்.

108. பெருந்தெரு அமைப்பதற்கான சந்தர்ப்பச் செலவு
1. பாதை, அமைப்பதற்குச் செலவிடப்பட்ட பணம்
2. பாதை அமைக்கப்படாமலிருந்தால் உற்பத்தி செய்திருக்கக் கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு.
3. பாதை அமைப்பதற்காக அரசாங்கம் பெற்ற கடன்.
4. பாதை அமைப்பதற்காக வரிமூலம் சேகரிக்க வேண்டி ஏற்பட்ட அதிகரித்த வரி அளவு.
5. பாதை அமைப்பினால் ஏற்பட்ட உற்பத்திச்செலவு வீழ்ச்சி.

109. கீழே உள்ள உதாரணத்தில் நிறுவன ரீதியான தொழில் பிரிப்பு எவை?
1. சீனி உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் தொழில் பிரிப்பு
2. இந்தியாவின் பருத்தி உற்பத்தி
3. இலங்கையில் மலையக பிரதேசத்தின் தேயிலை உற்பத்தி
4. புத்தளத்தில் தேங்காய் உற்பத்தி
5. அமெரிக்காவின் கணனி உற்பத்தி

110. பொருளியல் மாணவன் என்ற ரீதியில் ஏற்றுக்கொள்ளாத விடை எது?
1. உற்பத்திக்காரணிகள் எல்லாவற்றினதும் நிரம்பல் ஒரே சீராக அதிகரிக்க வாய்ப்பில்லை.
2. நவீன பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி அதிகரிப்பிற்கு தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாகும்.
3. கீழ் உழைப்பு நிலவுகின்ற போது சாத்திய வளையியின் இடது புறத்தில் ஓர் புள்ளியில் உற்பத்தி நடைபெறும்.
4. உற்பத்தியின் போது ஏற்படும் வெளிவாரி விளைவுகளை விலைப் பொறிமுறை மொத்த விலைக்குள் உள்ளடக்குவதில்லை.
5. உள்ளீட்டின் அதிகரிப்பின் வீதமும், உற்பத்தியின் அதிகரிப்பு வீதமும் சமனாக இருப்பதே விணைத்திறன் அதிகரிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111. மூலதன ஆக்கத்திறன் நிதிமூலாதாரம் என்ற வகையில் வியாபார சேமிப்பு என்பதனுள் உள்ளடங்காதவை எவை?
1. பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
2. பங்குப் பத்திரம்
3. தேய்வு ஒதுக்கம்
4. பொது ஒதுக்கம்
5. தொகுதிக் கடன் ஒதுக்கம்

112. சமூகப்பணி மூலதனத் தொகுதி எது?
1. கல்வி. சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து
2. கல்வி. சுகாதாரம், இயந்திரம், பங்கு முதல்
3. கல்வி. சுகாதாரம், கூட்டுறதொழில், போக்குவரத்து
4. கல்வி. சுகாதாரம், வீடமைப்பு, பொழுதுபோக்கு வசதிகள்
5. கல்வி. சுகாதாரம், தொலைத்தொடர்பு, வர்த்தகம்

113 .நிறைதொழில் மட்டத்திலுள்ள பொருளாதாரத்தில் வளங்கள் மேலும் திறமையாக ஒதுக்கிடப்படின்.
1. தலாவருமானம் ஒப்புரவுத் தன்மையுடையதாக பகிரப்படும்.
2. தலாவருமானம் அதிகரிப்பதில்லை
3. வேலையின்மை நிலவும்.
4. மெய்த்தலா வருமானமட்டம் உயரும்.
5. உற்பத்தியாளர் நன்மையடைவர்.

114. பொருளாதாரப் பொதுப்பணி மூலதனம் (பொருளாதார மேந்தலை) என்பதன் சரியான கூற்று எது?
1. நாட்டின் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள்.
2. பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள்.
3. பொருளாதார, சமூகநலனை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள்.
4. வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான முதலீடுகள்.
5. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான முதலீடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. முதலாம் மண்ட நாடுகளுக்கு பொருத்தமற்றது.

1. மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் உயர்வாகும்.
2. கல்வி கற்றோர் வீதம் குறைவாகும்.
3. விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு வளர்ச்சியடைந்திருக்கும்.
4. கீழ் உழைப்பு, வேலையின்மை காணப்படும்.
5. தொழில்நுட்ப பெறுபேற்றுச் சுட்டி அதிகமாகும்.

116. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையுடன் தொடர்புடைய பிழையான கூற்று எது?

1. எவ்வாறு பங்கீடு செய்தல் வருமானப் பகிர்வுப் பிரச்சனையுடன் தொடர்புடையது.
2. வள ஒதுக்கீட்டுப் பிரச்சனை உற்பத்தி தெரிவில் தங்கியுள்ளது.
3. எவ்வாறு உற்பத்தி செய்தல் தொழில்நுட்பத் தெரிவுகளில் தங்கியுள்ளது.
4. வளஅருமை. மாற்றுப்பயன்பாட்டினால் தீர்வுகாண வேண்டிய பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
5. அடிப்படைப் பிரச்சனைகள் நாடுகளுக்கிடையே வேறுபடுவதில்லை.

117. கீழ்வருவனவற்றுள் எதற்கு அமையச்செலவு ஏற்படுவதில்லை.

1. பல்கலைக்கழக மாணவரின் கல்விச் செலவு
2. தேசிய மட்ட விளையாட்டுச் சான்றிதழ்
3. ஆடையை உலரவைக்கப்படும் சூரியஒளி
4. வெளிநாட்டிலிருந்து வருகைதந்து இலங்கையில் பெறும் சூரியக்குளியல்.
5. சொந்த சேமிப்புக்கான சொந்த முதலீடு

118. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் தோன்றுவது?

1. சந்தைப் பொருளாதாரங்களில்
2. அபிவிருத்தி அடையாத பொருளாதாரங்களில்
3. மத்திய திட்டமிடல் பொருளாதாரங்களில்
4. மாறுநிலைப் பொருளாதாரங்களில்
5. எல்லா பொருளாதார முறைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119. மெய்க்கூலி என்பதனால் கருதப்படுவது
1. மொத்தச் சம்பளத்திலிருந்து வரிகளைக் கழித்த பின் கிடைக்கும் சம்பளமாகும்.
2. மொத்தச் சம்பளத்துடன் மாற்றல் பெறுகைகளைக் கூட்டியபின் கிடைக்கும் சம்பளமாகும்.
3. பணரீதியான சம்பளத்தை ஒரு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் சுருக்கிய பின் கிடைக்கும் வருமானமாகும்.
4. ஊழியனொருவன் உண்மையாகப் பெறும் தேறிய சம்பளமாகும்.
5. கடன் தவணைப் பணத்தையும் அதற்குரிய வட்டியையும் கழித்த பின் கிடைக்கும் சம்பளமாகும்.

120. பொருளியலின் ஆய்வு முறை அல்லாதது.
1. நேர்ப் பொருளியல்
2. மெய்ப்பொருளியல்
3. நியமப் பொருளியல்
4. பேரினப் பொருளியல்
5. நலப் பொருளியல்

121. மனித தேவைகளின் தன்மையாக கொள்ளப்படாதது
1. மனித தேவைகள் பலதரப்பட்டவை.
2. மனித தேவைகள் வளர்ச்சியடைந்து செல்பவை
3. விருப்பம், பயன் அடிப்படையில் வேறுபடுகின்றது.
4. நுகர்வினால் தேவை பூர்த்தியடைவது மட்டுமன்றி அதிலிருந்து புதிய தேவைகள் உருவாகின்றன.
5. தேவைகள், விருப்பங்களை விட எண்ணற்றவை.

122. பொருளாதார நலன்கருதி உழைப்பை வழங்கும் பிரிவு அல்லாதோர்
1. தொழில் கொள்வோர்
2. தொழில் தேடுவோர்
3. சம்பளம் பெறுவோர்
4. சுயதொழில் புரிவோர்
5. சம்பளமின்றி குடும்பவருமான செயற்பாட்டில் ஈடுபடுவோர்.

123. சந்தை முறையின் விலைத் தொழிற்பாடு அல்லாதது.
1. தூண்டல் தொழிற்பாடு
2. ஒதுக்கீட்டுத் தொழிற்பாடு
3. விலைத் தொழிற்பாடு
4. பங்கீட்டுத் தொழிற்பாடு
5. சமிக்ஞைத் தொழிற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124. பொதுப்பண்டம் ஒன்றின் இன்றியமையாத இயல்பு ஒன்று.

1. அமையச் செலவிலும் குறைந்த விலையில் விலக்குதல் விதியில் பொதுத் துறையால் வழங்கப்படுவது.
2. சந்தை விலையிலும் குறைந்த விலையில் விலக்குதல் விதியில் தனியார் துறையால் வழங்கப்படுவது.
3. அரசு, தனியார் துறை இரண்டினாலும் சந்தை விலையிலும் குறைந்த விலையில் வழங்கப்படுவது.
4. ஒருவரது நுகர்ச்சியை ஏனையோரால் தடுக்க முடியாதிருத்தல்
5. அமையச் செலவின்றி உற்பத்தி செய்யப்படுவது.

125. உற்பத்தி சாத்திய வளையியானது இடமிருந்து வலமாக மேலிருந்து கீழாக நகருவதற்கு காரணமாக அமைவது.

1. வளங்களின் சிறப்புத்தன்மை
2. வளங்களின் மாற்றுப் பயன்பாடற்ற தன்மை
3. வளங்களின் பிரயோகம்
4. வளங்களின் அருமை
5. வளங்களின் வேறுபாடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு – 02

# சந்தைப் பொருளாதாரம்

01. அரசிக்கான கேள்விக் கோடு கீழ் நோக்கிய சரிவுடையதாகும். அரிசிக்கான கேள்வி விலை நெகிழ்வற்றதாயின் அரிசி விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
   1. அரியின் மிகை நிரம்பலை ஏற்படுத்தும்.
   2. அரிசியின் கேள்வித் தொகையில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
   3. பாணின் மீதான மொத்தச் செலவீட்டில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
   4. கோதுமை மாவின் விற்பனையில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
   5. அரிசியின் மீதான மொத்தச் செலவீட்டில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்

02. இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடத்தில் நிரம்பல் வளையி $S_1$ இலிருந்து $S_2$ ஆக மாற்றமடையக் காரணமாக அமைவது.
   1. குறித்த பொருளின் கேள்வியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.
   2. குறித்த பொருளின் மீது விதிக்கப்பட்ட பெறுமான வீத வரியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியாகும்.
   3. குறித்த பொருளின் மீது விதிக்கப்பட்ட பெறுமான வீத வரியில் ஏற்படும் ஒரு அதிகரிப்பாகும்.
   4. குறித்த பொருளின் மீது விதிக்கப்பட்ட அலகு வரியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியாகும்.
   5. குறித்த பொருளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களின் விலைகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


03. பின்வரும் அட்டவணை சில பொருட்கள் சேவைகளுக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி பற்றிய விபரங்களைத் தருகிறது.

| வகை | கேள்வியின் விலை நெகிழ்ச்சி |
|---|---|
| மோட்டார் கார்கள் | – 1.5 |
| மோட்டார் சைக்கிள்கள் | – 1.0 |
| சினிமா நுளைவுச் சீட்டுக்கள் | – 0.4 |
| தீப்பெட்டிகள் | 0.0 |

தரப்பட்ட தகவல்களின் படி ஒவ்வொரு வகையினதும் விலைகளின் 1% அதிகரிப்பானது விற்பனை வருமானங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவது

1. மோட்டார் கார்கள் தொடர்பில் மட்டுமேயாகும்.
2. மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் மட்டுமேயாகும்.
3. சினிமா நுளைவுச் சீட்டுகள், தீப்பெட்டிகள் தொடர்பில் மட்டுமே யாகும்.
4. சினிமா நுளைவுச் சீட்டுகள் தொடர்பில் மட்டுமே யாகும்.
5. தீப்பெட்டிகள் தொடர்பில் மட்டுமேயாகும்.

04. இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடமானது போட்டிச் சந்தையொன்றில் மீளுக்கான கேள்வி அதிகரிப்பதனால் ஏற்படும் விளைவுகளைக் காட்டுகிறது. இவ் அதிகரிப்பின் காரணமாக.




1. உற்பத்தியாளர் மிகையும் நுகர்வோர் மிகையும் அதிகரிக்கும்.
2. உற்பத்தியாளர் மிகையும் நுகர்வோர் மிகையும் வீழ்ச்சியடையும்.
3. உற்பத்தியாளர் மிகை வீழ்ச்சியடையும் நுகர்வோர் மிகை அதிகரிக்கும்.
4. உற்பத்தியாளா மிகை அதிகரிக்கும் நுகர்வோர் மிகை மாறாதிருக்கும்.
5. உற்பத்தியாளர் மிகையிலோ நுகர்வோர் மிகையிலோ மாற்றமேற்படா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பொருளியல் வாடகை என்பது
1. நிலத்தைப் பயன்படுத்துவதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் ஒரு கொடுப்பனவாகும்.
2. உற்பத்திக் காரணிகளை அவற்றின் தற்போதைய வேலை வாய்ப்பில் தொடர்ந்து வைத்திருக்கும் பொருட்டு செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகளாகும்.
3. அரசாங்க சேவைகளை பயன்படுத்துதற் பொருட்டு மத்திய அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ஒரு கொடுப்பனவாகும்.
4. வளங்களின் அமையச் செலவின் பொருட்டு வழங்கப்படும் ஓர் இழப்பீடாகும்.
5. உற்பத்திக் காரணிகளை அவற்றின் தற்போதைய வேலைவாய்ப்பில் வைத்திருக்க அவசியமான கொடுப்பனவை விட மேலதிகமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளாகும்.

06. உற்பத்தியில் உள்ளார்ந்த செலவுகள் (implicit costs) இருக்குமாயின்
1. கணக்கியல் இலாபம் பொருளியல் இலாபத்தை விட உயர்வாக இருக்கும்.
2. பொருளியல் இலாபம் எப்பொழுதும் பூச்சியமாக இருக்கும்.
3. பொருளியல் இலாபம் கணக்கியல் இலாபத்தை விட உயர்வாக இருக்கும்.
4. கணக்கியல் இலாபம் எப்போதும் பூச்சியமாக இருக்கும்.
5. பொருளியல் இலாபமும் கணக்கியல் இலாபமும் சமனாகும்.

07. நுகர்வோர் ஆய்வொன்று மதுசாரக் குடிவகைகளின் விலையில் ஏற்படும் 20% அதிகரிப்பு செல்வந்தர்களின் மதுசாரக் குடிவகை நுகர்வை 3% இனாலும் வறியவர்களின் நுகர்வை 10% இனாலும் வீழ்ச்சியடையச் செய்யும் எனக் கண்டறிந்தது இதிலிருந்து பெறப்படும் முடிவின்படி
1. வறியவர்களை விட செல்வந்தர்களே மதுசாரக் குடிவகைகள் மூலம் அதிகம் திருப்தியடைகின்றனர்.
2. செல்வந்தர்களுக்கு மதுசாரக் குடிவகை ஒரு இழிவுப் பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


3. வறியவர்களுக்கு மதுசாரக் குடிவகை ஒரு சாதாரண பொருளாகும்.
4. வறியவர்களின் கேள்வி விலை நெகிழ்வுள்ள அதே வேளை செல்வந்தர்களின் கேள்வி விலை நெகிழ்வற்றதாகும்.
5. வறியவர்களினதும் செல்வந்தர்களினதும் கேள்வியானது விலை நெகிழ்வற்றதாகும்.

08. பின்வரும் தகவல்கள் நிறைபோட்டி நிறுவனமொன்றின் குறுங்கால மொத்த மாறும் செலவு அட்டவணை ஒன்றுக்குரியன ஆகும்.


| வெளியீடு | மொத்தமாறும் செலவு (ரூ) |
|---|---|
| 1 | 5 |
| 2 | 20 |
| 3 | 40 |
| 4 | 70 |
| 5 | 110 |
| 6 | 160 |
| 7 | 220 |

5வது அலகு வெளியீட்டின் எல்லைச் செலவு
1. ரூபா 30 ஆகும்
2. ரூபா 40 ஆகும்.
3. ரூபா 55 ஆகும்
4. ரூபா 90 ஆகும்
5. ரூபா 110 ஆகும்

09. கீழே தரப்பட்டுள்ள வரைபடங்கள் X பண்டத்தின் நிரம்பலில் ஏற்படும் ஒரு நகர்வு Y பண்டத்தின் கேள்வியில் எவ்வாறு நகர்வு ஏற்படுகின்றது என்பதைக் காட்டுகின்றன.



X பண்டத்தின் கேட்கப்படும் தொகையும் நிரம்பப்படும் தொகையும்



Y பண்டத்தின் கேட்கப்படும் தொகையும் நிரம்பப்படும் தொகையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் சோடிகளுள் எது x,y பண்டங்களை பெருமளவுக்கு குறிப்பதாகவிருக்கும்.

1. தேயிலையும் கோப்பியும்
2. பஸ் பயணமும் ரயில் பயணமும்
3. அரிசியும் கோதுமை மாவும்
4. சீனியும் கருப்பட்டியும்
5. ரயர்களும் டியூப்களும்.


10. பின்வரும் அட்டவணை A,B,C,D,E என்ற ஐந்து வேறுபட்ட பொருட்களுக்கு இருவேறு வருமான மட்டங்களில் ஒரு வீட்டுத் துறையினது கேள்வியைக் காட்டுகின்றது.

| வருமானம் | கேட்கப்பட்ட பண்ட அலகுகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E |
| ரூ 10000 | 200 | 200 | 200 | 200 | 200 |
| ரூ 12000 | 200 | 240 | 260 | 280 | 300 |

மேலே தரப்பட்டுள்ள வருமான வீச்சில் எந்தப் பண்டத்திற்கு வீட்டுத்துறையின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி ஒருமையாகவிருக்கும்?

1. A 2. B 3. C 4. D 5. E

11. கீழே தரப்பட்டுள்ள வரைபடம் X பண்டத்தின் கேட்கப்படும் தொகைக்கும் வருமானத்திற்குமுள்ள தொடர்பைக் காட்டுகிறது.



X பண்டத்தின் கேட்கப்படும் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி வரைபடம் X பண்டம் பின்வருவனவற்றுள் எந்த வகையானது என்பதைக் காட்டுகிறது?

1. ஒரு இழிவுப் பண்டம்
2. ஒரு அத்தியாவசியப் பண்டம்
2. ஒரு நியமப் பண்டம்
4. ஒரு ஆடம்பரப் பண்டம்
5. ஒரு இணைப் பண்டம்

12. ஒவ்வொரு மாதமும் ஒரு விவசாயி (தேனீ வளர்ப்போன்) 10 போத்தல் தேனை ஒவ்வொன்றும் ரூபா 400இற்கு விற்கின்றான். ஒவ்வொரு மாதமும் அவன் போத்தல்களுக்காகவும் வேறு பொருட்களுக்காகவும் ரூ 200உம், ஊழியத்துக்காக ரூ 1000உம் செலுத்துகிறான். அத்துடன் மாதமொன்றிற்கு ரூ 500இற்கு வாடகைக்கு விடக்கூடிய தனது சொந்த நிலத்தையும் தனது பண்ணையில் வேலை செய்யாது வேறெங்காவது வேலை செய்திருப்பானாயின் மாதமொன்றிற்கு ரூ 1300ஐ உழைத்திருக்கக் கூடிய தனது நேரத்தையும் கையாளுகின்றான். அவனது மாதாந்த சிக்கன இலாபம் யாது?

1. ரூ 4000 2. ரூ 2800 3. ரூ 2300 4. ரூ 1300 5. ரூ 1000

13. நிறைபோட்டி நிறுவனமொன்றின் எல்லை வருவாய் எப்பொழுதும்.

1. சராசரி மொத்தச் செலவிற்கு
2. பண்டத்தின் விலைக்கு
3. சராசரி நிலையான செலவிற்கு
4. மொத்த வருவாயிற்கு
5. சராசரி மாறும் செலவிற்கு

சமமானதாகவிருக்கும்.

14. பின்வரும் தரவுகள் குறிப்பிட்டவொரு காலப்பகுதியில் X பண்டத்தின் சந்தைக் கேள்வி, நிரம்பல் பட்டிலைக் காட்டுகின்றன.

| தலா அலகு விலை (ரூ) | கேட்கப்படும் தொகை (அலகுகள்) | நிரம்பல் செய்யப்படும் தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 80 | 500 | 900 |
| 70 | 600 | 800 |
| 60 | 700 | 700 |
| 50 | 800 | 600 |
| 40 | 900 | 500 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் இப்பொழுது X பண்டத்தின் உற்பத்தியாளருக்கு அலகொன்றிற்கு ரூ 20 மானியத்தை அறிமுகம் செய்யுமாயின் புதிய சமநிலை விலை எதுவாகவிருக்கும்?

1. ரூ 80 2. ரூ 70 3. ரூ 60 4. ரூ 50 5. ரூ 40

15. கீழே தரப்பட்டுள்ள வரிப்படம் கோதுமைமாவுக்கான நிரம்பல் வளையியையும் (NS) கேள்வி வளையியையும் (TD) காட்டுகிறது.




பின்வரும் பரப்புகளும் எது உற்பத்தியாளர் மிகையைக் காட்டுகிறது.

1. NTE 2. TPE 3. NPE 4. NEQO 5. OPEQ

16. இழிவுப் பண்டம் ஒன்றிற்கான கேள்வியின் வருமான நெகிழ்ச்சி

1. பூச்சியமாகும் 2. நெகிழ்வற்றது 3. அலகு நெகிழ்ச்சியாகும்
4. எதிர்க்கணியமானது 5. நேர்க்கணியமானது

17. உற்பத்தியாளரொருவர் மின்குமிழ் ஒன்றின் விலையை 5% இனால் குறைக்கிறார். அதன் விளைவாக மின்குமிழ்களின் விற்பனை அளவு 2% இனால் உயர்வடைகிறது. மின்குமிழ்களுக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி யாது?

1. -0.4 2. -0.8 3. -2.5 4. -4.0 5. -10.0

18. உற்பத்திப் பொருளொன்றுக்கான கேள்வியானது விலை நெகிழ்ச்சி கொண்டதாயின் மொத்த வருமானம்.

1. விலை உயர்த்தப்படும் பொழுது குறையும்
2. விலை மாற்றத்தின் திசை எவ்வாறமையினும் அதிகரிக்கும்.
3. விலை உயர்த்தப்படும் பொழுது அதிகரிக்கும்.
4. விலை மாற்றம் எவ்வாறமையினும் மாற்றமடையாது இருக்கும்.
5. விலை குறைக்கப்படுமாயின் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பண்டமொன்றின் மீது அரசாங்கம் ஒரு இழிவு விலையினை விதிக்குமாயின்
   1. அதன் விளைவாக மிகை நிரம்பல் ஏற்படும்
   2. அதன் விளைவாக மிகைக் கேள்வி ஏற்படும்
   3. சமநிலை விலையில் வியாபாரம் நடைபெறும்
   4. வணிக நிறுவனங்கள் இவ்விலையில் தாம் விரும்பும் அளவினை விற்கும்.
   5. நுகர்வோர் மிகை அதிகரிக்கும்.

20. "பண்டம் X இன் விலை வீழ்ச்சியடையுமாயின் அப் பண்டத்தின் மீதான மொத்தச் செலவீடு உயரும் ஆனால் வருமானம் வீழ்ச்சியடையுமாயின் அச் செலவீடு குறையும்"
பின்வருவனவற்றிலிருந்து மேற்போந்த கூற்றுக்குப் பொருத்தமான சரியான சேர்க்கையை இனங்காண்க.

| பண்டம் X இற்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி | பண்டம் X இற்கான கேள்வியின் வருமான நெகிழ்ச்சி |
|---|---|
| 1. நெகிழ்ச்சியுடையது | எதிர்க்கணியமானது |
| 2. நெகிழ்ச்சியுடையது | நேர்க்கணியமானது |
| 3. நெகிழ்ச்சியற்றது | எதிர்க்கணியமானது |
| 4. நெகிழ்ச்சியற்றது | நேர்க்கணியமானது |
| 5. அலகு நெகிழ்ச்சியாகவிருக்கும் | நேர்க்கணியமானது |

21. பின்வரும் உற்பத்திக் காரணிகளுள் எது குறுகிய கால ஓட்டத்தில் நிலையானதாகக் கருதப்படலாம்?
   1. தாபனத்தின் இட அமைவு
   2. ஊழிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை
   3. நுகரப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை
   4. உபயோகிக்கப்படும் காகிதாதிகளின் அளவு
   5. உபயோகிக்கப்படும் மூலப் பொருட்களின் அளவு

22. நுகர்வோன் கேள்வி வளையியொன்றினை வரையும் பொழுது பின்வருவனவற்றுள் எது மாறாததாகக் கொள்ளப்படுவதில்லை?
   1. கவனத்திலெடுக்கப்படும் பொருளின் விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. துணை (இணை)ப் பொருட்களின் விலைகள்
3. பதிலீட்டுப் பொருட்களின் விலைகள்
4. உற்பத்திக் காரணிகளின் விலைகள்
5. நுகர்வோனது வருமானம்

23. கணனிகளின் விலைகள் வீழ்ச்சியடைதல் மென்பொருள் சந்தையில் எவ்வித தாக்கத்தைக் கொண்டிருக்கும்?
1. கேள்வி அதிகரிப்பு
2. நிரம்பல் அதிகரிப்பு
3. கேள்வி குறைதல்
4. நிரம்பல் குறைதல்
5. கேட்கப்படும் அளவில் அதிகரிப்பு

24. நெகிழ்ச்சியுள்ள கேள்வியையும் நெகிழ்வற்ற நிரம்பலையும் கொண்ட ஒரு சந்தையின் மீது வரியொன்று விதிக்கப்படுமாயின்
1. வரியின் பெருமளவு பளுவை நுகர்வோரே சுமப்பர்
2. வரியின் பளுவை நுகர்வோர் மட்டுமே சுமப்பர்
3. வரியின் பெருமளவு பளுவை விற்போரே சுமப்பர்
4. வரியின் பளுவானது நுகர்வோர், விற்போர் என்போரிடையே சமமாகப் பகிரப்படும்.
5. வரியின் பளு எவ்வாறு பகிரப்படுமென்பதை நிர்ணயிக்க இயலாது.


25. பொருளொன்றினது விலையிலேற்படும் ஒரு மாற்றம் மொத்த வருமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடில்.
1. அப்பெருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகும்.
2. அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியற்றதாகும்.
3. விலைமாற்றத்தால் நுகர்வோர் பெருமளவிற்கு ஈர்க்கப்பட மாட்டார்கள்.
4. அப்பொருளுக்கான கேள்வி அலகு நெகிழ்ச்சி கொண்டதாகும்.
5. அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாகும்.

26. கேள்வி வளையியில் மாற்றமின்றியே பின்வரும் காரணிகளும் எது நெல்லுக்கான விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தவல்லது?
1. நெல் விவசாயிகளினது உற்பத்தித் திறனில் ஓர் அதிகரிப்பு.
2. நுகர்வோரது மெய்வருமானத்தில் ஓர் அதிகரிப்பு
3. விவசாயத் தொழிலாளரின் கூலிகளில் ஓர் அதிகரிப்பு
4. நெற்சாகுபடிக்கான பசளை மானியத்தில் ஓர் அதிகரிப்பு.
5. நெல்லைப் பிரதான உணவாகக் கொண்ட மக்கட் தொகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


27. பின்வரும் வரிப்படத்தில் காட்டியது போன்று இலங்கையில் பால் உற்பத்திக்கு உதவுவதற்காக அரசாங்கம் ஒரு மானியத்தைப் பிரகடனம் செய்வதாகக் கருதுக.




பின்வருவனவற்றுள் எது அரசாங்கத்திற்கான மானியச் செலவைக் குறித்து நிற்கும்?

1. $P_2P_3MY$
2. $OP_2YQ_2$
3. $OP_1XQ_2$
4. $OP_3YQ_2$
5. $P_1P_3MX$

28. பின்வரும் வரிப்படத்தில் காட்டியது போன்று, நெல்லுக்கான சந்தை இப்பொழுது $S_1S_1$ என்ற நிரம்பல் வளையியிலும் D என்ற கேள்வி வளையிலும் E புள்ளியில் சமநிலையில் இருக்கின்றது. 1ஆம் வருடத்தில் அரசாங்கமானது $OP_2$ என்ற உத்தரவாத இழிவு விலையைப் பிரகடனம் செய்து, இதனால் ஏற்படும் நெல்லின் மிகை உற்பத்தியைக் கொள்வனவு செய்ய முன்வருகின்றது. 2 ஆம் வருடத்தில் நெல் உற்பத்தியானது $S_2S_2$ என இடம் பெயர்ந்த நிரம்பல் வளையியினால் காட்டப்படும் அளவிற்கு உயருகின்றது.




2ஆம் வருடத்தில் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கொள்வனவு செய்யவேண்டிய நெல்லின் அளவு யாது?

1. $Q_3$ இலிருந்து $Q_4$  2. $Q_2$ இலிருந்து $Q_3$  3. $Q_2$ இலிருந்து $Q_4$
4. $Q_1$ இலிருந்து $Q_3$  5. $Q_1$ இலிருந்து $Q_4$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. வருமானங்கள் குறையும் பொழுது A என்ற பொருளின் கேட்கப்படும் அளவு அதிகரிக்குமாயின் அப்பொருள்

1. ஓர் இணைப்பொருளாகும்
2. ஒரு பதிலீட்டுப் பொருளாகும்
3. ஒரு சாதாரணப் பொருளாகும்
4. ஓர் இழிவுப் பொருளாகும்.
5. ஒரு நெகிழ்ச்சியற்ற பொருளாகும்

30. நிறைபோட்டியில் தனிப்பட்ட ஒரு நிறுவனம் எதிர்நோக்கும் கேள்வி நெகிழ்ச்சியானது

1. பூச்சியமாகவிருக்கும், ஏனெனில், அந்நிறுவனம் தனித்துவம் வாய்ந்த ஒரு பொருளை உற்பத்தி செய்கிறது.
2. பூச்சியமாகவிருக்கும். ஏனெனில், ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்களை ஏனைய பல நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன.
3. எல்லையற்றதாகவிருக்கும், ஏனெனில், அந்நிறுவனம் தனித்துவம் வாய்ந்த ஒரு பொருளை உற்பத்தி செய்கின்றது.
4. எல்லையற்றதாகவிருக்கும், ஏனெனில், ஓரினத்தன்மை கொண்ட பொருட்களை ஏனைய பல நிறுவனங்களுக்கும் உற்பத்தி செய்கின்றன.
5. பூச்சியத்திற்கும் எல்லையற்ற நெகிழ்ச்சிக்கும் இடைப்பட்டதாக இருக்கும், ஏனெனில், அத்தொழிலில் பல நிறுவனங்கள் இருக்கின்றன.


31. நிறுவனமொன்று எவ்வெளியீட்டு மட்டத்தில் எப்பொழுதுமே அசாதாரண இலாபத்தைச் சம்பாதிக்கும்?

1. எல்லை வருமானம் எல்லைச் செலவிற்கு சமமாகவிருக்கும் போது
2. மொத்தச் செலவு மொத்த வருமானத்திலும் கூடுதலாகவிருக்கும் போது.
3. சராசரி வருமானம் சராசரிச் செலவிலும் உயர்வாகவிருக்கும் போது
4. சராசரி மாறும் செலவு சராசரி வருமானத்திலும் குறைவாக விருக்கும் போது.
5. சராசரிச் செலவு வீழ்ச்சியடையும் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. இங்கு தரப்பட்டுள்ள வரிப்படத்தில் சந்தைக் கேள்வியானது எல்லா விலைகளிலுமே நிரம்பலிலும் பார்க்கக்குறைவாக உள்ளது. சமூகம் OQ அலகுகளைக் கொள்வனவு செய்யவேண்டுமென அரசாங்கம் விரும்புமாயின் அது.




1. $OP_1$ இலும் பார்க்க விலை உயரக் கூடாதென விதிக்கவேண்டும்.
2. நிரம்பலாளர் $OP_4$ விலையை விதிக்க அனுமதிக்கவேண்டும்.
3. விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_2P_3$ உற்பத்தி மானிய மளிக்கவேண்டும்.
4. விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_1P_3$ உற்பத்தி மானிய மளிக்கவேண்டும்.
5. விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_1P_4$ உற்பத்தி மானிய மளிக்கவேண்டும்.

33. கேள்வி விதிக்கு அமைய

1. ஒரு பொருளினது விலைக்கும் அதன் கேட்கப்படும் அளவிற்குமிடையே நேர்க்கணியத் தொடர்புண்டு.
2. ஒரு பொருளினது விலைக்கும் அதன் கேட்கப்படும் அளவிற்குமிடையே எதிர்க்கணியத் தொடர்புண்டு.
3. கேள்வியிலேற்படும் அதிகரிப்பு விலை உயர்விற்கும் அதிகரித்த அளவிற்கும் இட்டுச்செல்லும்.
4. கேள்விலேற்படும் தேய்வு குறைந்தவிலைகளுக்கும் குறைந்த அளவிற்கும் இட்டுச் செல்லும்.
5. மேலே தரப்பட்ட 3. 4 இரண்டுமே சரியானவை

34. ஒரு சாதாரண பண்டத்திற்கான கேள்வி வளையியானது எப்போது இடப்புறமாக நகரும்?

1. நுகர்வோரது வருமானங்கள் அதிகரிக்கும் பொழுது
2. அப்பண்டத்தின் விலை அதிகரிக்கும் பொழுது
3. நிரப்பு பண்டங்களினது விலைகள் அதிகரிக்கும் பொழுது
4. நிரப்பு பண்டங்களின் மீதான விளம்பரச் செலவுகள் அதிகரிக்கும் பொழுது.
5. அப்பண்டத்திற்கான தேர்வு அதிகரிக்கும் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. தேங்காய்க்கான சந்தைக் கேள்விச்சார்பு பின்வருமாறு

$$Qd = 300 - 6P$$

தேங்காய்க்கான சந்தை நிரம்பல் சார்பு பின்வருமாறு

$$Qs = 20 + 8P$$


தேங்காயின் விலை ரூபா 15 ஆகவிருக்குமாயின், தேங்காய்க்கான சந்தையில்

1. சமநிலை காணப்படும்
2. மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை உயரும்
3. மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை குறையும்
4. மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை உயரும்
5. மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை குறையும்

36. X பண்டத்தின் விலை ரூபா 50 இலிருந்து ரூபா 30 ஆகக் குறையும் பொழுது, Y பண்டத்திற்கான கேள்வி 1000 அலகுகளிலிருந்து 1200 அலகுகளாக அதிகரிக்கின்றது. X க்கும் Yக்குமிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி யாது?

1. 0.5 2. −0.5 3. 2.0 4. −2.0 5. 2.5

37. கீழேயுள்ள வரிப்படம் சமநிலையிலிருந்து ஒரு நுகர்வோர் பண்டத்திற்கான சந்தையைக் காட்டுகின்றது.





இப்பண்டத்தின் உற்பத்தியாளருக்கு மானியம் வழங்கும் அரசாங்கத்தினது ஒரு தீர்மானம் நன்மையளிப்பது,

1. நுகர்வோருக்கு மட்டும்
2. உற்பத்தியாளருக்கு மட்டும்
3. நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் சமமாக.
4. உற்பத்தியாளருக்கும் மேலாக நுகர்வோருக்கு
5. நுகர்வோருக்கு மேலாக உற்பத்தியாளருக்கு

38. பண்டமொன்றின் உற்பத்தியின்மீது அரசாங்கம் ஒரு குறித்த நேரில் வரியை விதிக்கும் பொழுது, சந்தை நிரம்பல் வளையி SS இலிருந்து $S_1S_1$க்கு நகருவதைப் பின்வரும் வரிப்படம் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உற்பத்தியாளர் மீதும் நுகர்வோர் மீதும் வரியினது தாக்கம் எவ்வளவாகவிருக்கும்?

1. நுகர்வோர் ரூபா 1200ஐயும் உற்பத்தியாளர் ரூபா 400ஐயும் தாங்கிக்கொள்வர்.
2. நுகர்வோர் ரூபா 800ஐயும் உற்பத்தியாளர் ரூபா 1200 ஐயும் தாங்கிக்கொள்வர்.
3. நுகர்வோர் ரூபா 400ஐயும் உற்பத்தியாளர் ரூபா 1200ஐயும் தாங்கிக்கொள்வர்.
4. நுகர்வோர் ரூபா 800ஐயும் உற்பத்தியாளர் ரூபா 400 ஐயும் தாங்கிக்கொள்வர்.
5. நுகர்வோர் ரூபா 400 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 800 ஐயும் தாங்கிக்கொள்வர்.

39. ஒரு பொருளுக்கான கேள்வி விலை நெகிழ்ச்சியற்றதாக விருக்குமாயின் மொத்த வருமானம்
   1. விலை உயர்த்தப்பட்டால் குறையும்
   2. விலை மாற்றம் எத்திசையில் ஏற்பட்டாலும் அதிகரிக்கும்.
   3. விலை குறைக்கப்பட்டால் அதிகரிக்கும்.
   4. எவ்வித விலைமாற்றம் ஏற்பட்டாலும் மாறாதிருக்கும்.
   5. விலை உயர்த்தப்பட்டால் அதிகரிக்கும்.

40. ஒரு நிறுவனத்தின் நிலையான செலவுகள் இரட்டிக்குமாயின் எல்லைச் செலலவு
   1. இரட்டிக்கும் 2. இருமடங்கிற்கும் மேலாக அதிகரிக்கும்.
   3. மாறாதிருக்கும் 4. 50 வீதத்தால் அதிகரிக்கும்.
   5. 100 வீதத்தால் குறையும்.

41. சாதாரண இலாபம் என்பது எவ்வகை வருமான விகிதமாக வரையறுக்கப்படும்?
   1. நிறுவனம் ஒன்றின் ஒரு சில வருட காலப்பகுதிக்கான வருமான விகிதம்
   2. தொழிலொன்றின் ஒரு சில வருட காலப்பகுதிக்கான வருமான விகிதம்.
   3. வளங்களை அவற்றின் இன்றைய உபயோகத்தில் தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்குத் தேவைப்படும் வருமான விகிதம்.
   4. நிறுவனமொன்றினைச் சமநிலையில் வைத்துக்கொள்வதற்குத் தேவைப்படும் வருமான விகிதம்.
   5. எல்லைச் செலவு வருமானத்திற்குச் சமமாகவிருக்கும் புள்ளியில் உற்பத்தி செய்யும் பொழுது உழைக்கப்படும் வருமான விகிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. நிறைபோட்டி நிறுவனமொன்று இலாபத்தை உச்சப்படுத்துவது

1. எல்லைச் செலவு விலைக்குச் சமமாகவும், விலை ஆகக் குறைந்த சராசரி மாறும் செலவுக்கு மேலாகவும் இருக்கும் பொழுது.
2. எல்லைச் செலவு விலைக்குச் சமமாகவும், விலை ஆகக் குறைந்த சராசரி நிலையான செலவுக்கு மேலாகவும் இருக்கும் பொழுது.
3. மொத்தவருமானம் உச்சமாகவிருக்கும் பொழுது
4. சராசரி மாறும் செலவு ஆகக் குறைவாகவிருக்கும் பொழுது
5. சராசரி மொத்தச் செலவு ஆக்க்குறைவாகவிருக்கும் பொழுது.

43. பின்வருவனவற்றுள் எது ஒரு நிறைபோட்டித் தொழிலின் பண்பன்று?

1. கீழ் நோக்கிச் சரியும் தொழில் கேள்வி வளையி
2. தனிப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பூரண நெகிழ்ச்சி கொண்ட கேள்வி வளையி
3. ஒவ்வொரு நிறுவனமும் தனது வெளியீட்டு மட்டத்தை நிர்ணயித்தல்.
4. ஒரளவு வேறுபடுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்கள்
5. தொழிலினது மொத்த நிரம்பலில் ஒவ்வொன்றும் ஒரு சிறு விகிதாசாரத்தை நிரம்பல் செய்யும் பல நிறுவனங்கள் இருத்தல்.

44. தனியுரிமைப் போட்டியிலிருக்கும் நிறுவனமொன்று நீண்ட காலத்தில்

1. பூரண நெகிழ்ச்சி கொண்ட கேள்வி வளையியை எதிர்நோக்கும்.
2. சராசரி மொத்தச் செலவை (ATC) ஆகக்குறைந்ததாக்கம் அளவிலும் பார்க்கக் கூடியதொகையை உற்பத்தி செய்யும்.
3. சராசரி மொத்தச் செலவை ஆகக்குறைந்ததாக்கும் அளவிலும் பார்க்கக் குறைவான தொகையினை உற்பத்தி செய்யும்.
4. சராசரி மொத்தச் செலவை ஆகக்குறைந்ததாக்கும் தொகையினை உற்பத்தி செய்யும்.
5. சராசரி இலாபத்திலும் பார்க்கக்கூடிய இலாபத்தை உழைக்கும்.
6. சராசரி இலாபத்திலும் பார்க்கக் கூடிய இலாபத்தை உழைக்கும்

45. நிறைபோட்டியில் நிறுவனம் ஒன்று நெடுங்காலத்தில் சாதாரண இலாபத்தை மட்டுமே உழைக்க முடியுமென நாம் கூறுவது ஏன்?

1. நிறுவனம் ஓரினத் தன்மையான பண்டத்தை உற்பத்தி செய்வதால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தொழிலனுள் பிரவேசிப்பதற்கும், தொழிலை விட்டு வெளியேறுவதற்கும் பூரண சுதந்திரம் காணப்படுவதால்.
3. நிறுவனம் விலையினை ஏற்பவனாக காணப்படுவதால்
4. தொழிலில் பெருமளவு நிறுவனங்கள் உள்ளதால

46. பொருளாதாரத்தில் இழிவுப்பண்டம் என வரைவிலக்கணப் படுத்தப்படும் பொருளொன்று கொண்டுள்ள இயல்பு யாது
1. விலை வீழ்ச்சியடையும் போது கேட்கப்படும் தொகையானது மாற்றமற்று இருத்தல்
2. வருமானத்திலான குறைவின் போது கேள்வி அதிகரித்தல்
3. விலை அதிகரிக்கும் போது கேட்கப்படும் தொகை வீழ்ச்சியடைதல்
4. விலைஅதிகரிக்கும் போது நுகர்வோர் வேறு பண்டங்களுக்கு மாறிக்கொள்ளல்

47. பொருளியலில் அதிஇழிவுப் பொருள் எனக் கொள்ளப்படும் பொருளின் பிரதான இயல்புகளை இனங்காணல்
1. ஒரு நுகர்வோன் அவனுடைய வருமானம் கூடுமிடத்தில் பொருளை பெருமளவு குறைத்து கொள்வனவு செய்கின்றான்
2. ஒரு நுகர்வோன் சந்தைவிலை குறையுமிடத்து அப்பொருளை குறைத்து வாங்குகின்றான்.
3. போசாக்கு குறைவாகவுள்ள பொருள்
4. குறைந்த வருமானங்கள் பெறும் குடும்பங்களினால் பிரதானமாக நுகர்வுசெய்யப்படும் பொருளாக இருத்தல்

48. X இன் விலை 20% ஆக வீழ்ச்சியடையுமிடத்து வேண்டப்படும் தொகை 8%ஆக அதிகரிக்கின்றது. அத்தகைய நிலமையினை தோற்றுவிக்கும் சூழ்நிலையை இனங்காண்க
1. X இற்கு நெருங்கிய பிரதியீடுகள் இல்லாதிருத்தல்
2. X ஒரு ஆடம்பரப் பொருள்
3. X ஒரு குறுகிய அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்திய பொருள்
4. கேள்வி அதிகளவான விலை நெகிழ்ச்சியுடையது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. ஒரு கேள்விக்கோடு அதன் முழுஅளவிலும் நிலையான விலை நெகிழ்சியை காட்டாத சந்தர்ப்பம்

1. அதனுடைய முழு நீளத்திலும் கேள்வி வளையியின் சரிவு நிலையானதாக இருத்தல்.
2. விலையில் ஏற்படும் சதவீத மாற்றம் எப்பொழுதும் வேண்டப்படும் தொகையில் ஏற்படும் சதவீத மாற்றத்திற்கு சமனாகும்.
3. கேள்விக்கோடு ஒரு கிடைக்கோடாக தொகை அச்சுக்கு சமாந்தரமாக அமைதல்.
4. கேள்விக்கோடு ஒரு செவ்வக அதிபர வளையியாக இருத்தல்.
5. கேள்விக்கோடு ஒரு நிலைக்குத்து அச்சுக்கு சமாந்தரமாக அமைதல்.

50. பின்வரும் கூற்றுக்களில் எத நிறைபோட்டிச் சந்தைச் சமநிலையில் சரியாகின்றது.

1. உற்பத்தியாளர்கள் சாதாரண இலாபம் மட்டும் பெறமுடியும்.
2. நிரம்பல் கேள்வி நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்ற போதும் சந்தை விலை நிலையாக இருத்தல்.
3. வருமானத்தில் மாற்றம் ஏற்படுவதாக இருப்பினும் நுகர்வோர் அதே அளவு பொருள்களை கொள்வனவு செய்கின்றார்.
4. வழங்கப்படும் தொகை குறித்த நிரம்பலாளர்களின் தீர்மானங்கள் வாங்கப்படும் தொகை குறித்த நுகர்வோர் தீர்மானங்களுடன் ஒத்துச் செல்கின்றன.

51. கிபன் பண்டமொன்றின் மிகப்பிரதான இயல்பு யாது?

1. வருமானம் உயரும்பொழுது பொருளுக்கான கேள்வி குறைகின்றது. வருமானம் வீழ்ச்சியடையும் பொழுது கேள்வி கூடுகின்றது.
2. தரத்திற்குக் குறைவாக பொருளின் தன்மை காணப்படுதல்.
3. விலை வீழ்ச்சியடையும்பொழுது வேண்டப்படும் கேள்வித் தொகை குறைகின்றது. விலையுயரும் பொழுது கேள்வித்தொகை கூடுகின்றது.
4. விலைகள் மாறுமிடத்தும் பொருளின் வேண்டப்படும் கேள்வித்தொகை நிலையானதாக விருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. எத்தகைய சூழ்நிலைகளில் தனியொரு நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பண்டத்திற்கான கேள்வி நிறைவு நெகிழ்ச்சி உடையதாக இருக்கும்?

1. உற்பத்தி தொடர்பாக நிறுவனம் ஒரு தனியுரிமை நிலையினை அனுபவிக்கின்றது.
2. அரசாங்கம் உச்ச விற்பனை விலையினை விதிக்கின்றது.
3. சிறிய உற்பத்தியாளராக இருப்பதனால் நிலவும் சந்தை விலையில் நிறுவனம் உற்பத்தி முழுவதையும் விற்பனை செய்யமுடிகின்றது.
4. நிறுவனம் முத்திரைப் பெயரின் கீழ் பண்டத்தினை விற்பனை செய்தல்.

53. X இற்கான கேள்வி நெகிழ்ச்சியுடையதாக இருப்பது.

1. X இன் விலை வீழ்ச்சியடையுமிடத்து அதன் கேள்வித்தொகை கூடும் பொழுது.
2. X இன் விலையிலான வீழ்ச்சியொன்று அப்பண்டத்தின் மொத்தச் செலவு குறைக்கப்படும் விளைவினை ஏற்படுத்தும் பொழுது
3. X இன் விலையிலான ஒரு வீழ்ச்சி, கேள்வித் தொகையில் குறைந்த விகிதாசார ரீதியான அதிகரிப்பினை ஏற்படுத்தும் பொழுது.
4. X இன் விலையிலான ஓர் அதிகரிப்பு பண்டத்தின் மொத்தச் செலவில் குறைவினை விளைவிக்கும் பொழுது.

54. பண்டமொன்றின் கேள்வி நெகிழ்ச்சி –2 எனின், 2% இலான விலை அதிகரிப்பானது

1. கேள்வித்தொகையினை 4% இனால் குறைவடையச் செய்யும்.
2. கேள்வித்தொகையினை 1% இதனால் குறைவடையச் செய்யும்.
3. கேள்வித்தொகையினை 1% இனால் அதிகரிக்கச் செய்யும்.
4. கேள்வித்தெகையினை 4% இனால் அதிகரிக்கச் செய்யும்
5. மொத்த வருமானம் குறைவடையும்.

55. Y என்ற பண்டத்துக்கான கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருப்பது

1. Y இன் விலை வீழ்ச்சியடையுமிடத்து அதன் கேள்வித்தொகை அதிகரிக்கும் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. Y இன் விலையிலான ஓர் வீழ்ச்சி கேள்வித் தொகையில் அதிக வீதாசார அதிகரிப்பினை ஏற்படுத்தும் போது.

3. Y இன் விலையிலான அதிகரிப்பொன்று அப்பண்டத்தின் மொத்தச் செலவில் குறைவினை விளைவிக்கும் போது.

4. Y இன் விலையிலான வீழ்ச்சியொன்று அப்பண்டத்தின் மொத்தச் செலவில் குறைவினை விளைவிக்கும் போது.

56. பண்டம் ஒன்றின் விலை உயரும் பொழுது அப்பண்டத்திற்கான நுகர்வோன் செலவீடு குறைந்து செல்கின்றது. எந்நிலமையின் கீழ் நிகழக்கூடும்?

1. பண்டம் குறைவான நெகிழ்ச்சியான கேள்வியை கொண்டுள்ள போது.
2. பண்டம் மிகநெருங்கிய பிரதியீடுகளைக் கொண்டிருக்கும் போது
3. பண்டத்திற்கான கேள்வி மிகவும் நெகிழ்ச்சியற்றதாகக் காணப்படும் போது.
4. இப்பண்டம் ஓர் இழிவுப்பொருளாகக் காணப்படும் போது.

57. எல்லைச் செலவு பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?

1. எல்லைச் செலவு என்பது இறுதி உற்பத்தி அலகிற்கான செலவாகும்.
2. எல்லைச் செலவு என்பது உற்பத்தியில் மேலும் ஓர் அலகினை உற்பத்தி செய்தலின் விளைவாக முழுச் செலவுடன் கூட்டப்படும் தொகையாகும்.
3. நிறைபோட்டி நிறுவனமொன்றின் எல்லைச் செலவு நிலையாகக் காணப்படும்.
4. எல்லைச் செலவு என்பது தரப்பட்டுள்ள ஒரு பண்டத்தின் அதிகரிக்கும் உற்பத்திக்குரிய அமையச் செலவாகும்.

58. ஒரு பண்டத்தின் நிரம்பல் வளையி வலப்புறம் இடம்பெயர்வதற்கு ஏதுவான காரணியை அடையாளம் காண்க.

1. கேள்வியிலான ஒரு விரிவு
2. உள்ளீட்டு விலைகளிலான ஒருவீழ்ச்சி
3. தொழில்நுட்பத்திலான ஒரு பின்னடைவு
4. பண்டத்தை உற்பத்தி செய்வதனால் அதிக இலாபகரத் தன்மையை ஏற்படுத்தும் நிலையிலான ஒரு உயர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. நிறைபோட்டி நிறுவமொன்றிலிருந்து தனியுரிமைப் போட்டி நிறுவனமொன்று எவ்வழியில் வேறுபடுகின்றது?
1. நிறுவனம் வேறாக்கம் செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம்.
2. நிறுவனத்தின் உற்பத்திக்கான கேள்வி வளையி மேல் நோக்கி சரிந்து செல்வதன் மூலம்.
3. புதிய நிறுவனங்கள் நுழைவதற்கு எவ்வித தடையும் இல்லாதிருப்பதன் மூலம்.
4. நிறுவனம் நீண்ட காலத்தில் அசாதாரண இலாபத்தை உழைப்பதன் மூலம்.

60. உற்பத்தியில் வெளிவாரி விளைவு (Externalites) எனும் பதத்தின் கீழ் வருகின்ற விடயங்களை இனங்காண்க.
1. உற்பத்தியாளர்களது கட்டுப்பாடுகளுக்கப்பாற்பட்டதும் உற்பத்தியைப் பாதிக்கக்கூடியதுமான வரட்சி போன்ற வெளிக்காரணிகள்.
2. உற்பத்தியாளர்கள் மீது சுமத்தப்படும் செலவுகள்
3. உற்பத்தியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படாது ஏனைய வர்களுக்கு கிடைக்கும் உற்பத்தி நன்மைகள்.
4. ஏற்றுமதிச் சந்தையில் மேற்கொள்ளப்படும் வணிகச் செயற்பாடுகளுக்காக ஏற்படும் செலவுகள்.

61. நிறைபோட்டிச் சந்தை ஒன்றில் உள்ள நிறுவனமொன்றின் பொருளுக்கான கேள்வி வளையியினது இயல்புகளை இனங்காண்க.
1. நிலவும் சந்தை விலையிலிருந்து ஆரம்பிக்கும் கிடையான நேர்கோடாக கேள்விக்கோடு அமைகிறது.
2. கேள்வி நெகிழ்ச்சியற்றது.
3. விளம்பரப்படுத்தல் நிறுவனம் அதனுடைய கேள்விக்கோட்டை இடது பக்கமாக நகர்த்துவதற்கு வழிவகுக்கின்றது.
4. கேள்வி அலகு (ஒருமை) நெகிழ்ச்சியுடையது.

62. ஒரு நிறைபோட்டிச் சந்தையில் காணப்படும் இயல்பினை இனங்காண்க.
1. குறுங்காலத்தில் சாதாரண இலாபம் மட்டும் நிறுவனங்கள் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தனிப்பட்ட நிறுவனங்களின் பொருள்களுக்கு ஏற்படும் நுகர்வோன் இணைப்பு விளம்பரப்படுத்தலினால் ஏற்படுகின்றது.
3. இச்சந்தையில் புதிய நிறுவனங்கள் சேருவதற்கு தடை இல்லை.
4. இச்சந்தையின் நிறுவனங்களின் எண்ணிக்கை ஒரு சில நிறுவனங்களிலிருந்து மிகக்கூடிய எண்ணிக்கைகளையுடைய நிறுவனங்கள் வரையாக உள்ளது.

63. பின்வரும் கூற்றுக்களில் எது பிழையானது என நீர் கருதுவீர்?
1. நீண்ட காலத்தை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளுமளவுக்கு ஒரு பண்டத்தின் நிரம்பல் நெகிழ்ச்சி கூடுதலாக இருக்கும்.
2. ஒரு பண்டத்திற்கான கேள்வி அதன் விலை மாறாமல் அதிகரிக்க இடமில்லை.
3. தொடக்க நிலையினூடாக ஒரு நேர்கோட்டு நிரம்பல் வளையி ஒருமை நெகிழ்ச்சியினைக் கொண்டதாகும்.
4. ஒரு நேர்கோட்டு கேள்வி விளையியில் கேள்வியின் விலை நெகிழ்ச்சி பூச்சியத்திலிருந்து முடிவிலி வரையான அளவாகும்.


64. கேள்வியின் விலை நெகிழ்ச்சி கேள்வி வளையியில் தொடர்ச்சியாக நிலையானதாக இருக்காத சந்தர்ப்பம்.
1. கேள்வி வளையி ஒரு செவ்வக அதிபர வளையியாக இருத்தல்.
2. கேள்விக்கோடு தொகையச்சுக்கு சமாந்தரமாகக் காணப்படல்.
3. கேள்விக் கோட்டின் சரிவு தொடர்ச்சியாக நிலையானதாக இருத்தல்.
4. விலை மாற்றமடையாத போதும் கேள்வித்தொகை மாற்றமடைதல்.
5. விலை அச்சுக்கு சமாந்தரமான ஒரு கேள்விக்கோடு.

65. நெகிழ்ச்சியற்ற ஒரு உற்பத்திக் காரணி உழைத்துக் கொள்ளக்கூடிய பொருளாதார வாடகை என்பது.
1. மாற்றுக் கட்டணத்திலும் உயர்வானது
2. மாற்றல் வருமானங்களிலும் குறைந்தது.
3. ஒரு பக்கம் சார்ந்த வருமானத்திலும் உயர்வானது
4. கேள்வி விலையிலும் உயர்வானது.
5. பொருளாதார வாடகை இருப்பதில்லை.

66. குறித்த பண்டமொன்றின் மீது நேரில்வரி விதிக்கப்படும் போது சந்தைச் சமநிலையில் ஏற்படும் மாற்றத்தை கீழுள்ள வரிப்படம் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இங்கு நுகர்வோரின் வரிச்சுமையின் அளவு

1. FGDE 2. GICA 3. BDGH
4. GHBA 5. FHBE

67. பின்வரும் கூற்றுக்களிலிருந்து மிகச் சரியானதை தெரிவு செய்க.

1. நெகிழ்வற்ற கேள்வியைக் கொண்டுள்ள விவசாயப் பொருளின் சந்தை நிரம்பல் வீழ்ச்சியடையின் அதனை நிரம்பல் செய்வோரின் விற்பனை வருமானம் வீழ்ச்சியடையும்.
2. விவசாயம் பொருட்களுக்கு நெகிழ்வுள்ள கேள்வி காணப்படுகின்ற போது அதன் நிரம்பல் அதிகரிப்பின் அதனை நிரம்பல் செய்வோரின் விற்பனை வருமானம் வீழ்ச்சியடையும்.
3. விவசாயம் பொருட்களுக்கு நெகிழ்வற்ற கேள்வி நிலவும் போது அப்பொருளின் நிரம்பல் குறைவதனால் நிரம்பலாளரின் வருமானம் அதிகரிக்கப்படும்.
4. விவசாயப் பொருட்களின் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு கூடியதாக காணப்படுகிறது.
5. விவசாயப் பொருட்களின் விலைகள் தளம்பல் அடைவதில்லை.

68. பின்வரும் கூற்றுக்களில் எது நிறைபோட்டிச் சந்தைச் சமநிலையில் சரியாகின்றது.

1. உற்பத்தியாளர்கள் சாதாரண இலாபம் மட்டும் பெறமுடியும்.
2. கோரப்படும் தொகை குறித்த நுகர்வோர் தீர்மானங்கள், வழங்கப்படும் தொகை குறித்த நிரம்பலாளர் தீர்மானங்களுடன் இசைதல்.
3. எல்லைச்செலவு, எல்லை வருமானத்திற்கு சமனாதல்.
4. கேள்வி. நிரம்பல் நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்ற போதும் சந்தைவிலை நிலையாக இருத்தல்.
5. மிகைக்கேள்வி, மிகைநிரம்பல் என்பன காணப்படும் நிலையாகும்.

69. கேள்வி வளையியில் மாற்றமின்றியே கீழ்வரும் காரணிகளுள் எது குரக்கனுக்கான விலையில் வீழ்ச்சியை ஏற்படுத்தக்கூடியது?

1. குரக்கன் உற்பத்தியில் உற்பத்தித்திறன் குறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மக்கள் பண வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
3. உரமானியத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி
4. உற்பத்திச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி
5. சனத்தொகை அளவில் ஏற்பட்ட குறைவு

70. X பண்டத்தின் விலை ரூபா 100 இலிருந்து 60 ஆக குறையும் போது Y பண்டத்திற்கான கேள்வி 1000 அலகுகளிலிருந்து 1200 அலகுகளாக அதிகரிக்கின்றது எனின் கேள்வி நெகிழ்ச்சி யாது?

1. 0.5 2. 2 3. -0.5 4. -2 5. -1.5

71. பின்வரும் அட்டவணை மொத்தச் செலவு பற்றிய தரவினைக் காட்டுகிறது.

| உற்பத்தி Q | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்தச்செலவு (TC) | 200 | 260 | 290 | 320 | 360 | 420 | 500 |

இங்கு 4வது அலகு உற்பத்தியின் போது சராசரி மாறும் செலவு என்ன?

1. 90 2. 50 3. 45 4. 40 5. 44

72. ஆடம்பரப்பொருள் ஒன்றின் மீது வரிவிதிக்கப்படும் போது
1. வரிச்சுமை முழுவதும் நுகர்வோரால் செலுத்தப்படும்.
2. பெரும்பகுதி வரிச்சுமை உற்பத்தியாளரால் செலுத்தப்படும்.
3. அதிகளவான வரிப்பளு நுகர்வோராலும் சிறிதளவான வரிப்பளு நிரம்பலாளராலும் சுமக்கப்படும்.
4. உற்பத்தியாளர் வரிச்சுமையினை ஏற்பதில்லை.
5. வரிச்சுமை முழுவதும் உற்பத்தியாளரால் செலுத்தப்படும்.

73. குறிப்பிட்ட பொருளை விற்பனை செய்யக்கூடிய உச்சபட்ச விலையை அரச விதிக்குமாயின் அதன் விளையான மிகச் சரியான கூற்று.
1. பொருளின் கேள்வித் தொகையும் நிரம்பல் தொகையும் அதிகரிப்பதனல் மிகைக் கேள்வி ஏற்படாது.
2. பொருளின் நிரம்பலளவு அதிகரிக்க கேள்வித் தொகையளவு குறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருளின் நிரம்பல் குறைவடைந்து கேள்வித் தொகை அதிகரிப்பதால் மிகைக் கேள்வி நிலை ஏற்படும்.
4. பொருளின் நிரம்பல் தொகை வீழ்ச்சியடைய கேள்வித் தொகை அதிகரிப்பதால் விலையும் அதிகரிக்கும்.
5. பொருளின் நிரம்பல் அதிகரித்து கேள்வித் தொகை குறைவதால் மிகை நிரம்பல் நிலை ஏற்படும்.

74. குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி தொழிற்பட காரணம் எது?
1. அளவுத்திட்டச் சிக்கனங்கள் இருத்தல்
2. உள்ளீட்டு அதிகரிப்பு வீதாசாரமும் வெளியீட்டு அதிகரிப்பு வீதாசாரமும் சமனாக இருத்தல்.
3. உள்ளீட்டு அதிகரிப்பு வீதத்தைவிட வெளியீட்டு அதிகரிப்பு வீதம் உயர்வாக இருத்தல்.
4. உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்தல்.
5. வெளியீட்டு அதிகரிப்பினை விட உள்ளீட்டு அதிகரிப்பு குறைவாக இருத்தல்.

75. சமூகச் செலவு என்பது பின்வருவனவற்றில் எதனைக் குறித்து நிற்கும்?
1. குறித்த பொருள் உற்பத்தி தொடர்பாக உள்ளீடுகளுக்காக உற்பத்தியாளர் மேற்கொண்ட செலவுடன் வெளிவாரிச் செலவையும் கூட்டுவதன் மூலம் பெறப்படுவது.
2. குறித்தபொருளின் உற்பத்திக்காக உற்பத்தியாளரால் மேற்கொள்ளப்பட்ட உள்ளீடுகள் தொடர்பான செலவு.
3. குறித்தபொருள் உற்பத்தியாளர் தவிர்ந்த ஏனையோர் குறித்த பொருள் தொடர்பாக மேற்கொண்ட செலவு.
4. தனியார் நலனுடன் வெளிவாரி நலனையும் கூட்டுவதன் மூலம் பெறப்படுவது.
5. வெளிப்படையான செலவினையும் உட்கிடையான செலவினையும் சேர்த்ததாகும்.

76. பண்டமொன்றின் உற்பத்தி தொடர்பாக தனியார் பெறும் நலனிலும் பார்க்க சமூக நலன் அதிகமாக உள்ளது. எனவே அரசாங்கம்
1. குறித்த பண்ட உற்பத்தியை நேரடியாக கட்டுப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. குறித்த பண்ட உற்பத்திக்கு மானியம் வழங்கலாம்.
3. குறித்த பண்ட உற்பத்தி மீது நேரில் வரி விதிக்கலாம்.
4. குறித்த பண்ட விற்பனை மீது உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலையை விதிக்கலாம்.
5. குறித்த பண்ட உற்பத்தியின் மானியத்தை நிறுத்தலாம்.


77. பின்வருவனவற்றில் சரியான கூற்றினைத் தெரிவு செய்க?
1. சிலருமைச் சந்தையில் அதிகளவான விலைப்போட்டி இடம்பெறும்.
2. நிறைபோட்டி நிறுவனங்கள் விளம்பரம் மேற்கொள்ளவேண்டும்.
3. ஒரு நிறுவனம் சமநிலையில் இருக்கும் போது அதன் எல்லை வருமானமும் எல்லைச் செலவும் சமமாக இருக்கும்.
4. குறுங்கால உற்பத்தியின் போது ஒரு நிறுவனத்தின் சராசரி செலவுக் கோட்டுக்கும் சராசரி மாறும் செலவுக் கோட்டிற்கும் இடையேயான நிலைக்குத்தச்சு ரீதியான தூரம் மொத்த நிலையான செலவு ஆகும்.
5. தனியுரிமைச் சந்தையில் சாதாரண இலாபநிலை எய்தப்படும்.

78. நிறுவனமொன்று எவ்வெளியீட்டு மட்டத்தில் சாதாரண இலாபத்தை உழைக்கும்?
1. எல்லை வருமானம் எல்லைச் செலவுக்கு சமமாக இருக்கும் போது
2. மொத்தச்செலவு மொத்த வருமானத்திற்கு சமமாக இருக்கும் போது
3. சராசரி வருமானம் சராசரி மாறும் செலவுக்கு சமமாக இருக்கும் போது.
4. எல்லை வருமானம் சராசரிச் செலவுக்கு சமமாக இருக்கும் போது.
5. சராசரி வருமானம் எல்லைச் செலவுக்கு சமமாக இருக்கும் போது.

- இக்கேள்வி நிரம்பல் கோடுகளையும் சமநிலைகளையும் கருத்திற் கொண்டு 79,80 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க (ஆரம்பசமநிலைப் புள்ளி T எனக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




79. குறிப்பிட்ட பொருளுக்கு இணைப்புப் பொருளாக காணப்படும் பொருளின் விலையானது அதிகரிப்பின் புதிய சமநிலைப்புள்ளி எது?
1. S  2. W  3. U  4. Q  5. R

80. குறிப்பிட்ட பொருளின் உற்பத்திக் காரணிகளின் விலை அதிகரித்துள்ளதுடன் நுகர்வோர் வருமானமும் குறைவடைந் துள்ளது. புதிய சமநிலைப் புள்ளி எது?
1. V  2. P  3. R  4. X  5. T

81. மிகைநிரம்பல் விலை காணப்படுவது
1. சமநிலை விலையில்
2. சமநிலைத் தொகையில்
3. சமநிலைத் தொகைக்கு மேலாக
4. சமநிலைத் தொகைக்கு கீழாக
5. சமநிலை விலைக்கு மேலாக

82. விளம்பரம் விற்பனை மேம்படுத்தல் அதிக முக்கியம் பெறும் சந்தை அமைப்பு.
1. நிறைபோட்டிச்சந்தை
2. தனியுரிமைச் சந்தை
3. தனியுரிமை போட்டிச்சந்தை
4. சிலருரிமைச் சந்தை
5. இருவருரிமைச் சந்தை

83. சந்தைச் சமநிலையின் இயல்பு அல்லாதது
1. கேள்வியும் நிரம்பலும் சமனாக இருத்தல்.
2. கேள்வி விலையும் நிரம்பல் தொகையும் சமனாக இருத்தல்.
3. மிகைக்கேள்வி, மிகை நிரம்பல் இல்லாத நிலை
4. மிகைக் கேள்விவிலை, மிகைநிரம்பல் விலை என்பன பூச்சியமாக இருத்தல்.
5. கேள்வி விலையும் நிரம்பல் விலையும் சமனாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. பகுத்தறிவுள்ள நுகர்வோர் தனது வரையறுக்கப்பட்ட வருமானத்தைச் செலவிடுவது.

1. மொத்தச் செலவு இழிவுபடுவதற்கு
2. தெரிவு செய்யப்படும் பண்டங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு.
3. எல்லைப் பயன்பாட்டை சமனாக்குவதற்கு
4. சேமிப்பை ஊக்குவிப்பதற்கு
5. மொத்தப் பயனை உச்சப்படுத்துவதற்கு

85. குறிப்பிட்ட பொருளின் நிரம்பலை அதிகரிப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படின் அதன் நிரம்பல் நெகிழ்ச்சி.

1. நெகிழ்ச்சியுடையது
2. முற்றாக நெகிழ்வற்றது
3. பூரண நெகிழ்வுள்ளது
4. நெகிழ்ச்சியற்றது
5. ஒருமை நெகிழ்ச்சியுடையது

86. பின்வரும் கூற்றுக்களில் ஏற்றுக் கொள்ளக்கூடியது

1. வெளியீட்டின் அனைத்துக் காரணிகளையும் மாற்றமுடியாத காலம் குறுங்காலம்.
2. குறுங்காலத்தில் நிலையான காரணிகள் இருப்பதில்லை.
3. உற்பத்தியின் குறுங்காலம் என்பது ஒரு வருடத்திற்கு உட்பட்ட காலமாகும்.
4. நீண்ட காலத்தில் காரணிகள், தொழில்நுட்பம் என்பவற்றில் மாற்றம் ஏற்படுவதில்லை.
5. குறுங்கால உற்பத்தியை மாறும் காரணிகள் மட்டுமே தீர்மானிக்கின்றன.

87. சராசரி நிலையான செலவுக் கோட்டின் வடிவம் எவ்வாறு காணப்படும்.

1. ஒடுங்கிய "U" வடிவமாக காணப்படும்.
2. அகன்ற "U" வடிவமாக காணப்படும்.
3. நீள் சதுர அதிபர வளையியாக காணப்படும்
4. மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் நேர்கோடாக காணப்படும்
5. கிடையச்சுக்கு சமாந்தரமாக காணப்படும் நேர்கோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று எது?

1. சராசரி செலவுக்கோட்டின் அதிதாழ்ந்த புள்ளியை எல்லைச் செலவுக்கோடு வெட்டிச் செல்லும்.
2. ஊழிய நிரம்பல் கோடு பின்னோக்கி வளையும் தன்மை உடையது.
3. தனியுரிமை நிறுவனத்தை விட நிறைபோட்டி நிறுவனம் அதிக செயற்திறனுடன் வளங்களை பிரயோகிக்கும்.
4. நெகிழ்ச்சி வாய்ந்த கேள்வியுடைய பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளன் தனது வருமானத்தை அதிகரிப்பதற்கு பொருளின் விலையை மேலும் உயர்த்த வேண்டும்.
5. தனியுரிமைச் சந்தையில் எல்லை வருமானத்தை விட சராசரி வருமானம் அதிகமாக காணப்படும்.

89. பின்வருவனவற்றுள் எவ்நிலமை கேள்வி நெகிழ்ச்சி வாய்ந்த நிலைக்கு பொருத்தமற்றது.

1. குறித்த பொருள் பரந்த அடிப்படையில் வரையறுக்கப்பட்டமை
2. குறித்த பண்டத்திற்கு அதிக பதிலீடுகள் இருத்தல்.
3. விலையிலான மாற்றம் ஒன்றின் விளைவினை அளவிட நீண்டகாலம் அனுமதிக்கின்றமை.
4. வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பினால் பண்டத்தின் மீதான செலவினம் பெருமளவு அதிகரிப்பை ஏற்படுத்தல்.
5. ஆடம்பரப் பொருளாக இருத்தல்.


90. பொருளொன்றின் கேள்விக்கோடு மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக நகர்வதற்குப் பொறுப்பாக இருப்பது.

1. குறித்த பொருளின் விலை மாறாதிருக்க இணைப்புப் பொருளின் விலை குறைதல்.
2. பதிலீட்டு விளைவு
3. வருமான விளைவு
4. பதிலீட்டு விளைவும் வருமான விளைவும்
5. பதிலீட்டு விளைவு அல்லது வருமான விளைவு

91. நிறைபோட்டி சந்தையொன்றின் குறிப்பிட்ட பொருளுக்கான சந்தைச் சமநிலையை வரிப்படம் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்தையில் 500 நிறுவனங்கள் இருப்பின் ஒரு நிறுவனத்தின் மொத்த வருமானம் யாது?

1. 10000
2. 2500
3. 20
4. 100
5. 50

92. ஒரு பண்டத்தின் விலை 25% ஆக உள்ளபோது மொத்த நுகர்வோன் செலவு 7500/= ஆகும். இப்பொருளின் விலை 20% இனால் குறைக்கப்படும் போது அதன் கேள்வி நெகிழ்ச்சி −2 ஆகும். தற்போது அப்பண்டத்தின் நுகர்வோன் செலவு யாது?

1. 2400  2. 8400  3. 9500  4. 10000  5. 7300

93. நிலைக்குத்தச்சு வெட்டிச் செல்லும் ஒரு நேரான நிரம்பல் கோட்டின் நெகிழ்ச்சி பற்றிய சரியான விடையினைத் தெரிவு செய்க.

1. விலை அதிகரிக்க குறைவடையும்
2. விலை அதிகரிக்க அதிகரிக்கும்
3. ஒன்றை விடக்கூடியது. ஆனால் விலை அதிகரிக்க அதிகரிக்கும்.
4. ஒன்றை விடக்கூடியது. ஆனால் விலை அதிகரிக்க குறையும்.
5. ஒன்றைவிட குறைவு. ஆனால் விலை அதிகரிக்க அதிகரிக்கும்.

94. Qd =1000-50p என்ற கேள்விச் சமன்பாட்டில் 12/= விலையில் நுகர்வோன் மிகை யாது?

1. 1600  2. 2500  3. 400  4. 600  5. 3000

95. நிரம்பல் கோட்டின் இடது புற நகர்வைத் தீர்மானிப்பது

1. பொருளின் விலை குறைதல்
2. போட்டி நிரம்பல் பொருளின் விலை அதிகரித்தல்.
3. போட்டி நிரம்பல் பொருளின் விலை குறைதல்
4. கூட்டு நிரம்பல் பொருளின் விலை அதிகரித்தல்.
5. உற்பத்திக் காரணிகளின் விலை குறைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. பின்வருவனவற்றுள் பிழையான கூற்று எது?

1. நீண்டகால சராசரிச் செலவுக்கோடு அகன்ற "U" வடிவமாக காணப்படும்.
2. மொத்த மாறும் செலவில் ஏற்படும் மாற்றத்தின் மூலம் எல்லைச் செலவைக் கணிப்பிடலாம்.
3. குறுங்கால சராசரி நிலையான செலவையும் (AFC) சராசரி மாறும் செலவையும் (AVC) சேர்ப்பதன் மூலம் சராசரி மொத்தச் செலவை (ATC) மதிப்பிடலாம்.
4. சராசரிச் செலவுக் கோட்டிற்கும் சராசரி மாறும் செலவுக் கோட்டிற்கும் இடையிலான இடைவெளி தொடர்ச்சியாக குறைவடையும்.
5. நிறைபோட்டிச் சந்தையின் கேள்விக்கோடு முடிவிலி கேள்வி நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்.


97. நேரான கேள்விக் கோடொன்றின் சரிவு 1/4 ஆகும். பொருளின் விலை 20/= ஆயின் கேள்வித் தொகை 80 அலகுகளாகும். 20/= இல் கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி யாது?

1. 1.6 2. 6.67 3. –1.6 4. –1 5. 1

98. கேள்வி விதிக்கு முரணாக அமையாத சந்தர்ப்பமாக கருதக் கூடியது

1. குறித்த பண்ட விலை அதிகரிக்க கேள்வித்தொகையும் அதிகரித்தல்.
2. கி:பன் பண்டமாக இருத்தல்.
3. சமூக அந்தஸ்தைக் கொண்டுள்ள பொருள்
4. கேள்விக் கோடு மேலிருந்து கீழாக நகருதல்
5. பொருளின் தரம் விலையினால் தீர்மானிக்கப்படுதல்

99.




DD என்பது கேள்விக் கோடாகும். குறித்த ஒரு நிறுவனம் குறித்தவொரு சேவைக்கான கட்டணத்தை ஆரம்பித்தல் OP என தீர்மானிக்கும் போது கேள்வி OQ எனக் காணப்படுகிறது. தற்போது இலவச சேவையாக வழங்கத் தீர்மானிப்பின் நுகர்வோர் மிகையில் ஏற்படும் அதிகரிப்பு என்ன?

1. A+B 2. B+C 3. (B+A)-A 4. A+B+C 5. A+C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. சாதாரண பண்டத்தின் போது

1. பதிலீட்டு விளைவு, வருமான விளைவு. விலை விளைவு என்பன நேர்க்கணியமாக காணப்படும்.
2. நேர்க்கணியப் பதிலீட்டு விளைவை விட எதிர்க்கணிய வருமான விளைவு உயர்வாக காணப்பட்டு எதிர்க்கணிய விலை விளைவை கொண்ட பண்டம்.
3. நேர்க்கணியப் பதிலீட்டு விளைவை விட எதிர்க்கணிய வருமான விளைவு குறைவாக காணப்பட்டு நேர்க்கணிய விலை விளைவு காணப்படும்.
4. பதிலீட்டு விளைவும் வருமான விளைவும் சமனாக காணப்படும்.
5. பதிலீட்டு விளைவு எதிர்க்கியமாகவும் வருமான விளைவு நேர்க்கணியமாகவும் காணப்படும்.

101. உலகின் புதிய ஏழு அதிசயங்களில் ஒன்றின் நிரம்பல் கோடு

1. தொகையச்சுக்கு சமாந்தரமாக காணப்படும்.
2. மூலப்புள்ளியிலிலுந்து ஆரம்பித்துச் செல்லும்.
3. செங்குத்து அச்சுக்கு சமாந்தரமாக காணப்படும்
4. விலை அச்சுக்கு குத்துச் சாய்வாக இருத்தல்.
5. தொகை அச்சுக்கு குத்துச் சாய்வாக இருத்தல்.

102. சந்தைச் சமநிலையின் போது கேள்வி அதிகரிப்பும் நிரம்பல் குறைவும் சமனாக இருப்பின்

1. சமநிலை விலை குறையும்
2. சமநிலை விலை மாறாது
3. சமநிலை தொகை அதிகரிக்கும்
4. சமநிலைத் தொகை மாறாது
5. சமநிலை தொகை குறையும்

103. பூச்சிய குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியுடைய மண்டபம்

1. சாதாரண பண்டம்
2. சுயேட்சைப் பண்டம்
3. பதிலீட்டுப் பண்டம்
4. இணைப்புப் பண்டம்
4. அத்தியாவசியப் பண்டம்

104. அரசாங்கம் குறித்தவொரு பண்டத்தின் மீது மானியம் வழங்கும் போது நிரம்பல் சார்பு பின்வருமாறு மாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1. QS = a+bp    2. QS = a+b(P-S)
3. QS = a-b(P+S)    4. QS = a+b(P+T)
5. QS = a+b(P+S)

105. நிரம்பல் நெகிழ்ச்சி அற்றதாயின்
1. பொருளாதார வாடகையிலும் மாற்றுக் கட்டணம் உயர்வாகும்.
2. மாற்று உழைப்புக்களை விட சிக்கன வாடகை பெரிதாகும்.
3. மாற்றல் வருமானங்களை விட பொருளாதார வாடகை அதிகமாகும்.
4. மொத்த வருமானம் முழுவதும் மாற்றுக் கட்டணங்களாகும்.
5. மாற்றுக் கட்டணமும் சிக்கன வாடகையும் சமனாகும்.

106. குறித்த ஒரு நுகர்வோன் குறித்த பொருளின் விலை அலகொன்று 10/= ஆக உள்ளபோது 800/= செலவிடுகின்றான். பொருளின் அலகுவிலை 20/= ஆயின் 960/= ஐ செலவிடுகின்றான். எனின் விலை சார் கேள்வி நெகிழ்சிச யாது?
1. 2.5    2. -2.5    3. -0.4    4. 0.4    5. 1.6

107. பின்வருவனவற்றுள் பிழையான கூற்றைத் தெரிக.
1. நெகிழ்ச்சியற்ற கேள்வியையுடைய பொருளின் விலை அதிகரிக்கும் போது மொத்த வருமானம் அதிகரிக்கும்.
2. முற்றாக நெகிழ்ச்சியற்ற கேள்வியின் போது உற்பத்தியாளர் வரிச்சுமையை ஏற்பதில்லை.
3. நேராக கேள்விக் கோட்டின் நடுப்புள்ளியில் அலகுக் கேள்வி நெகிழ்ச்சி காணப்படும்.
4. முற்றாக நெகிழ்வற்ற வழங்கல் கோட்டின் அனைத்துப் புள்ளிகளிலும் ஒருமை நெகிழ்ச்சி காணப்படும்.
5. சிலருரிமைச் சந்தையின் கேள்விக்கோடு இடைமுறிக் கோடாக காணப்படும்.

108. பின்வரும் வரைபின் அடிப்படையில் மாற்றுக்கட்டணம், சிக்கன வாடகை என்பவற்றின் பரப்புக்கள் முறையே




1. BCD, ABD    2. ABD, OADE    3. OBDE, BCD
4. ADEO, BDA    5. ACD, DEOA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

109. ஒரு பொருளின் விலை பூச்சியமாக இருக்கும் போது கேள்வித் தொகை 800 அலகுகளாக இருந்தது. விலை ஒரு ரூபாவால் அதிகரிக்க அதனது கேள்வித்தொகை 50 அலகுகளால் குறைவடைகிறது எனின் கேள்விச் சார்பு யாது?

i. $QD = -800 + 1/50\,P$ ii. $50P = 800 - Qd$

iii. $Qd = 800 + 50P$ iv. $QS = 800 - 50P$

v. $-800 + 50P = Qd$

110. பொருளாதார உறுதியை நிலைநாட்டுவதற்கு அரசு மானியம் வழங்குதல் வேண்டும். எனினும் செலவினை இழிவுபடுத்த அரசாங்கம் என்ன உபாயத்தைக் கையாளும்?

i. கேள்வி நெகிழ்ச்சி வாய்ந்த பொருட்களுக்கு மானியம் வழங்குதல்.

ii. கேள்வி நெகிழ்ச்சி அற்ற பொருட்களுக்கு மானியம் வழங்குதல்.

iii. மானியத்தை நிறுத்துதல்.

iv. மிகைநிரம்பல் கொள்வனவு செய்தல்.

v. வரியினை விதித்தல்.

111. நிறைபோட்டிச் சந்தையிலுள்ள நிறுவனம்

i. விலை தீர்மானிப்போன் ii. விலை உருவாக்குவோன்

iii. விலை ஏற்போன் iv. விலைத் தொடர்பாளன்

v. விலையை ஏற்பதில்லை

112. ஒரு பண்டத்தின் கேள்வி விலை நெகிழ்ச்சியற்றதாயின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு.

i. தொகையில் சிறிய வீத வீழ்ச்சியை ஏற்படுத்தும்

ii. தொகையில் உயர்ந்த வீத வீழ்ச்சியை ஏற்படுத்தும்

iii. நுகர்வோர் செலவைக் குறைக்கும்

iv. தொகையின் சமனான வீழ்ச்சியை ஏற்படுத்தும்

v. மொத்த வருமானம் மாறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113. அரசாங்கம் இறைக்கொள்கையினூடாக வளங்களை சிறப்பாக ஒதுக்கிடுவதற்காக வரிவிதிக்கும் போது.

1. முடிவிலி நிரம்பல் நெகிழ்வுடைய பொருளுக்கு வரிவித்தல்.
2. நிரம்பல் நெகிழ்ச்சி வாய்ந்த பொருட்களுக்கு குறைந்த வரிவித்தல்.
3. நேர்வரியைக் குறைத்தல்.
4. நிரம்பல் நெகிழ்ச்சியற்ற பண்டங்களுக்கு வரியைக் குறைத்தல்.
5. வரியை நிறுத்தல்.

114. சர்வதேச வர்த்தக ஒப்பந்தத்தில் ஈடுபடும் நாடு கருத்திற் கொள்ளவேண்டிய நிரம்பல் நெகிழ்ச்சி யாது?

1. $ES=1$ 2. $ES>1$ 3. $ES<1$ 4. $ES=0$ 5. $ES=\infty$

115. கேள்வி நிரம்பல் நிச்சயமற்றிருக்கும் நிலைமைகளை எதிர்நோக்கும் போது பொருளின் விலைத்தளம்பலை தவிர்ப்பதற்கு அரசு கையாளும் நடவடிக்கை.

1. ஏற்றுமதிகள் மீது பூரண கட்டுப்பாடுகளை விதித்தல்
2. அதிகளவு கொள்வனவு செய்து தாங்கிருப்பை வைத்திருத்தல்.
3. அதிகளவு பணத்தை வைத்திருத்தல்
4. இறக்குமதிகளை பூரணமாக கட்டுப்படுத்தல்
5. செலவுகளை அதிகரித்தல்.

116. கோதுமை மா விற்பனையாளர்கள் தமது மாவின் விலை 25% இனால் குறைக்குமாறு அரசினால் கேட்கப்படுகின்றனர். 60/= இல் மாவுக்கான தினசரிக் கேள்வி 4000 kg ஆகும். மாவுக்கான கேள்வி நெகிழ்ச்சி -0.75 ஆகும். எனின் எத்தனை கிலோ மா மேலதிகமாக உற்பத்தி செய்யப்படல் வேண்டும்.

1. 570 2. 750 3. 1000 4. 3250 5. 4000


117. நேரான கேள்விக் கோடொன்றின் வழியே நெகிழ்ச்சி வேறுபடக் காரணம்.

1. ஆரம்ப விலை, தொகை மாறாதிருத்தல்.
2. விலை மாற கேள்வித்தொகை மாறுதல்.
3. சரிவு மாறாதிருக்க ஆரம்பவிலை தொகை மாற்றமடைதல்.
4. சரிவு மாற்றமடைதல்
5. ஆரம்பவிலை மட்டும் மாற்றமடைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

118. போட்டிச் சந்தையொன்றில் பொருளொன்றுக்கான சமநிலை மாற்றங்களை வரிப்படம் காட்டுகின்றது.




நிரம்பல்கோடு $S_1$ இலிருந்து $S_2$ இற்கு நகரும் போது


1. நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளர் மிகையும் குறைவடையும்.
2. நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளர் மிகையும் அதிகரிக்கும்.
3. நுகர்வோன் மிகை அதிகரிக்க உற்பத்தியாளர் மிகை குறையும்.
4. நுகர்வோன் மிகை குறைவடைய உற்பத்தியாளர் மிகை அதிகரித்தல்.
5. சிக்கன வாடகை அதிகரிக்கும்.

119. அதிக வரி வருமானத்தைத் திரட்ட அரசாங்கம் எத்தகைய பண்டத்தின் மீது வரியினை அதிகரித்தல் வேண்டும்.

1. நேர்க்கணிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்கள்.
2. எதிர்க்கணிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்கள்.
3. அதிகளவான விலைசார் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்கள் மீது
4. உயர்ந்த விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியுடைய பண்டங்கள் மீது.
5. குறைந்த விலைசார் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்கள் மீது.

120. பின்வரும் கேள்வி நிரம்பல் கோடுகளை அவதானிக்குக.

நிரம்பல் கோடு $S_1$ இலிருந்து $S_2$ ஆகவலது புறம் நகரும் போது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சிக்கன வாடகை அதிகரிக்கும். மாற்றுக் கட்டணம் குறைவடையும்.
2. சிக்கன வாடகை குறையும் மாற்றுக் கட்டணம் அதிகரிக்கும்.
3. சிக்கன வாடகையும் மாற்றுக்கட்டணமும் அதிகரிக்கும்.
4. சிக்கன வாடகையும் மாற்றுக் கட்டணமும் குறையும்.
5. சிக்கனவாடகை, மாற்றுக் கட்டணம் என்பவற்றில் மாற்றம் ஏற்படாது.

121. பண்டத்துக்குப் பண்டம் கேள்வி நெகிழ்ச்சி வேறுபடக் காரணம் அல்லாதது.
1. பொருட்களின் தன்மை
2. நுகர்வினைப் பிற்போடக்கூடிய தன்மை
3. பண்டத்தொகுதி வரையறுக்கப்படும் விதம்
4. சனத்தொகை அளவு
5. வருமானத்தில் செலவிடும் வீதம்.

122. குறித்தவொரு நிறுவனம் உற்பத்தியை நிறுத்தும் போது ஏற்கவேண்டிய தவிர்க்க முடியாத செலவு.
1. மொத்தச் செலவு
2. மொத்த நிலையான செலவு
3. மொத்த மாறும் செலவு
4. சராசரி நிலையான செலவு
5. மொத்த சராசரிச் செலவு

123. சராசரிச் செலவுக்கோடு மேல்நோக்கிச் செல்லும் போது எல்லைச் செலவுக் கோடு.
1. அதிகரிக்கும்
2. குறையும்
3. அதி தாழ்ந்த புள்ளியில் இருக்கும்
4. சராசரிச் செலவுக்கோட்டுக்கு மேலாக அமையும்.
5. சராசரிச் செலவுக்கோட்டுக்கு கீழாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124. நிறைபோட்டி நிறுவனம் குறுங்காலத்தில் வெளியீட்டை நிறுத்தும் நிலை பின்வரும் நிலையில் ஏற்படும்.

1. மொத்த வருமானம் மொத்த மாறும் செலவிலும் குறைவாக இருக்கும் போது
2. மொத்த வருமானம், மொத்த நிலையான செலவை விட குறைவாக இருக்கையில்.
3. சராசரி வருமானம், எல்லைச் செலவிலும் குறைவாக இருக்கையில்.
4. எல்லை வருமானம், சராசரிச் செலவிலும் குறைவாக இருக்கையில்.
5. சாதாரண இலாபத்திலும் குறைவாக உழைக்கும் போது.

125. சிலருரிமைச் சந்தையிலுள்ள நிறுவனம் ஒன்று தனது சொந்த உற்பத்திக்கு விலையை குறைப்பதில் எச்சரிக்கையாக இருப்பதன் காரணம்.

1. ஏனைய நிறுவனங்கள் தமது விலையை மாற்றாது விட்டால் விலக தீர்மானிக்கலாம்.
2. போட்டியாளரின் விலைக் குறைப்பிற்கு இது வழிவகுக்கும்.
3. தொழிலில் புதிய நிறுவனம் உள்நுழைவதற்கு இது வழிவகுக்கும்.
4. அதன் கேள்விக்கோடு, நிறைநெகிழ்ச்சியற்றது.
5. நிறுவனம் எப்போதும், விலையிடலில், மற்றைய நிறுவனங்களுடன் உடன்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு – 03

# பேரினப் பொருளாதாரம்

01. பின்வருவனவற்றுள் எது மொத்தக் கேள்வியில் பெரும்பாலும் அதிகரிப்பொன்றை ஏற்படுத்தவல்லது?
   1. சேமிப்புக்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   2. இறக்குமதிகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   3. அரச வரி வருமானத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   4. வட்டி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   5. முதலீட்டில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.

02. சந்தை விலைகளில் தேறிய உள்நாட்டுட உற்பத்தியானது
   1. நுகர்வு, அரச கொள்வனவு, தேறிய ஏற்றுமதிகள், முதலீட்டு செலவீடு என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.
   2. நுகர்வு, அரசகொள்வனவு, தேறிய ஏற்றுமதிகள், தனிநபர் வரிகள் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.
   3. வர்த்தக நேரில்வரிகள், தனிநபர் வருமான வரிகள், தேறிய ஏற்றுமதிகள் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.
   4. எல்லா உள்நாட்டுக் காரணி வருமானங்களையும் நேரில் வரிகளையும் கூட்டி மானியங்களைக் கழித்து வரும் தொகையாகும்.
   5. எல்லாக் காரணி வருமானங்களின் கூட்டுத்தொகையிலிருந்து பெறுமானத் தேய்வினைக் கழிக்கவருவதாகும்.

03. காலணி உற்பத்தியாளர் ஒருவர் ரூபா 1500 பெறுமதியான தோல், ரூபா 200 பெறுமதியான நூல் என்பவற்றைக் கொள்வனவு செய்து காரணிகளை உற்பத்தி செய்து நுகர்வோருக்கு அவற்றை 10000 ரூபாவுக்கு விற்பனை செய்கிறார். மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அவரது பங்களிப்பு

   1. ரூபா 11,750 ஆகும். 5. 1700 ஆகும்.
   2. ரூபா 10,200 ஆகும். 4. ரூபா 8300 ஆகும்
   3. ரூபா 10 000 ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. வீட்டுத்துறையொன்றின் வருடாந்த செலவிடத்தக்க வருமானம் ரூபா 60,000 ஆகவும் நுகர்வுச் செலவீடு ரூபா 45 000 ஆகவும் உள்ளபோது அதன்.

1. எல்லை நுகர்வு நாட்டம் (MPC) 0.25 ஆகும்.
2. எல்லை நுகர்வு நாட்டம் (MPC) 0.75 ஆகும்.
3. சராசரி நுகர்வு நாட்டம் (APC) 0.25 ஆகும்.
4. சராசரி நுகர்வு நாட்டம் (APC) 0.75 ஆகும்.
5. எல்லை சேமிப்பு நாட்டம் (MPS) 0.25 ஆகும்.

05. $45^{\circ}$ கோட்டிற்கு கீழாக நுகர்வுக்கோடு செல்லும் வருமான மட்டங்களில் வீட்டுத்துறையானது.

1. வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு முழுவதையும் நுகர்வு செய்யும்.
2. செலவிடத்தக்க வருமானத்தை விடக்கூடுதலாக நுகர்வு செய்யும்.
3. வருமானத்தின் குறிப்பிட்ட சதவீதத்தைச் சேமிக்கும்.
4. வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு முழுவதையும் சேமிக்கும்.
5. எதிர்க்கணிய சேமிப்பில் ஈடுபடும்.

06. மொத்த நுகர்வுச்சார்பு $C=80+0.7y$ எனவும் தேசிய வருமானம் $(y)=1000$ எனவும் தரப்படுமாயின் இரு துறைகளைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தில் சேமிப்பு மட்டம் எவ்வளவாக இருக்கும்?

1. 200  2. 300  3. 700  4. 780  5. 920

07. நடப்பு ஆண்டில் பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டு மெய்யுற்பத்தி ரூபா 8000 மில்லியனாகவும் அதே ஆண்டில் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 6000 மில்லியனாகவும் இருக்குமாயின் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி.

1. 0.75ற்கு சமனாகும்
2. 0.33 ற்கு சமனாகும்
3. 0.66 ற்கு சமனாகும்
4. 1.75ற்கு சமனாகும்
5. 2.00ற்கு சமனாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. வெளிநாட்டு வர்த்தகமும் அரசாங்க நடவடிக்கைகளும் இல்லாத ஒரு எளிமையான பொருளாதாரத்தில் ஒரு வருட காலப்பகுதியில் புதிய முதலீட்டுச் செலவில் ஏற்படும் ரூ 200 மில்லியன் அதிகரிப்பு சமனிலைத் தேசிய வருமானத்தை ரூ 800 மில்லியனால் உயர்த்தும் இப்பொருளாதாரத்தில் எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி யாது?

1. 0.25 2. 0.75 3. 0.8 4. 4.0 5. 7.5

09. சந்தை விலைகளில் தேறிய உள்நாட்டு உற்பத்தியானது

1. நுகர்வுச்செலவீடு + அரசாங்க கொள்வனவுகள் + + தேறிய ஏற்றுமதிகள் + முதலீட்டு செலவீட்டுக்கு
2. நுகர்வுச் செலவீடு + அரசாங்க கொள்வனவுகள் + ஏற்றுமதிகள் + தனியார் வரிகளுக்கு
3. நேரில் வியாபார வரிகள் + தனியாள் வருமானம் + தேறிய ஏற்றுமதிகளுக்கு
4. எல்லாக் காரணி வருமானங்கள் + நேரில் வரிகள் ~ மானியங்களுக்கு
5. எல்லாக்காரணி வருமானங்கள் ~ தேய்விற்கு சமமாகவிருக்கும்

10. வருமானத்தில் ஏற்படும் ரூ 6000 அதிகரிப்பு நுகர்வை ரூ 4500 ஆல் அதிகரிப்பதாகக் கருதுக. அப்படியாயின் எல்லைச் சேமிப்பு நாட்டம்

1. 1.33 2. 0.75 3. 0.25 4. 0.20 5. 0.15

11. பின்வருவனவற்றுள் எது மொத்தக் கேள்வியின் ஒரு கூறு அன்று

1. ஏற்றுமதிகள்
2. தனியார் நுகர்வு
3. உற்பத்தித் திறன்
4. முதலீடு
5. அரசாங்க நுகர்வு

12. பின்வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன. (தரவுகள் அனைத்தும் ரூபா மில்லியன்களில் ஆகும்)

| | | | |
|---|---|---|---|
| சேமிப்புக்கள் | = 550 | வரிகள் | = 200 |
| இறக்குமதிகள் | = 250 | முதலீடுகள் | = 400 |
| மொத்த அரசாங்கச் செலவீடு | = 250 | ஏற்றுமதிகள் | = 300 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகவல்களுக்கு அமைய சரியான கூற்று எது?

1. மொத்த வெளியீடு அதிகரிக்கும், பாதீடு மிகை நிலையிலிருக்கும்.
2. மொத்த வெளியீடு அதிகரிக்கும், பாதீடு பற்றாக் குறையாகவிருக்கும்
3. மொத்த வெளியீடுகுறையும், பாதீடு மிகை நிலையிலிருக்கும்
4. மொத்த வெளியீடு குறையும், பாதீடு பற்றாக்குறையாகவிருக்கும்
5. மொத்த வெளியீடு மாற்றமடையாது

13. சந்தைவிலைகளில் கணிக்கப்படும் தேறிய உண்ணாட்டு வருமானம் எதற்குச் சமனாகும்?

1. தனியார் நுகர்வுச்செலவு + அரசாங்க நுகர்வு + தேறிய ஏற்றுமதிகள் + முதலீட்டுச் செலவு
2. தனியார் நுகர்வுச்செலவு + அரசாங்க நுகர்வு + ஏற்றுமதிகள் + தனியார் வரிகள்
3. நேரில் வியாபார வரிகள் + தனிநபர் வருமானம் + தேறிய ஏற்றுமதிகள் - பெறுமானத்தேய்வு
4. முழுக்காரணி வருமானங்கள் + நேரில் வரிகள் – மானியங்கள்
5. முழுக்காரணி வருமானங்கள் – பெறுமானத்தேய்வு

14. ஏனைய விடயங்கள் மாறாதிருக்க செலவிடக்கூடிய குடும்ப வருமானம் அதிகரிக்குமாயின் அதன் விளைவாக

1. நுகர்வு குறைந்து சேமிப்பு அதிகரிக்கும்
2. நுகர்வு அதிகரித்து சேமிப்பு குறையும்
3. சேமிப்புகள், நுகர்வு ஆகிய இரண்டுமே அதிகரிக்கும்.
4. அதிகரிக்கும் வருமானம் முழுமையாக நுகரப்படும்
5. வருமானத்திலான அதிகரிப்பு முழுவதும் சேமிக்கப்படும்.

15. சந்தை விலையில் மொத்த உற்நாட்டு உற்பத்தியானது எதற்குச் சமனானது?

1. காரணி வருமானங்கள் – மறைமுகவரி + மானியங்களுக்கு
2. காரணி வருமானங்கள் – பெறுமானத்தேய்விற்கு
3. காரணி வருமானங்கள் + தேறிய மறைமுக வரிக்கு
4. வாடகை + கூலி + வட்டி + இலாபம்
5. நுகர்வு + முதலீடு + அரசாங்க கொள்வனவு + ஏற்றுமதிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. எளிய பொருளாதாரமொன்றில், புதிய முதலீட்டுச் செலவில் ஏற்படும் ரூ 100 மில்லியன் அதிகரிப்பு, சமநிலைத் தேசிய வருமானத்தை ரூ 500 மில்லியனால் உயர்த்தியுள்ளது. இப்பொருளாதாரத்தின் MPC யாது?

1. 0.8 2. 0.2 3. 5 4. 2.5 5. 0.75

17. பின்வரும் கூற்றுக்களில் பேரினப் பொருளாதார சமநிலை காணப்படுவதை சரியாக விளக்கும் கூற்று.

1. நிறைதொழில் மட்டம் நிலவும் ஒரு நிலையாகும்.
2. வருமான வெளியீட்டு மட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகள் செயற்படாத ஒரு நிலையாகும்.
3. சந்தையின் கேள்வி நிரம்பல் என்பன சமப்படும் ஒரு நிலையாகும்.
4. பணவீக்கமற்ற ஒரு உறுதியான நிலையாகும்.
5. பேரினப் பொருளாதார உறுதிப்பாடு உள்ள ஒரு நிலையாகும்.

18. மூடிய பொருளாதாரமொன்றில் பேரினப் பொருளாதார சமநிலையின் போது பின்வருவனவற்றுள் எது பொருத்தமற்றது?

1. Y=C+I+G 2. S+T-G=I 3. S-I=G-T
4. Y=C+I+(G-T) 5. I+G=S+T

19. ஒவ்வொரு மேலதிக 10 ரூபா வருமானத்திலும் ரூபா 2 சேமிப்புக்கும் ரூபா 1.50 இறக்குமதிக்கும் பயன்படுகிறது. அத்துடன் அரசாங்கம் ரூபா 1.50ஐ வரியாக விதிக்கிறது. பெருக்கியின் பெறுமதி என்ன?

1. 4 2. 5 3. 2.5 4. 1 5. 2

20. தேசிய கணக்கீடு என்பதன் பொருள் என்ன?

1. ஒரு பொருளாதாரத்திலுள்ள அனைத்து உற்பத்தி அலகுகளினதும் கணக்குகளின் கூட்டுத்தொகை.
2. கூட்டிய பெறுமதி முறையினைப் பயன்படுத்தி பெறப்படும் தேசிய வெளியீடு.
3. ஒரு நாட்டின் உற்பத்தி தொடர்பான வெளியீடு, வருமானம், செலவீடு ஆகிய வழிமுறைகளைப் பயன்படுத்தி பெறப்படும் பெறுமதியாகும்.
4. காரணி வருமானங்களான வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பவற்றின் கூட்டிய பெறுமதி.
5. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானத்தைச் சேர்த்த பெறுமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வருமானம் 4000 ஆகவுள்ள போது APS = 0.2 ஆகவும் MPC=0.75 ஆகவும் இருப்பின் நுகர்வுச் சார்பினைத் தருக.

1. C=200-0.75 y 2. C=800+0.75y
3. C=200+0.2y 4. C=800+0.25y
5. C=200+0.75y

22. அரசாங்க தலையீடற்ற பொருளாதார மொன்றின் வெளியீடு சமநிலையில் உள்ளபோது, நிறுவனத்துறையினது முதலீட்டில் வீட்டுத்துறையினது சேமிப்புக்கு ஏற்றவாறான அதிகரிப்பு ஏற்படாதபோது சமநிலைக்கு யாது நிகழும்?

1. முதலீட்டு மட்டத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் தலையிட அது சேமிப்புக்குச் சமனாக காணப்படும்.
2. சமநிலையானது மாற்றமின்றி இருக்கும்.
3. வருமானச் சுற்றோட்டம் சுருங்குவதுடன் தேசிய வருமானச் சமநிலையும் குறைவடையும்.
4. தேசிய வருமானச் சுற்றோட்டம் விரிவடைய சமநிலைத் தேசிய வருமானம் அதிகரிக்கும்.
5. உள்ளோட்டம் வெளியோட்டம் சமனாக உள்ளமையினால் வருமானம் சமநிலையில் இருக்கும்.

23. மொத்த தேசிய உற்பத்திக் கணிப்பீட்டில் இரட்டை எண்ணல் பிரச்சனையை தவிர்ப்பதற்கு?

1. வெளியீட்டுப் பெறுமதியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதியை நீக்குதல்.
2. இடைநிலைப் பொருட்களின் பெறுமதியை தவிர்த்தல்.
3. உற்பத்திப் பெறுமதியிலிருந்து மறைமுகவரியினை நீக்கி உதவிப் பணத்தைச் சேர்த்தல்.
4. உற்பத்தி செய்த பொருட்கள் சேவைகளின் பெறுமதியைச் சேர்த்தல்.
5. மாற்றல் வருமானங்களைச் சேர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. எளிய பொருளாதார மொன்றின் சேர்ப்புச் சார்பு $S=-200+0.2y$ ஆகவுள்ள நிலையில் முதலீடு 500ஆல் அதிகரிப்பின் நுகர்வு எவ்வளவால் அதிகரிக்கும்.

1. 1500  2. 2000  3. 1800  4. 2500  5. 500

25. வருமானம் பூச்சியமாகவுள்ள நிலையில் நுகர்வு ரூபா 300 ஆகும். வருமானம் ஒவ்வொரு ரூபாவினால் அதிகரிக்கும் போர் நுகர்வு 75 சதத்தால் அதிகரிக்கின்றது. முதலீடு ரூபா 200 ஆக நிலையாக இருப்பின் சமநிலையில் நுகர்வின் அளவு யாது?

1. 2000/=  2. 1500/=  3. 1800/=  4. 200/=  5. 300/=

26. எளிய பொருளாதாரமொன்றில் 200 மில்லியன் ரூபாவால் அதிகரித்த முதலீட்டுச் செலவின் 3வது சுற்று வருமான மாற்றம் என்ன?

($MPS=0.2$ என்க)


1. 200/=  2. 40/=  3. 128/=  4. 1000/=  5. 72/=

27. பின்வரும் செலவு வகைகளில் தேசிய கணக்கீட்டில் உள்ளடக்கப்படும் செலவு எது?

1. அரச உத்தியோகத்தருக்கான சம்பளக் கொடுப்பனவு.
2. இரண்டாந்தரப் பங்குச் சந்தையொன்றில் 1000ரூபா பெறுமதியான கம்பனிப் பங்குகளை கொள்வனவு செய்தல்.
3. வங்கித் துறையிடமிருந்து அரசாங்கம் பெற்ற குறுங்காலக் கடனுக்கான வட்டி செலுத்தல்கள்.
4. தளபாட மலிவு விற்பனையில் 25000ரூபா பெறுமதியான தளபாடங்களை கொள்வனவு செய்தல்.
5. ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர் பெறும் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. 


இப்பொருளாதாரத்தின் மொத்த முதலீடு என்ன?

1. 500/= 2. 2000/= 3. 1000/= 4. 1500/= 5. 1250/=

29. எளிய பொருளாதாரமொன்றில் 500 மில்லியன் ரூபாவில் அதிகரித்த முதலீட்டுச் செலவின் 2வது சுற்று எல்லை நுகர்வு நாட்ட விளைவும் எல்லை சேமிப்பு நாட்ட விளைவும் முறையே (MPC=0.9)

1. 45,450 2. 450,50 3. 364.5,40.5 4. 405,45 5. 405,50

30. வெளியீடு, வருமானம், செலவு ஆகிய மாற்றீடான அணுகு முறைகளைப் பயன்படுத்தி தேசிய உற்பத்தி பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் போது ஏன் ஒரே முடிவினைத் தருகின்றன?

1. ஒரு பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு, மொத்த வருமானம், மொத்தச் செலவீடு என்பன கட்டாயம் சமனாக உள்ளமையால்.
2. தேசிய வெளியீட்டின் பெறுமதி, அவ்வெளியீட்டிலிருந்து பெறப்படும் வருமானம், வெளியீட்டின் மீதான செலவு என்பன ஒரே விடயத்தைக் குறிப்பதனால்.
3. தேசிய வருமானச் சுற்றோட்டம் அவை சமனாவதை உறுதிப்படுத்துவதால்.
4. உற்பத்தி முழுவதும் கொள்வனவு செய்யப்படுவதால்.
5. காரணி வருமானங்கள் கூட்டிய பெறுமதியாக இருப்பதால்.

31. பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றினை இனங்காண்க.


1. மொத்த உள்நாட்டுச் செலவிலும் பார்க்க மொத்த உள்நாட்டு உற்பத்தி பெரிதாக இருக்கும் போது மொத்த உள்நாட்டு சேமிப்பிலும் பார்க்க மொத்த முதலீடு சிறிதாக இருக்கும்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவிலும் பார்க்க மொத்த உள்நாட்டுச் செலவு சிறிதாக இருக்கும் போது மொத்த முதலீட்டிலும் பார்க்க மொத்த உள்நாட்டு சேமிப்பு சிறிதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியமாக இருப்பின் மொத்த உள்நாட்டுச் சேமிப்பிலும் பார்க்க மொத்த தேசிய சேமிப்பு சிறிதாக காணப்படும்.
4. விலை உறுதிப்பாடு அற்ற நிலை பேரினப் பொருளாதார சமநிலையாகும்.
5. வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பவற்றின் பெறுமதி சந்தையில் கூட்டிய பெறுமதியாக காணப்படுகிறது.

32. பின்வரும் வரைபடத்தை கருதுக.




y என்ற வருமான வட்டத்தில்
1. வருமானம் நுகர்வுக்குச் சமனாக உள்ளது.
2. மொத்த வருமானத்திலும் மொத்த செலவு அதிகமாக இருப்பதால் வருமானம் அதிகரிக்கும்.
3. திட்டமிட்ட முதலீடு சேமிப்புக்கு சமனாக உள்ளது.
4. சேமிப்பிலும் பார்க்க திட்டமிட்ட முதலீடு உயர்வாக உள்ளது.
5. சேமிப்பு பூச்சியமாக உள்ளது.

33. ஒரு பொருளாதாரக் கருத்தில் பின்வருவனவற்றுள் எது தேறிய முதலீட்டில் உள்ளடக்கப்படும்?
1. மருந்துப் பொருட்களின் மீது அரசாங்கச் செலவீடு
2. வரையறுத்த பொதுக்கம்பனிகளால் வெளியிடப்படும் பங்குகளின் கொள்வனவு.
3. தேசிய சேமிப்பு வங்கியில் நுகர்வோரது சேமிப்புகள்
4. பழைய உபகரணங்களுக்குப் புதியவற்றைப் பதிலீடு செய்தல்.
5. புதியதொரு கைத்தொழில் பேட்டையை நிர்மாணித்தல்.

34. T=50 ஆகவும், நுகர்வுச் சார்பு C=0.75 (Y-T)+100 ஆகவுமிருக்குமாயின், சேமிப்புச்சார்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. $S=0.75(Y-T)-100$ 2. $S=0.75(Y-T)+150$
3. $S=0.25(Y-T)-100$ 4. $S=0.25(Y-T)-175$
5. $S=-0.25(Y-T)+100$

35. பின்வருவனவற்றுள் எது உண்மையற்றது?
   1. $Y=C+I+G+X-M$
   2. $I+G+X=S+T+M$
   3. $Y=C+I+G+NX$ (NX = தேறிய ஏற்றுமதிகள்)
   4. $Y+M=C+I+G+X$
   5. $Y=C+S+T$

36. பின்வருவனவற்றுள் எது தரப்பட்ட ஒரு ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளப்படும்?
   1. கம்பனி ஒன்றினது 1000பங்குகளின் கொள்வனவு
   2. பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் ஒரு தரகு நிறுவனத்திற்கு ஒருவன் வாங்கிய பங்குகளின் பெறுமதியில் 2% வீதத்தைச் செலுத்துதல்.
   3. ஓய்வு பெற்ற ஒருவர் அரசாங்க சேவையாளர் பெறும் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு.
   4. பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பெறும் மாதாந்த புலமைப்பரிசில் படி
   5. திறைசேரி உண்டியல்களின் மீது அரசாங்கம் செலுத்தும் வட்டிக்கொடுப்பனவு.

37. தரப்பட்ட ஒரு பொருளாதாரம் தொடர்பாக பின்வருவனவற்றைக் கருதுக.
   ஏற்றுமதிகள் = 300, இறக்குமதிகள் =400, வரிகள் =1100, அரசாங்கச் செலவீடுகள் = 1400, சேமிப்பு = 900
   இப்பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம் யாது?
   1. 600 2. 700 3. 900 4. 1100 5. 1300

38. அரசாங்கமும் வெளிநாட்டுத்துறையும் இல்லாத ஒரு எளிய பேரினப் பொருளாதார மாதிரியினைக் கருதுக. சேமிப்புச்சார்பு $S=-300+0.1Y$ யாக வரையறுக்கப்படும் நிலையில், முதலீடு 200 ஆல் அதிகரிக்குமாயின் நுகர்வு எவ்வளவால் அதிகரிக்கும்?
   1. 180 2. 200 3. 1800 4. 2000 5. 2100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. திறந்த பொருளாதார மொன்றின் கீழ்வரும் சேர்மானங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமமானதாக அமைவது எது?

1. C+G+I  2. C+G+I+X  3. $C+G+I+X_1-M_1$
4. C+G+I+X-M

C- நுகர்வாகவும், G-அரசாங்க செலவாகவும் I முதலீடாகவும் X,M என்பன முறையே பொருட்கள் சேவைகள் ஏற்றுமதியுமாகவும் இறக்குமதிமாகவும் $X_1$-$M_1$ என்பன முறையே காரணிச் சேவைகள் அல்லாத ஏற்றுமதியும் இறக்குமதியுமாக அமைகின்றன.

40. அரசாங்கமும் வெளிநாட்டு வர்த்தமுமற்ற எளிய பொருளாதாரம் ஒன்றின் வெளியீடு சமநிலையில் உள்ளது என அனுமானித்துக்கொள்க. நிறுவனத்துறையினது முதலீட்டில் வீட்டுத்துறையினரது சேமிப்புக்கு ஏற்றவாறான அதிகரிப்பு ஏற்படாத பட்சத்தில் இந்தச் சமநிலைக்கு நிகழுவது யாது?

1. முதலீட்டு மட்டத்தை உணர்த்துவதற்கு அரசாங்கம் தலையிடும். எனவே சேமிப்புக்கு சமமாக முதலீடு தொடர்ந்து இருக்கும்.
2. நிறுவனங்கள் முன்னர் போலவே அதே வெளியீட்டினை தொடர்ந்து உற்பத்தி செய்வதுடன் விற்பனையையும் மேம்படுத்தும் எனவே சமநிலையானது மாற்றமின்றி இருக்கும்.
3. முதலீட்டை விடவும் சேமிப்பு அதிகரிப்பதனால் வருமானச் சுற்றோட்டம் சுருங்குவதுடன் வருமான மட்ட சமநிலையும் வீழ்ச்சியடையும்.
4. மேலதிக சேமிப்பானது வட்டி வீதத்தைக் குறைத்து மூலதன ஊக்குவிப்பினை ஏற்படுத்துவதுடன் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த மாட்டாது.

41. கீழ்வரும் கூற்றுக்களில் பேரினப்பொருளாதாரச் சமநிலை நிலவுவதனை சரியாக விளக்கும் கூற்று எது?

1. இது பணவீக்கமற்ற ஸ்திரமான ஒரு நிலையாகும்.
2. இது உற்பத்தியின் உத்தம மட்டத்தில் அமைந்த ஒரு நிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இது வருமான வெளியீட்டு மட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகள் செயற்படாத ஒரு நிலையாகும்.
4. இது நிறைதொழில் மட்டம் நிலவும் ஒரு நிலையாகும்.

42. பின்வரும் கூற்றுக்களில் எது காரணிச் செலவு விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை சிறப்பாக வரைவிலக்கணப்படுத்துகின்றது.
1. குறிப்பிட்ட ஒரு காலத்து உள்நாட்டு உற்பத்தி செய்யப்பட்ட மொத்த வெளியீடு (தேறிய மறைமுக வரிகள் கழிவாக சந்தை விலைகளில் கணிப்பிடப்படுதல்)
2. குறிப்பிட்ட காலப்பகுதியில் (தேய்வுப்பெறுமானம் உட்பட) உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் காரணிகளின் மொத்தப் பெறுமதி
3. உற்பத்தியில் மானியங்கள் உட்படவும் மறைமுக வரிகள் நீங்கலாகவும் கூட்டப்படும் பெறுமதி.
4. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீட்டினதும் நுகர்வு செய்யப்பட்ட வெளியீட்டினதும் பெறுமதி.

43. மொத்தத் தேசிய உற்பத்தியின் உள்ளார்ந்த விலைச்சுட்டெண் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது சிறந்த வரைவிலக்கணமாக கருதப்படலாம்?
1. நுகர்வோர் விலைகளும் உற்பத்தியாளர்கள் விலைகளும் உள்ளடக்கியதாக கணிக்கப்பட்ட விலைக்குறிகாட்டி.
2. நடைமுறை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியினை நிலையான விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தியாகப் பெறுவதற்கு வெவ்வேறு விலைக் குறிகாட்டிகளினால் சுருக்கி நிலையான மொத்தத் தேசிய உற்பத்தி கிடைக்கப்பெற்ற பின்னர் வருகின்ற விலைக்குறிகாட்டி.
3. நாட்டில் நுகர்வு செய்யப்படும் எல்லாப்பொருள்களையும் சேவைகளையும் உள்ளடக்கிய மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத ஒரு விலைக் குறிகாட்டி.
4. அனைத்துப் பொருட்கள் சேவைகளினதும் நிறைப்படுத்திய சராசரி விலைச்சுட்டியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. வெளியீடு, வருமானம், செலவு ஆகிய மாற்றீடான அணுகு முறைகளைப் பயன்படுத்தி தேசிய உற்பத்தி பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் போது ஏன் ஒரே முடிவினைத் தருகின்றன?

1. ஒரு பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு, மொத்த வருமானம், மொத்த செலவீடு ஆகியவை கட்டாயமாக சமனானவையாக இருப்பதனால்.
2. இம்மதிப்பீடுகளில் வித்தியாசம் ஏற்படின் அவை புள்ளி விபர முரண்பாடுகளினால் ஏற்படுபவையாகக் கருதப்படுவதனால்.
3. தேசிய வெளியீட்டின் பெறுமதி, அவ்வெளியீட்டிலிருந்து பெறப்படும் வருமானம். அவ்வெளியீட்டின் மீதான செலவீடு ஆகியவை ஒரே விடயத்தைக் குறிப்பதனால்.
4. வருமானச் சுற்றோட்டம் அவையெல்லாம் சமனாவதனை உறுதிப்படுத்துவதனால்.

45. நீர் இணங்கக் கூடியதாகவுள்ள கூற்றினை இனங்காண்க.

1. மொத்தத் தேசிய செலவு என்பது பொருளாதாரமொன்றின் நுகர்வு, முதலீட்டுச் செலவுகள் என்பவற்றின் கூட்டுத் தொகையாகும்.
2. மொத்த உள்நாட்டுச் செலவிலிருந்து இறக்குமதிகளின் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பெறலாம்.
3. மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து மூலதனச் சாதனங்களின் பெறுமானத் தேய்வினைக் கழிக்கும் பொழுது தேறிய உற்பத்தி பெற்றுக்கொள்ளப்படும்.
4. உற்பத்தியிலிருந்து தோற்றுவிக்கப்படும் கூலிகள், வாடகை, வட்டி, இலாபங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகை மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனாகும்.

46. சரியான கூற்றாக உங்களால் கருதப்படுவதனை இனங்காண்க?

1. மொத்த உள்நாட்டுச் செலவீடு உள்நாட்டு உற்பத்தியினை கொள்வனவு செய்வதற்கான செலவாகும்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டு வர்த்தக நிலுவையினைக் கூட்டுமிடத்து கிடைப்பது மொத்தத் தேசிய உற்பத்தி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வருமான அணுகுமுறைகளைப்பயன்படுத்தி தேசிய உற்பத்தியினை மதிப்பிடும் பொழுது உழைப்பு வருமானங்களே கணக்கில் எடுக்கப்படும்.
4. தேறிய தேசிய உற்பத்தியினுள் பெறுமானத்தேய்வு உள்ளடங்குகின்றது.

47. ஒரு நாட்டின் தேசிய உற்பத்தியினை, செலவீட்டு முறையினைப் பயன்படுத்தி மதிப்பிடும் பொழுது நீக்கப்படும் செலவீட்டுக்கூறு எது?
1. போர் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு
2. தொழில் நிறுவனங்களினால் இடைப்பொருள்களின் மீது செய்யப்பட்ட செலவு.
3. வெளிநாட்டிலிருந்து அரசாங்கத்தினால் கடன் பெற்றுச் செய்யப்பட்ட செலவு.
4. மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம்.

48. பேரினப் பொருளாதாரச் சமநிலை என்பதன் பொருள் என்ன? நீங்கள் ஏற்றுக்கொள்ளும் விடயத்தினை இனங்காண்க.?
1. ஒரு பொருளாதாரத்தில் பொருட் சந்தைகளும், காரணிச் சந்தைகளும் சமநிலையிலிருத்தல்.
2. சேமிப்பு முதலீட்டிற்கு சமனாகவிருத்தல்.
3. ஒரு பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு தளம்பலில்லாமல் உறுதியாகவிருத்தல்.
4. விலையின் உறுதிப்பாடும், அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக்குறை இல்லாத நிலைமையும்.


49. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து பெறுகின்ற வருமானங்களில் பின்வரும் எந்த வருமானம் சேர்க்கப்படுவதில்லை.
1. அரசாங்கப்படுகடன் மீது செலுத்தப்படும் வட்டி
2. தொழில் நிறுவனங்களின் பங்கிடப்படாத இலாபங்கள்
3. பங்குலாபம்
4. அரசாங்கம் சொத்து வருமானம்

50. மூடிய பொருளாதாரத்தில் அரசாங்கம் செலவு செய்கின்றது. ஆனால் வரிவிதிக்கவில்லை என்க. அரசாங்க செலவீடு 200 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கிறது. MPC =0.8 ஆகவும் I=0.1y ஆகவும் இருப்பின் வருமானம் எவ்வளவால் அதிகரிக்கும்.
1. 1000 2. 40 3. 600 4. 10 5. 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. அரச தலையீடற்ற மூடிய பொருளாதாரத்தின் தேசிய வருமான சமநிலையைக் காட்டும் வருமானம் எது?




1. A
2. B
3. C
4. $E_1$
5. $E_3$

52. வருமான வழியில் தேசிய கணக்கீட்டை மதிப்பிடும் போது எது சேர்த்துக் கொள்ளப்படும்.

1. ஓய்வூதியம் 2. உணவு முத்திரை 3. அரச சொத்து வருமானம்
4. கடன்களின் வட்டி 5. மீள் விற்பனை வருமானம்

53. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?

1. சந்தை விலை மொத்த உள்நாட்டு உற்பத்தியும் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவும் சமனாக காணப்படும்.
2. மூடிய பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டுச் செலவும் மொத்த தேசிய உற்பத்தியும் சமனாக அமையும்.
3. மொத்தத் தேசிய உற்பத்திகளின் சராசரி விலை மட்டங்களை தேசிய உள்ளார்ந்த விலைச்சுட்டெண் மதிப்பிடுகிறது.
4. மொத்த உள்நாட்டு வருமானத்தினுள் பெறுமானத் தேய்வு உள்ளடங்குவதில்லை.
5. வளக்கிடைப்பனவுகளும் வளப்பயன்பாடுகளும் எப்போதும் சமனாகும்.

54. மொத்தத்தேசிய வருமானத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்பிடுவதற்கான சீராக்கம் எது?

1. வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம் சேர்க்கப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் நீக்கப்படுகிறது.
2. வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம் நீக்கப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் சேர்க்கப்படுகிறது.
3. வெளிநாட்டுக்கு கிடைத்த தேறிய காரணி வருமானம் கூட்டப்படுகிறது.
4. பெறுமானத்தேய்வு நீக்கப்படுகின்றன.
5. பொருட்கள் காரணி அல்லாப் பணி தேறிய ஏற்றுமதி நீக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. மூடிய பொருளாதாரத்தில் குறித்த தேறிய வருமான மட்டத்தை அடைய மூலதனத்தை திரட்டுவதற்கு.

1. சேமிப்புக்களுக்கு வட்டி செலுத்தல் வேண்டும்.
2. பணப் பொருளாதாரம் இருத்தல்வேண்டும்.
3. நிகழ்கால நுகர்வை தியாகம் செய்தல்வேண்டும்.
4. தனியார் முதலீடுகள் அதிகரித்தல் வேண்டும்.
5. சேமிப்பைக் குறைத்தல் வேண்டும்..

56. 2005ன் மீள் வகைப்படுத்தலின் படி பணிகள் துறைக்குள் அடங்காதது எது?

1. மொத்த சில்லறை வர்த்தகமும் சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும்
2. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்
3. தயாரிப்புத் தொழில்
4. நிதியியல் பணிகள், உண்மைச் சொத்து, வியாபாரப் பணிகள்.
5. பொதுநிர்வாகம், ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும்.

57. மொத்தத் தேசிய செலவிடத்தக்க வருமானத்திலிருந்து தேறிய வெளிநாட்டு மாற்றல்களை நீக்கவருவது.

1. மொத்த தேசிய வருமானம்
2. மொத்த உள்நாட்டு வருமானம்
3. தேறிய தேசிய வருமானம்
4. குடித்தன காரணி வருமானம்
5. குடித்தன வருமானம்

58. காரணி வருமானங்கள் மொத்த வெளியீட்டுப் பெறுமதிக்கு சமனாகும் என்பதை வெளிக்காட்டுவது.

1. காரணி வருமானம் = மொத்தநுகர்வு + மொத்த முதலீடு
2. கூட்டிய பெறுமதி = நுகர்வு + சேமிப்பு
3. வருமானம் = வெளியீடு
4. கூட்டிய பெறுமதி = வாடகை +கூலி +வட்டி + இலாபம்
5. வெளியீடு = காரணி வருமானம் + மாற்றல் வருமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. தேசிய வருமானச் சுற்றோட்டத்துடன் தொடர்பற்றது.

1. கேள்வி நிரம்பல் 2. உட்பாய்ச்சல் 3. பணரீதியான சுற்றோட்டம்
4. வெளிப்பாய்ச்சல் 5. மெய்ரீதியான சுற்றோட்டம்

60. காரணி விலைக்கும் சந்தைவிலைக்கும் இடையிலான வேறுபாட்டைத் தீர்மானிப்பது.

1. நேரில்வரி 2. மானியம் 3. நேர்வரி
4. நேர்வரியும் மானியமும் 5. தேறிய நேரில்வரி

61. தேறிய உள்நாட்டு உற்பத்தி மீதான செலவுக்குச் சமனானது.

1. C+G+I+(X-M) 2. C+G+I
3. C+G+I+X-M+D 4. C+I+G+X-(M+D)
4. C+I+G+X-M+NF

62. வருமானம் ரூபா 4000 ஆகவுள்ளபோது APS =0.2 ஆகவும் MPC = 0.75 ஆகவும் இருப்பின் சேமிப்புச்சார்பு.

1. S=4000+o.25y 2. S=-200+0.25y
3. S=200+0.75y 4. S=4000+0.2y
5. S=-4000+0.8y

63. ஒரு பொருளாதாரத்தின் சராசரி நுகர்வு நாட்டமும் எல்லை நுகர்வு நாட்டமும் எப்போது சமனாக காணப்படும்.

1. சராசரி நுகர்வு நாட்டம் மாறாதிருத்தல்.
2. சராசரி நுகர்வு நாட்டம் அதிகரித்தல்.
3. தன்னிச்சையான நுகர்வு இல்லாதிருத்தல்
4. நுகர்வுக்கோடு உற்பத்தி தானத்திற்கு மேலாக ஆரம்பித்துச் செல்லல்.
5. நுகர்வு குறைவடைதல்.

64. ஒரு மூடிய பொருளாதாரத்தில் அதிகரித்த அரசாங்க செலவில் ஏற்படும் 100ரூபா மாற்றம் சமநிலைத்தேசிய வருமானத்தை 500 ரூபாவால் அதிகரிப்பின் அரசாங்க செலவினப் பெருக்கி யாது?

1. 0.2 2. 5 3. 1 4. $^1/_5$ 5. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. பின்வருவனவற்றில் எது தேசிய கணக்கீட்டு நடவடிக்கையில் சேர்க்கப்படுவதில்லை.

1. வீட்டுப்பணிப்பெண்கள் ஆற்றும் சேவைகள்
2. இலாபம்
3. மின்வலு, நீர்
4. சூழல்மாசடைதல், இயற்கை வளங்கள் தேய்வடைதல்.
5. அரசின் பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு.

66. நாட்டின் தேசிய கணக்கீட்டில் வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியமாக இருப்பின்,

1. பொருட்கள் நிலுவை பற்றாக்குறையாக காணப்படும்.
2. தேறிய காரணி அல்லாப்பணி எதிர்க்கணியமாக இருக்கும்.
3. GDP இனை விட GNP உயர்வாகும்.
4. சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையாக காணப்படும்.
5. சென்மதி நிலுவையின் வருமானக் கணக்கு நிலுவை எதிர்க்கணியமாக அமையும்.

67. தேசிய கணக்கீட்டின் பொதுநுகர்வு வரவு செலவுத்திட்டத்தில் கருதப்படுவது.

1. வட்டிக் கொடுப்பனவுகள்
2. உண்மைச் சொத்துக் கையேற்பு
3. பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு
4. நடப்பு மாற்றல்களும் உதவு தொகைகளும்.
5. மூலதன மாற்றல்கள்

68. பொருளாதாரமொன்றின் மொத்தக் கேள்வியைக் குறைப்பது

1. சேமிப்பு நாட்டத்தில் ஒரு வீழ்ச்சி
2. மிகைநிலைப் பாதீட்டை அதிகரித்தல்.
3. நுகர்வுச் செலவைக் குறைத்தல்.
4. தேறிய ஏற்றுமதியை அதிகரித்தல்
5. வர்த்தக நிலுவையினை பூச்சியமாக வைத்திருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


69. மூடப்பட்ட பொருளாதார மொன்றின் MPC மாறாது சமனாக உள்ளது. அரசு வரிவிதிப்பை 5000 மில்லியன் ரூபாவாலும் அரச செலவீட்டை 5000 மில்லியன் ரூபாவாலும் அதிகரிப்பின் தேசிய வருமானம்.

1. 5000 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கும்.
2. 5000 மில்லியன் ரூபாவால் குறையும்
3. 5000 மில்லியன் ரூபாவிலும் குறைவாக அதிகரிக்கும்.
4. 5000 மில்லியன் ரூபாவிலும் கூடுதலாக அதிகரிக்கும்.
5. தொடர்ந்து மாறாதிருக்கும்.

70. எளிய பொருளாதாரமொன்றில் எல்லை நுகர்வு நாட்டத்திற்கும் (MPC) பெருக்கிக்கும் இடையிலான தொடர்பு.

1. எதிர்க்கணியத் தொடர்பு
2. நேர்க்கணியத் தொடர்பு
3. பூச்சியத் தொடர்பு
4. MPC அதிகரிக்க பெருக்கி குறையும்.
5. MPC குறைவடைய பெருக்கி மாறாதிருக்கும்.

71.




A புள்ளியிலுள்ள "Y" என்ற வருமானத்தில்

1. திட்டமிட்ட நுகர்வு வருமானத்திலும் உயர்வாக உள்ளது.
2. திட்டமிட்ட நுகர்வு வருமானத்திலும் குறைவாக உள்ளது.
3. திட்டமிட்ட நுகர்வும் வருமானமும் சமனாக இருத்தல்.
4. திட்டமிட்ட சேமிப்பு எதிர்க்கணியமாக இருத்தல்.
5. திட்டமிட்ட சேமிப்பு நேர்க்கணியமாக இருத்தல்.

72. குடித்தன செலவிடத்தக்க வருமானத்திற்கான (yd) சமன்பாடு அல்லாதது.

1. yd= Y-T  2. yd = y-T+R

3. yd = C+S  3. yd = T+R+Y  5. yd = Y-NT



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. தேசிய வருமான மதிப்பீட்டினுள் இடம்பெறாத குடித்தன வருமானத்தினுள் உள்ளடங்கும் வருமானம் எது?

1. மாற்றல் வருமானம்
2. பகிரப்படாத இலாபம்
3. வர்த்தக வரி
4. பெறுமானத் தேய்வு
5. அரசின் வரியல்லா வருமானம்

74. மொத்த சேமிப்பின் உடமையாளர்கள்

1. விவசாயத்துறை, கைத்தொழில்துறை. சேவைகள் துறை
2. தனியார்துறை, அரசதுறை
3. தனியார்துறை, வெளிநாட்டுத்துறை
4. வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை
5. வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை, வெளிநாட்டுத்துறை

75. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவையினுள் அடங்காத நிலுவை.

1. பொருட்கள் நிலுவை 2. பணிகள் நிலுவை
3. வருமான நிலுவை 4. நிதியியல் நிலுவை
5. நடைமுறை மாற்றல் நிலுவை

76. மொத்த உள்நாட்டுச் செலவுக்கு சமமானதாக அமைவது எது?

1. C+G+I 2. C+G 3. C+G+I+X-M
4. I+G=S+T 5. C+G+I+NX

77. நாட்டுமக்களின் வாழ்க்கைத் தர மாற்றங்களை சிறப்பாக அளவிடும் குறிகாட்டி.

1. பணத்தலா வருமானம்
2. மெய்மொத்தத் தேசிய உற்பத்தி
3. மெய்த்தலா வருமானம்
4. ஊழியப்படை மெய்த்தலாவருமானம்
5. நடப்பு விலை மொத்த தேசிய உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. தேசிய கணக்கீட்டு மதிப்பீட்டுனுள் சேர்த்துக்கொள்ளப்படும் நடவடிக்கை.
   1. மாற்றல் வருமானங்கள்
   2. பயன்தரா செலவுகள்
   3. இடைக் கொடுப்பனவு
   4. இடைநிலைப் பொருட்கள் சேவைகள் மீதான செலவீனம்
   5. முடிவுப் பொருட்கள் சேவைகள் மீதான செலவீனம்

79. மொத்த உள்நாட்டுச் செலவினை விட மொத்தத் தேசிய உற்பத்தி உயர்வாக இருக்கக் காரணம்.
   1. காரணிப்பணி இறக்குமதியை விட காரணிப் பணி ஏற்றுமதி பெரிதாக இருத்தல்.
   2. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணிவருமானம் நேர்க்கணியமாக இருத்தல்.
   3. பொருட்கள் காரணியல்லா பணிகளின் தேறிய ஏற்றுமதி எதிர்க்கணியமாக இருத்தல்.
   4. பொருட்கள் சேவைகள் நிலுவை நேர்க்கணியமாக இருத்தல்.
   5. பொருட்கள் சேவை ஏற்றுமதியை விட பொருட்கள் சேவை இறக்குமதி உயர்வாக இருத்தல்.

80. பின்வருவனவற்றுள் பேரினப் பொருளாதார ஆய்வாக கருதமுடியாதது.
   1. மொத்த தேசிய வருமானம்
   2. நாட்டின் பொதுவிலை மட்டம்
   3. தொழில் வாய்ப்பு
   4. கேள்விக்கோட்பாடு
   5. மொத்த நிரம்பல்

81. குடித்தன சேமிப்புக்கு ($S_H$) பொருத்தமற்ற சமன்பாடு எது?
   1. S=Y-C
   2. S=yd-C
   3. S=Y+T-C
   4. S=y-T-C
   5. S=Y-(T+C)

82. பின்வருவனவற்றுள் பிழையான சமன்பாடு
   1. காரணி விலைத்தேறிய உள்நாட்டு உற்பத்தி
      = வாடகை + கூலி + வட்டி + இலாபம்
   2. காரணிவிலை = சந்தைவிலை + தேறிய மானியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மெய்த்தேசிய வருமானம் - மாறாவிலைத்தேசிய உற்பத்தி = ஏற்றுமதிகளால் வர்த்தகமாற்று விகிதத்தில் எழுந்த விளைவுகள்

4. மொத்த தேசிய சேமிப்பு = மொத்ததேசிய செலவிடத்தக்க வருமானம் ~ மொத்த நுகர்வு

5. காரணிவிலை மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு

83. தேறிய மானியம் எதிர்க்கணியமாக காணப்படின்

1. சந்தைவிலை GDP இனைவிட காரணிவிலை GDP பெரிதாக காணப்படும்.
2. காரணிவிலை GNP இனைவிட சந்தைவிலை GNP சிறிதாக காணப்படும்.
3. காரணிவிலை NNP இனைவிட சந்தைவிலை NNP பெரிதாக காணப்படும்.
4. நேரில் வரியினைவிட மானியம் அதிகமாக இருக்கும்.
5. மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு குறைவாக காணப்படும்.

84. மொத்த முதலீட்டைவிட நிலையான முதலீடு உயர்வாக இருப்பின்

1. மொத்த உள்நாட்டு சேமிப்பு உயர்வாகும்.
2. இருப்புக்கள் மாற்றம் எதிர்க்கணியமாகும்.
3. மொத்த தேசிய சேமிப்பு குறைவாகும்.
4. இருப்புக்களின் மாற்றம் நேர்க்கணியமாகும்.
5. மொத்த உள்நாட்டுச் செலவு அதிகமாகும்.


85. மொத்த உள்நாட்டு வருமானத்துக்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் இடையிலான வேறுபாடு.

1. இருப்பு மாற்றம்
2. தேறிய காரணிப்பணி ஏற்றுமதி
3. தேறிய பொருட்கள் காரணி அல்லாப் பணி இறக்குமதி
4. தேறிய பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி
5. தேறிய வெளிநாட்டு முதலீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. பின்வரும் வரைபின் அடிப்படையில் தன்னிச்சையான நுகர்வு, தூண்டப்பட்ட நுகர்வு என்பன முறையே




1. AD, AE
2. EF, AD
3. CG, HI
4. FE, BE
5. HG, HI

87. அரச தலையீடற்ற மூடிய சிக்கனமற்ற பொருளாதாரத்தில் வருமானம் பயன்படுத்தப்படுவது.

1. நுகர்வுக்கு மட்டும்
2. நுகர்வு, சேமிப்பு, வரி என்பவற்றுக்கு
3. சேமிப்புக்கு மட்டும்
4. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும்
5. நுகர்வு, வரி என்பவற்றுக்கு மட்டும்

88. சாதனப் பயன்பாட்டிற்கு சமனாக அமையாதது

1. தனியார் நுகர்வு + அரச நுகர்வு + மொத்த முதலீடு + பொருட்கள் காரணியல்லாபணி ஏற்றுமதி
2. மொத்த நுகர்வு + மொத்த முதலீடு + பொருட்கள் காரணியல்லா பணி ஏற்றுமதி
3. மொத்த உள்நாட்டு செலவு − பொருட்கள் காரணியல்லா பணி இறக்குமதி
4. மொத்த உள்நாட்டு வருமானம் + பொருட்கள் காரணியல்லா பணி இறக்குமதி
5. மொத்த உள்நாட்டுச் செலவு + பொருட்கள் காரணியல்லா பணி ஏற்றுமதி

89. காரணி அல்லா சேவையினுள் உள்ளடங்காத விடயம் எது?

1. போக்குவரத்து
2. தொடர்பாடல் பணிகள்
3. தூதுவராலயச் செலவுகள்
4. வணிகப் பொருட் காப்புறுதி
5. இலாபம், பங்கிலாபம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. திறந்த பொருளாதாரத்தின் உட்பாய்ச்சல்களை வெளிப்பாய்ச்சல் களுக்கு சமப்படுத்துவதில் தவறானது.

1. I+G+X= S+T+M  2. I+G=(S+T+M)-X
3. I+G+NX=S+T  4. S+(T-R)+M=I+G+X
5. I+G = S-T+R+M-X

91. I=a+by எனும் முதலீட்டுச் சார்ப்புக்குப் பொருத்தமான வரைபை இனங்காண்க.



92. அரச தலையீடற்ற மூடப்பட்ட பொருளாதாரத்தில் முதலீடு 200 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் போது சமநிலைத்தேசிய வருமானம் 2000 மில்லியன் ரூபாவால் அதிகரித்தது. MPC யாது?

1. 0.10  2. 10  3. 0.90  4. 0.8  5. 0.2

93. தேசிய உற்பத்தியினை கணிப்பீடுவதில் ஏற்படும் இரட்டை எண்ணலைத் தவிர்ப்பதற்கு பயன்படுத்தும் சிறந்த முறை எது?

1. இறுதி உற்பத்தி முறை  2. முடிவுப் பொருட்கள் சேவைகள்
3. இடைக் கொடுப்பனவு  4. காரணி வருமானங்கள்
5. மாற்றல் வருமானங்கள்

94. பின்வருவனவற்றுள் சரியான கூற்றினை இனங்காண்க.

1. பொருளாதாரத் துறைகளின் மொத்த கூட்டப்பட்ட பெறுமானமே நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. நடப்பு விலைகளில் ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பின் அடிப்படையிலேயே பொருளாதார வளர்ச்சி தீர்மானிக்கப்படுகிறது.

03. வரி, அரச செலவீடு, சேமிப்பு என்பன தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் பின்வாங்கல்களாகும்.

04. வாழ்க்கைத் தரத்தை அளவிடுவதில் தலாவருமானம் திருப்திகரமான குறிகாட்டியாகும்.

05. வாழ்வாதார நடவடிக்கைகள் தேசிய மதிப்பீட்டினுள் உள்ளடக்கப்படுகின்றன.

95. வருமான வழியிலான தேசிய கணக்கீட்டில் உள்ளடக்கப்படாத வருமானம்.

01. ஊழியருக்கான சம்பளம்

02. குழந்தை பராமரிப்புக்கென பணியாளுக்கு வழங்கப்பட்ட சம்பளம்

03. சீட்டிழுப்பொன்றில் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம்.

04. செலுத்தப்பட்ட வருமான வரி

05. பகிரப்படாத இலாபம்.

96. மூடிய பொருளாதார பெருக்கி அல்லாதது.

1. $\frac{1}{MPS+MPT}$ 2. $\frac{1}{1-MPC}$ 3. $\frac{1}{MPS+MPC(MPT)}$

4. $\frac{1}{MPS(1-MPT)+MPT}$ 5. $\frac{1}{(1-MPC)(1-MPT)+MPT}$

97. இலங்கையின் தேசிய கணக்கீட்டை மேற்கொள்ளும் நிறுவனங்களை உள்ளடக்கிய தொகுதி எது?

1. இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி

2. இலங்கை மத்திய வங்கி, குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

3. குடிசனமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், மக்கள் வங்கி

4. இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

5. இலங்கை மத்தியவங்கி, தொழில் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. வருமானம் ரூபா 4000 ஆகவுள்ளபோது சராசரி சேமிப்பு நாட்டம் **(APC)** 0.2 எனவும் எல்லைசேமிப்பு நாட்டம் **(MPS)** 0.25 எனவும் இருப்பின் சுயேட்சை நுகர்வு யாது?

1. 800 2. 3200 3. 3000 4. 200 5. 1000


99. தேசிய கணக்கீட்டின் பொதுநுகர்வு வரவு செலவுத் திட்டத்தில் கருதப்படுவது.

1. நிதிச் சொத்துக்களின் கையேற்பு
2. வட்டிக் கொடுப்பனவு
3. இடைநிலைப் பொருட்கள் சேவைகள் மீதான செலவு
4. நடப்பு மாற்றுக்களும் உதவு தொகைகளும்
5. பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு

100. மூடிய பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி **(AD)** தேசிய கணக்கீட்டில் எதற்குச் சமனானது.

1. மொத்த உள்நாட்டுச் செலவு
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி
3. தேறிய தேசிய வருமானம்
4. மொத்த தேசிய செலவு
5. மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு

101. கீழ்வரும் வரிப்படம் ஒரு பொருளாதாரத்தின் நுகர்வுக் கோடுகளாகும்.





இங்கு நுகர்வுச் சார்பு $C_1$ இலிருந்து $C_2$ இற்கு வலது புறம் நகர்வடைய பொருளாதாரத்தின் **MPC, MPS,** பெருக்கி (K) என்பன எவ்வாறு மாற்றமடையும்.

| MPC | MPS | K |
|---|---|---|
| 1. அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் |
| 2. குறையும் | அதிகரிக்கும் | குறையும் |
| 3. அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4. குறையும் | குறையும் | குறையும் |
| 5. அதிகரிக்கும் | குறையும் | மாறாது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102. பின்வரும் வரைபடம் ஒரு பொருளாதாரத்தின் சேமிப்பு மாற்றத்தின் போதான நுகர்வுச் சார்புகளாகும்.




இங்கு நுகர்வுக்கோடு $C_1$ இலிருந்து $C_2$ என இடதுபுறம் நகர்வடைய பொருளாதாரத்தின் MPS, முதலீட்டுப் பெருக்கி (k) என்பன எவ்வாறு மாற்றமடையும்.

| MPS | முதலீட்டுப்பெருக்கி |
|---|---|
| 1. குறையும் | குறையும் |
| 2. அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 3. அதிகரிக்கும் | குறையும் |
| 4. குறையும் | அதிகரிக்கும் |
| 5. மாறாது | மாறாது |

103. திறந்த பொருளாதாரத்தின் மொத்தச் செலவுக்குச் சமனாக இருப்பது எது?
1. மொத்த உள்நாட்டுச் செலவு
2. மொத்த தேசிய செலவு
3. மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு
4. மொத்தத் தேசிய உற்பத்தி மீதான செலவு
5. தேறிய தேசிய செலவு

104. ஒரு மூடிய பொருளாதாரத்தின் முதலீடு 200 மில்லியன் ரூபாவாலும் அரசாங்கச் செலவீடு 100 மில்லியன் ரூபாவாலும் அதிகரிக்கின்றது எனவும் MPS 0.25 எனவும் இருப்பின் சமநிலைத் தேசிய வருமானம் எவ்வளவால் அதிகரிக்கும்.
1. 800 2. 400 3. 1500 4. 1200 5. 300


105. வெளிநாட்டிற்கு அனுப்பிய தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியமாக காணப்படின்.
1. GDP இனை விட GNP சிறிதாக காணப்படும்.
2. GNY இனை விட GDY பெரிதாக காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. GDE இனை விட GDPE பெரிதாக காணப்படும்.
4. GDE இனை விட GNPE சிறிதாக காணப்படும்.
5. GDP இனை விட GNY பெரிதாக காணப்படும்.

106. பின்வரும் வரைபடத்தின் உதவியுடன் எல்லை முதலீட்டு நாட்டத்தைக் (MPI) காண்க.




1. 0.2  2. 5  3. 50
4. பூச்சியம்  5. 250

107. மேலுள்ள வரைபின்படி நுகர்வுச் சமன்பாட்டைத் தருக.
1. C=100+5y 2. C=150+0.8y
3. C=100+0.2y 4. C=100+0.8y 5.C=50+0.8y

108. மொத்த உள்நாட்டு வருமானமும் மொத்தத் தேசிய வருமானமும் சமனாக அமையாத சந்தர்ப்பம்.
1. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் பூச்சியமாக இருத்தல்.
2. காரணிப் பணி ஏற்றுமதியும் காரணிப்பணி இறக்குமதியும் ஒன்றுக்கொண்டு சமனாக இருத்தல்.
3. குறித்த பொருளாதாரம் மூடப்பட்ட பொருளாதாரம் உள்ளபோது
4. தேறிய காரணிப்பணி ஏற்றுமதி இல்லாதிருத்தல்.
5. பொருட்கள் காரணியல்லா பணி ஏற்றுமதியும் பொருட்கள் காரணியல்லா பணி இறக்குமதியும் சமனாக இருத்தல்.

109. சந்தைவிலை மொத்த உள்நாட்டு உற்பத்தியானது காரணிவிலை தேறிய உள்நாட்டு உற்பத்தியைவிட உயர்வாக இருக்க காரணங்கள்
1. பெறுமானத்தேய்வு
2. பெறுமானத்தேய்வு +மானியம்–நேரில்வரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வெளிநாட்டு தேறிய காரணி வருமானம் + தேறிய மானியம்

4. விடுமதி தேய்மானம் + தேறிய மறைமுக வரிகள்

5. நேரில்வரி – மானியம்

110. இரட்டை எண்ணல் பிரச்சனையை தீர்ப்பதற்கு பின்பற்றப்படும் சிறந்த வழிமுறை எது?

1. கூட்டிய பெறுமதி முறை
2. இறுதி உற்பத்தி முறை
3. காரணி வருமானங்களை சேர்த்தல்
4. இடைக் கொடுப்பனவுகளை நீக்குதல்
5. பயன்தரா செலவினங்களை சேர்த்தல்.

111. தேசிய கணக்கீட்டிற்கும் சென்மதி நிலுவைக்கும் தொடர்பற்ற சமன்பாடு

1. மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டுச் செலவு + பொருட்கள் பணிகள் நிலுவை

2. மொத்த தேசிய உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி + வருமான நிலுவை

3. மொத்த தேசிய உற்பத்தி = மொத்த உள்நாட்டுச் செலவு + பொருட்கள் பணிகள் வருமான நிலுவை


4. செலவிடத்தக்க மொத்த தேசிய உற்பத்தி = மொத்த உள்நாட்டுச் செலவு + நடைமுறைக் கணக்கு நிலுவை

5. மொத்த வளக் கிடைப்பனவு = மொத்த உள்நாட்டு உற்பத்தி + இறக்குமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு 112,113, 114 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க.




112. சராசரி நுகர்வு நாட்டம் (MPC) 1 இற்கு சமனாக உள்ள வருமான மட்டம்.

1. OK 2. OH 3. OL 4. HK 5. KL

113. சிக்கனமுடைய எளிய பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானத்தில் சேமிப்பு, நுகர்வு என்பன முறையே

1. ND, EL 2. DE, EL 3. BM, MK 4. EF, AF
5. BM, AM

114. பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம்

1. BK/OK 2. NL/OL 3. OH/AH 4. HA/HO
5. MK/HK

115. பின்வருவனவற்றில் தவறான கூற்றை இனங்காண்க.

1. நாட்டின் நடைமுறைக்கணக்கு நிலுவையே அந்நாட்டின் தேறிய வெளிநாட்டு முதலீடாகும்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவோடு பொருட்கள், சேவைகளின் தேறிய ஏற்றுமதிகளை கூட்டுவதன் மூலம் பெறப்படும் தொகை மொத்தத் தேசியச் செலவாகும்.
3. சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவிற்கு சமனாகும்.
4. வெளிநாட்டிற்கு அனுப்பிய தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியமாக இருப்பின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்க மொத்த தேசிய உற்பத்தி சிறிதாகும்.
5. தேறிய மறைமுக வரி நேர்க்கணியமாக இருப்பின் காரணி விலையிலும் பார்க்க சந்தை விலை பெரிதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. ஒரு பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் 0.75 எனவும் எல்லை முதலீட்டு நாட்டம் 0.2 எனவும் இருப்பின் முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி.

1. 4   2. 5   3. 0.25   4. 20   5. 2

117. மூடிய பொருளாதாரமொன்றில் எல்லை சேமிப்பு நாட்டம் 0.1 ஆகும். இப்பொருளாதாரத்தின் வருமானத்தை 2000 மில்லியன் ரூபாவால் அதிகரிப்பதற்குத் தேவைப்படும் அரசாங்கச் செலவீடு

1. 100   2. 200   3. 10   4. 20000   5. 2000

118. பின்வருவனவற்றுள் நுகர்வுச் செலவாகக் கருதக்கூடியது

1. ஒரு புதிய வீட்டைக் கொள்வனவு செய்தல்
2. விவசாயி ஒருவர் உழவு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தல்.
3. சிற்றுண்டிச் சாலையொன்றில் பீங்கான் பண்டங்கள் கொள்வனவு செய்தல்.
4. கடந்த ஆண்டினை விட தளபாட இருப்புக்கள் அதிகரித்தமை
5. காணி அபிவிருத்தியும் பயிர் நடுகையும் மீள்நடுகையும்.

119. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. GDP எப்போதும் GNP இற்கு சமனாக இருக்கும்
2. GDY எப்போதும் GNY இற்கு சமனாக இருக்கும்
3. GDE எப்போதும் GDPE இற்கு சமனாக இருக்கும்
4. NNP எப்போதும் NNY இற்கு சமனாக இருக்கும்
5. GDPE எப்போதும் GNPE இற்கு சமனாக இருக்கும்

120. உற்பத்திக் காரணிகள் காரணிச் சந்தையில்

1. நுகர்வுத் துறைக்கு சந்தைப்படுத்தப்படும்
2. நிதிச் சந்தைக்கு சந்தைப்படுத்தப்படும்
3. நிறுவனத் துறைக்கு சந்தைப்படுத்தப்படும்
4. பொருட் சந்தைக்கு சந்தைப்படுத்தப்படும்
5. மூலதனச் சந்தைக்கு சந்தைப்படுத்தப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121. பின்வரும் சமன்பாடுகளில் பிழையானது எது?

1. மொத்த தேசிய சேமிப்பு = மொத்த தேசிய செலவிடக் கூடிய வருமானம் - மொத்த நுகர்வு
2. மொத்த தேசிய சேமிப்பு = மொத்த சேமிப்பு - வெளிநாட்டு சேமிப்பு
3. மொத்த நுகர்வு = மொத்த உள்நாட்டு செலவு - மொத்த முதலீடு
4. செலவிடத்தக்க வருமானம் = சொந்த வருமானம் - நேரில் வரி

122. 2006இல் கைத்தொழில் துறையின் வளர்ச்சி வீதம்

1. 7.4%  2. 4.7%  3. 8.3%  4. 7.2%  5. 7%

123. விவசாயத் துறையினுள் உள்ளடக்காத விடயம்

1. வேளாண்மை  2. ஏற்றுமதிப்பயிர் பதனிடல்
3. விலங்கு வளர்ப்பு  4. மீன்பிடித்தல்  5. வேட்டையாடல்

124. தேசிய கணக்கீட்டின் குறைபாடு அல்லாதது.

1. வளர்த் தேய்வு கருத்திற் கொள்ளாமை
2. வாழ்வாதார நடவடிக்கைகள் சோத்துக்கொள்ளப் படாமையினால் குறைமதிப்பீடு ஏற்படுகிறது.
3. இரட்டை எண்ணல்.
4. புள்ளிவிபரக்குறைபாடு
5. காரணி வருமானப் பங்கீட்டை மதிப்பிடல்.

125. சந்தைவிலை மொத்த தேசிய உற்பத்தி என்பது

1. நேரில்வரி உள்ளடக்கப்பட்டும் மானியம் நீக்கப்பட்டும் மதிப்பிடப்படுவது.
2. காரணிவிலை GNP இலிருந்து தேறிய நேரில்வரி நீக்கிய பெறுமதியாகும்.
3. காரணிவிலை GDP உடன் தேறிய மானியம் கூட்டப்பட்டு மதிப்பிடுவதாகும்.
4. மானியங்களை உள்ளடக்கியும் நேரில்வரியினை நீக்கியும் மதிப்பிடப்படுவது.
5. மொத்தத் தேசிய உற்பத்தி மீதான செலவுக்கு சமனற்றுக் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பொருளாதாரம்

## அலகு — 04

01. பின்வருவனவற்றுள் சமூகநலப் பொருளை (Merit good) யும் பொதுப் பொருளையும் சரியாகக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

| சமூக நலப்பொருள் | பொதுப் பொருள் |
|---|---|
| 1. அரசாங்கத்தால் வழங்கப்படும் | தனியார் கம்பனிகளால் வழங்கப்படும் |
| 2. ஒரு செலவுடன் கூடியதாக வழங்கப்படும். | செலவில்லாமல் வழங்கப்படும் |
| 3. நிரம்பல் வரையறைக்குட்பட்டது | பூரண நெகிழ்வுள்ள நிரம்பலைக் கொண்டது. |
| 4. ஒருவரின் நுகர்வு ஏனையவர்களின் நுகர்வு வாய்ப்புக்களைக் குறைக்கும். | ஒருவரின் நுகர்வு ஏனையோரின் நுகர்வு வாய்ப்புக்களை குறைக்காது. |
| 5. விலை அறிவிடமுடியாது | விலை அறவிடப்பட முடியும். |

02. இலங்கையில் அரச இறைச் செயற்பாடுகளில் அதி உயர்ந்த நிதிச்சுமையினை ஏற்படுத்தும் இரு பொது முயற்சி நிறுவனங்களை அடையாளம் காண்க.
   1. இலங்கை மின்சாரசபையும் அரச மரக்கூட்டுத்தாபனமும்
   2. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனமும் இலங்கைத் துறைமுக அதிகாரசபையும்.
   3. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும்.
5. இலங்கை மின்சார சபையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும்.

03. இலங்கை மத்திய அரசின் முழுமொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையானது (மொ.உ.உ.இன் சதவீதமாக) அண்மைய ஆண்டுகளில்.
1. 6,7 %
2. 7,8 %
3. 8,9 %
4. 10,11 %
5. 11,12 % சதவீதங்களுக்கு இடைப்பட்டதாக இருந்தது.

04. வரிகள் கிடையான சமத்துவத்தை (Horizontal equality) ஏற்படுத்த வேண்டுமாயின்.
1. வரியிறுப்பாளர்கள் சகலரும் சமமான வரியளவினைச் செலுத்தவேண்டும்.
2. பொருள்கள் மீதான சகல வரிகளும் சமமான வீதத்தில் விதிக்கப்பட வேண்டும்.
3. வரிகள் சாத்தியமானளவு குறைந்த மட்டத்தில் இருத்தல் வேண்டும்.
4. வரிமுறையானது ஒருமுறை மட்டும் செலுத்தப்படும் தொகை வரிகளை (Lump sum taxes) கொண்டிருக்கவேண்டும்.
5. சமமான இயலுமை கொண்டுள்ள வரியிறுப்பாளர்கள் சமமான வரியளவினைச் செலுத்தவேண்டும்.

05. பின்வரும் அட்டவணை புதிதாக தாபிக்கப்பட்ட ஒரு தொலைக்காட்சி நிலையத்தின் செலவு நலன்களைக் காட்டுகின்றது. (மில்லியன் ரூபாய்களில்)

| | |
|---|---|
| தனியார் நலன்கள் 140 | தனியார் செலவுகள் ~ 120 |
| புற நலன்கள் 30 | புறச்செலவுகள் ~ 40 |

இவ் அட்டவணையிலிருந்து
1. சமூகச் செலவுகள் ரூபா 40 மில்லியன்
2. சமூகச் செலவுகள் தனியார் செலவுகளிலும் பார்க்க குறைவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சமூகச்செலவுகள் சமூக நலன்களிலும் பார்க்க உயர்வானது.
4. சமூகச் செலவுகள் சமூக நலன்களிலும் பார்க்க குறைவானது.
5. சமூக நலன்கள் ரூபா 30 மில்லியன் எனக் கூறலாம்.

06. சிறப்புப் பண்டமொன்றிற்கும் பொதுப் பண்டமொன்றிற்கும் இடையேயான ஒரு வேறுபாடு.
1. சிறப்புப் பண்டமொன்று எப்பொழுதுமே தனியார் துறையாலும் ஒருபொதுப்பண்டம் எப்போதுமே பொதுத் துறையாலும் வழங்கப்படுவதாகும்.
2. சிறப்புப் பண்டமொன்றிற்கு ஒரு செலவு உண்டு. பொதுப் பண்டம் எவருக்குமே செலவின்றி விநியோகிக்கப்படுகின்றது என்பதாகும்.
3. ஒரு சிறப்புப் பண்டத்தின் நிரம்பல் எல்லைக்குட்பட்டது ஒரு பொதுப் பண்டத்தின் நிரம்பல் எல்லையற்றது என்பதாகும்.
4. ஒரு சிறப்புப் பண்டத்தின் நுகர்வு ஏனையோருக்குக் கிடைக்கும் அதன் அளவைக் குறைத்தும் பொதுப் பண்டமொன்றின் தனிப்பட்டவனது நுகர்வு ஏனையோருக்குக் கிடைக்கும் அதன் அளவைக் குறைக்கமாட்டாது.
5. சிறப்புப் பண்டங்கள் சந்தைத் தோல்வியை ஏற்படுத்தும் பொதுப் பண்டங்கள் சந்தைத் தோல்வியை ஏற்படுத்தமாட்டா.

07. ஒரு விகிதாசார வரி என்பது ஒவ்வொரு வரி செலுத்துவோனும்
1. ஒரேயளவான வரித்தொகையை
2. அவனது அல்லது அவளது வருமானத்தின் ஒரே விகிதாசாரத்தை.
3. வருமானம் உயரும்போது உயர்ந்த ஒரு வரிவிகிதத்தை
4. வருமானம் உயரும்போது குறைந்த ஒரு வரி விகிதத்தை
5. அவன் அல்லது அவள் நுகரும் பொதுப் பண்டங்களின் பங்கிற்கு விகிதாசாரமான ஒரு வரியை

(செலுத்த வேண்டும் என்பதைக் குறிக்கும்)

08. 2006ம் ஆண்டில் அரசாங்க நடப்புச் செலவுகளும் மூலதன செலவுகளும் முறையே
1. 19.5% ஆகவும் 5.8% ஆகவும்
2. 17% ஆகவும் 6.5% ஆகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 18.2% ஆகவும் 5% ஆகவும்

4. 19 % ஆகவும் 4.9% ஆகவும்

5. 19.2% ஆகவும் 4.1% ஆகவும் இருந்தன.

09. அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் அரசாங்க நடைப்புச் செலவீட்டின் ஆகக்கூடிய பங்கினை வகித்தது.

1. வட்டிக்கொடுப்பனவு
2. பாதுகாப்பு செலவு
3. நுகர்வோர் மானியங்கள்
4. கல்வி
5. சம்பளக் கொடுப்பனவுகள் ஆகும்.

10. சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத் தலையீடின்றி பின்வருவனவற்றுள் எது குறைவாக உற்பத்தி செய்யப்படுதல் சாத்தியமானது?

1. சாதாரண பண்டங்கள்
2. ஆடம்பரப் பண்டங்கள்
3. தனியார் பண்டங்கள்
4. சிறப்புப் பண்டங்கள்
5. இழிவுப் பண்டங்கள்

11. தூய பொதுப் பண்டத்திற்கு ஒரு உதாரணம்

1. தேசிய பாதுகாப்பு
2. பாண் துண்டொன்று
3. கல்வி
4. தொலைக்காட்சிப் பெட்டியொன்று
5. நெடுஞ்சாலையொன்று

12. கடன் பெறுதல் மூலம் நிதிப்படுத்தப்படும் ஒரு பற்றாக்குறையானது

1. மொத்த நுகர்வுச் செலவினை எப்பொழுதுமே உயர்த்தும்
2. அதற்கான நிதியங்கள் வெளிநாட்டு மூலங்கள் வாயிலாகக் கிடைக்குமாயின் தேசிய படுகடனைப் பாதிக்காது.
3. தேசிய படுகடனை அதிகரிக்கச் செய்யும்
4. எப்பொழுதுமே பணநிரம்பலை அதிகரிக்கச் செய்யும்
5. மெய்வளங்கள் திரட்டப்படுவதைப் பாதிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஒரு விருத்திமுறை வரியின் இயல்பு எது?
   1. தேசிய வருமான அதிகரிப்புடன் வரித்தொகை உயருதல்
   2. வருமானம் அதிகரிக்கும் போது வரிவருவாய் உயருதல்.
   3. வருமானம் உயரும் போது வரிவீதம் கூடுகிறது.
   4. வரி செலுத்துதலில் உயர்ந்த வீத ஒத்துழைப்பு ஏற்படல்
   5. நீதித்தன்மை பிரமாணத்திற்கு முரணாக செல்கிறது.

14. அரைகுறைப் பொதுப்பண்டம் அல்லாதது.
   1. சுகாதாரம்   2. கீழ்க்கட்டுமான வசதிகள்
   3. சூழல் பாதுகாப்பு   4. கல்வி
   5. துறைமுக வசதிகள்

15. அரச பாதீட்டில் பற்றாக்குறை காரணமாக எழும் பணவீக்கத்தினை ஏற்படுத்தும் மூலாதாரம் எது?
   1. ஊழிய சேமலாப நிதியம் போன்ற நிதியங்களில் கடன்பெறல்.
   2. மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறல்.
   3. வியாபார வங்கிகளிடமிருந்து கடன் பெறல்.
   4. வெளிநாட்டு பண்டக் கடன்கள்
   5. தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து கடன் பெறல்.

16. 2006ம் ஆண்டில் அரசாங்க உள்நாட்டுக் கடன்களும் வெளிநாட்டுக் கடன்களும் முறையே (GDP % ஆக)
   1. 58%, 48%   2. 56%,49%   3. 55%, 42%
   4. 53%, 40%   5. 30.5%, 43.3%

17. வரிவிதித்தலில் நடுநிலைமைத் தன்மை ஒரு தத்துவமாக இருப்பதை எவ்வாறு விளங்குவீர்?
   1. பாரபட்சமின்றி எல்லா வருமானம் பெறுபவர்களையும் ஒரே மாதிரியான வரிகளுக்கு உட்படுத்தல்.
   2. வரி ஏய்ப்புகளை குறைத்தல்.
   3. சந்தைப் பொறிமுறை இயக்கத்தில் தலையீட்டினைக் குறைந்தளவில் வைத்திருப்பதற்கு மிகைச் சுமைகளைத் தவிர்த்தல்.
   4. வருமானப் பங்கீட்டில் சமமின்மையை ஏற்படுத்துகிறது.
   5. இறக்குமதிகள், உள்நாட்டுப் பொருட்கள் ஆகியவற்றிடையே நடுநிலைமைத் தன்மையில் வரிவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. சந்தைப் பொருளாதாரமொன்றில் அரச துறையால் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்படத் தேவையற்ற பொருளாதார நடவடிக்கை
   1. விலை முறையினால் எவ்விதத்திலும் உற்பத்தி செய்யப்படாத பொருட்களை உற்பத்தி செய்தல்.
   2. விலைக் கட்டுப்பாடு, பங்கீட்டு முறை என்பவற்றுக்கு உட்படுத்தத்தக்க பொருட்களை உற்பத்தி செய்தல்.
   3. விலையையோ, கட்டணத்தையோ அறவிடமுடியாத பொருட்களை உற்பத்தி செய்தல்.
   4. சந்தை முறையினால் உச்ச மட்டத்தில் உற்பத்தி செய்யப்படாத பொருட்களை உற்பத்தி செய்தல்.
   5. பாரிய நிதிச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தனியார் உற்பத்தி செய்யமுன்வராத பொருட்களை உற்பத்தி செய்தல்.

19. அண்மை ஆண்டுகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு சேமிப்பு. மொத்த தேசிய சேமிப்பு என்பன GDP இல் முறையே
   1. 17%, 23%   2. 16%, 20%   3. 17%, 25%
   4. 16%, 23%   5. 15.9%, 21.6%

20. பின்வருவனவற்றுள் பொதுப்படுகடன் கருவி அல்லாதது.
   1. திறைசேரி உண்டியல்   2. திறைசேரி முறிகள்
   3. ரூபாக்கடன்கள்   4. கடன் அட்டைகள்
   4. வரி ஒதுக்குச் சான்றிதழ்

21. அதிகளவான வரிவருமானத்தை சேகரிக்க விரும்பும் அரசாங்கம் எத்தகைய பண்டத்தின் மீதான வரியை உயர்த்தவேண்டும்.
   1. உயர்வான விலை சார் நிரம்பல் நெகிழ்ச்சியுடைய பண்டங்கள்
   2. குறைவான விலை சார் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்கள்
   3. உயர்வான விலைசார் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்கள்
   4. உயர்வான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்கள்
   5. குறைவான நேர்கணிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அரச நிறுவனங்கள் தனியார் மயமாவதற்கு முக்கிய காரணி என்ன?

1. அரச நிறுவனங்களில் வரிகளை அறவிடுவதிலுள்ள கடினம்
2. அரச தாபனங்களால் இலாபங்கள் அனுபவிக்கப்படுகின்றமை
3. அரசிற்கு வருமான மூலங்களை தேடவேண்டிய நிலை
4. அரச நிறுவனங்களின் திறனான முகாமை
5. கட்டமைப்பு சீராக்கலைத் தொடர்ந்து அரசாங்கமானது விலிகியிருக்கவேண்டுமெனும் கருத்து.

23. வரி அரசிறைகளான நேர்வரி, நேரில்வரி என்பன மொத்த அரசிறையில் வகிக்கும் அண்மைக்கால பங்களிப்புக்கள் முறையே.

1. 14%- 17%, 73%-75%  2. 12%-13%, 73%-74%
3. 80%-85%, 15%-20%  4. 15%-17%, 75%-83%
5. 2%-3%, 12%-13%

24. வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை ஏற்படுத்தும் விளைவு.

1. அரசாங்கம் நடைமுறைச் செலவுகளுக்கு கடன்பெறத் தேவையில்லை.
2. மூலதனச் செலவுகளை அரசாங்கம் குறைக்கவேண்டிய நிலை
3. வியாபார சேமிப்புக்கள் நேர்க்கணியமாக உள்ளமை
4. அரசாங்கம் நடைமுறைச் செலவுகளை கட்டுப்படுத்தியுள்ளது.
5. அரசின் சேமிப்பு நேர்க்கணியத்தில் அமையவில்லை.

25. இலங்கையில் அரசாங்க வரிவருமானத்தின் மிகப் பிரதானமான மூலத்தினை இனங்காண்க.

1. வருமான வரி  2. இறக்குமதி தீர்வை  3. வரிவருமானம்
4. பெறுமதி சேர்வரி  5. ஏனைய வரி

26. வரிகள் நிலைக்குத்து சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு

1. வேறுபட்ட வருமானப் பிரிவினருக்கு வேறுபட்ட வரியினை விதித்தல்.
2. வருமானப் பிரிவினர்கள் அனைவருக்கும் ஒரேயளவான வரியினை விதித்தல்.
3. வரிகளை குறைவாக வைத்திருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆடம்பரப் பொருட்களுக்கு அதிகவரியினையும் அத்தியாவசியப் பொருட்களுக்கு குறைந்த வரியையும் விதித்தல்.
5. நேரில்வரியினை சமஅளவில் அறவிடல்.

27. பின்வருவனவற்றுள் தனியார் பண்டம் ஒன்றின் பண்பாகக் கொள்ளக்கூடியது.
1. எல்லைச் செலவு பூச்சியம்
2. விலை அறவிடப்படுவதில்லை
3. நுகர்வில் விலக்குதல் விதிக்கு உட்படுவதில்லை
4. உற்பத்திச் செலவினை ஏற்படுத்தும்
5. அமையச் செலவினை ஏற்படுத்துவதில்லை.

28. 2005 இல் அரச நடப்புச் செலவுகளும் மூலதனச் செலவுகளும் முறையே.
1. 18.7%, 7.8% 2. 18.1%, 5.9% 3. 19.5%, 5.8%
4. 18.7%, 5.9% 5. 8.2%, 5.9%

29. அரசாங்க சேமிப்பு ($S_G$) எனப்படுவது
1. வரி வருமானத்திலிருந்து நடைமுறைச் செலவை நீக்க வருவது.
2. அரசிறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளை நீக்கவருவது.
3. அரச வருமானத்திலிருந்து ஏக மொத்தச் செலவை நீக்குவது.
4. அரசிறையிலிருந்து மீண்டெழும் செலவுகளை நீக்கி பெறப்படுவது.
5. நடைமுறைக் கணக்கு மீதியிலிருந்து மீண்டெழாச் செலவுகளை நீக்குவது.

30. ஒரு தூய பொதுப்பண்டமானது கட்டாயமாகவே
1. அமயச் செலவிலும் குறைந்த விலைகளில்பொதுத் துறையினால் மட்டும் வழங்கப்படுவதாகவிருக்கும்.
2. சந்தை விலையிலும் குறைந்த விலைகளில் தனியார் துறையினால் மட்டுமே வழங்கப்படுவதாகவிருக்கும்.
3. சந்தை விலையிலும் குறைந்த விலையில் பொதுத்துறை. தனியார் துறை இரண்டினாலுமே வழங்கப்படுவதாக விருக்கும்.
4. ஒருவனது நுகர்வு மற்றையோரது நுகர்வை எவ்வகையிலும் தடுப்பதாக இல்லாத பண்டமாகவிருக்கும்.
5. உற்பத்தியில் அமயச் செலவு இல்லாத பண்டமாகவிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. பின்வருவனவற்றுள் எது சுருக்கத் தன்மையைக் கொண்ட இறைக் கொள்கையைக் குறிக்கும்?
   1. வரிவிகிதங்களில் அதிகரிப்பும் அரசாங்கச் செலவில் குறைப்பும்
   2. வரிவிகிதங்களில் அதிகரிப்பும் வட்டி விகிதங்களில் அதிகரிப்பும்
   3. வரிவிகிதங்களில் குறைப்பும் அரசாங்கச் செலவில் அதிகரிப்பும்
   4. அரசாங்கச் செலவில் குறைப்பும் வட்டி விகிதங்களில் அதிகரிப்பும்
   5. வரவு செலவுத் திட்டக்குறை நிலையில் அதிகரிப்பும் அக்குறைநிலையை வெளிநாட்டுக் கடன் மூலம் நிதிப்படுத்தலும்.

32. மேலும் ஒரு நபர் பொதுப்பண்டமொன்றை நுகருவதால் ஏற்படும் எல்லை நிலைச் சமூகச் செலவு.
   1. எதிர்க்கணியமாகவிருக்கும்
   2. பூச்சியமாகவிருக்கும்
   3. நேர்க்கணியமாகவிருக்கும்
   4. முடிவிலியாக இருக்கும்
   5. இரட்டிப்பாக விருக்கும்

33. இறைக்கொள்கை என்பதனால் கருதப்படுவது யாது?
   1. முயற்சியாண்மையாளர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்குதல்.
   2. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைப்பதற்கான கொள்கைகள்.
   3. அரசின்பொருளாதார இலக்குகளை அடைவதற்கு வரிவிதிப்பு, அரசாங்கச் செலவீடு. வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை/மிகை என்பவற்றை பயன்படுத்தல்.
   4. சென்மதி நிலுவையிலான பற்றாக்குறையைக் குறைப்பதற்கான கொள்கைகள்.

34. அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக்குறை காரணமாக, பணவீக்க விளைவுகளை ஏற்படுத்தும் நிதிப்படுத்தும் மூலாதாரத்தினை இனங்காண்க.
   1. தேசிய சேமிப்பு வங்கியிடம் கடன்பெறுதல்
   2. ஊழியர் சேம இலாப நிதியிலிருந்து கடன் பெறுதல்.
   3. வணிக வங்கிகளினால் கொள்வனவு செய்யப்படும் திறைசேரி உண்டியல்களை வெளியிட்டுக் கடன் பெறுதல்.
   4. அரசாங்க உற்பத்தி நிறுவனங்களை தனியார் மயப்படுத்தலினால் கிடைக்கும் வருவாய்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. ஒரு விருத்திமுறை வரியின் இயல்பு யாது?
   1. தேசிய வருமான அதிகரிப்புடன் வரிவருவாய் அதிகரிக்கின்றது.
   2. வருமானம், செல்வம் ஆகியவற்றின் அதிகரிப்புடன் வரிவீதம் கூடுகின்றது.
   3. பொருளாதார வளர்ச்சியுடன் அரசாங்க வருவாய் குறித்து வரியின் பங்களிப்பு கூடுகின்றது.
   4. வரி செலுத்துதலில் உயர்ந்த வீத ஒத்துழைப்பு ஏற்படுதல்.

36. வரி விதித்தலில் நடுநிலைமைத் தன்மை ஒரு விதியாக இருப்பதை எவ்வாறு விளக்கிக் கொள்வீர்கள்?
   1. சந்தைப் பொறிமுறையின் இயக்கத்தில் தலையீட்டினை குறைந்த பட்ச அளவில் வைத்திருப்பதற்கு மிகைச் சுமை அல்லது எதிர்பாராத பொருளாதார விளைவுகள் ஆகியவற்றைத் தவிர்த்தல்.
   2. பாரபட்சமின்றி எல்லா வருமானம் பெறுபவர்களையும் ஒரே மாதிரியான வரிகளுக்கு உட்படுத்தல்.
   3. இறக்குமதிகள், உள்நாட்டுப்பொருட்கள் ஆகியவற்றிடையே நடுநிலைமைத் தன்மையில் வரிவிதித்தல் இடம்பெறுதல்.
   4. வரிகளை நகர்த்துதலும் வரிகளிலிருந்து தப்புதலும் குறைந்த பட்ச அளவில் இருத்தல்.

37. அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைக்கணக்கில் பற்றாக்குறை எதனைக் காட்டுகின்றது.
   1. அரசாங்க சேமிப்புக்கள் நேர்க்கணிய நிலையில் இருத்தல்.
   2. வரவு செலவுத்திட்டத்தின் பணவீக்கத்தாக்கம்
   3. வரிகளிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் குறைக்கும் வரி தவிர்த்தல் நடவடிக்கை.
   4. முதலீட்டினை நிதிப்படுத்துவதற்கு தேவையான நிதியினை நிகழ்கால வருவாயிலிருந்து பெறமுடியாமை.

38. நீர் ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றினை அடையாளப்படுத்துக.
   1. மறைமுகவரிகள் பொதுவாக நுகர்வோருக்கு சுமையாக மாற்றப்படுகின்றன.
   2. நீதித்தன்மைப் பிரமாணத்திற்கு முரணானதாக விருத்தி வரி செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பண்டங்களின் மீதான வரிகள் கூடுதலாக தேய்வு வரி விளைவுகளை ஏற்படுத்துகின்றது.
4. இலங்கையின் வரிவருவாயில் நேர்வரிகள் குறைந்த அளவுக்குக் காணப்படுகிறது.

39. தெரு விளக்குப் போன்ற தூய்மையான பொதுப்பண்டத்தை சாதாரண சந்தை முறைமையினூடாக வழங்க முடியாமைக்குரிய காரணம் என்ன?
1. தனியுரிமை நிறுவனங்கள் மிக உயரிய இலாபத்தை சம்பாதிப்பது
2. சில வீட்டுத் துறையினால் அது வழங்கப்படுவதற்கு தேவையான செலவை ஈடுசெய்யுமளவுக்கு பங்களிப்பு செய்ய முடியாமலிருப்பது.
3. அதனை வாங்குவோருக்கு மட்டும் அதன் நன்மை சென்றடைவதை கட்டுப்படுத்த முடியாமலிருப்பதும் அதன் நன்மை அதனை வாங்காமலிருப்போருக்கும் தானாகவே சென்றடைவதும்.
4. பொதுப்பண்டம் அத்தியாவசியமானது ஆகவே அதனை வழங்க தனியாருக்கு அனுமதி இல்லை.
5. மேற்கூறிய எவையுமல்ல.

40. விருத்திமுறை வரி விதிப்பை கொண்டுள்ள ஒரு பொருளாதாரத்தை கருதுக. வரிக்கு முந்திய வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கருதுக. வரிக்கு பின் வருமானத்திற்கு என்ன நடக்கும்.
1. அதிகரிப்பு வீதத்தை விட குறைந்தளவு வீதத்தால் குறையும்.
2. அதிகரிப்பு வீதத்தை விட உயர்ந்த வீதத்தால் குறையும்.
3. அதிகரிப்பு வீதத்தை விட குறைந்தளவு வீதத்தால் அதிகரிக்கும்.
4. அதிகரிப்பு வீதத்தை விட உயர்ந்த வீதத்தால் அதிகரிக்கும்.
5. எந்த ஒரு மாற்றமும் இல்லை.

41. மூலதன செலவாக கருதமுடியாத செலவினம் ஒன்று
1. மெய்ச் சொத்து கையேற்பு
2. தேறிய கடன் வழங்குதல்.
3. மூலதன மாற்றுக்கள்
4. பொது நுகர்வு
5. அரச நிறுவனங்களுக்கான மூலதன மாற்றுக்கள்

42. தேய்வு முறை வரியின் நன்மைகளில் (பயன்பாடு) ஒன்று
1. பொருளாதார சமத்துவம் எய்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவர்
3. அரசிற்கு அதிகளவு வரி வருமானம் கிடைத்தல்
4. வருமானத்திற்கும் வரி வீதத்திற்குமிடையில் நேர்த்தொடர்பு காணப்படுதல்.
5. அதிக வருமானம் பெறுவோர்க்கு அதிக வரியும் குறைந்த வருமானம் பெறுவோர்க்கு குறைந்த வரியும் விதிக்கப்படும்.

43. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை காரணமாக பணவீக்கத்தை ஏற்படுத்தும் நிதியீட்ட மூலகம் எது?
1. ஓய்வூதிய நிதியிலிருந்து பெறப்படும் கடன்
2. தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன்
3. மத்திய வங்கியிடமிருந்து பெறப்படும் கடன்
4. வெளிநாட்டு பண்டக்கடன்
5. EPF இல் பெறப்படும் கடன்

44. பின்வருவனவற்றுள் எது விரிவுத்தாக்கமுடைய பாதீட்டுக் கொள்கை நடவடிக்கை அல்ல.
1. அரசாங்க செலவு அதிகரித்தல். 2. நேர்வரிகள் குறைக்கப்படுதல்
3. முதலீட்டு நிவாரணங்கள் அதிகரிக்கப்படுதல்.
4. வட்டி வீதங்கள் குறைக்கப்படுதல்
5. அரசாங்கம் பெறுகின்ற கடன்கள் அதிகரித்தல்.

45. ஒரு வரவு செலவுத் திட்டத்தின் மிகச் சிறந்த பண்பு
1. பற்றாக்குறையுடையதாக அமைவதில்லை
2. சமநிலையுடையதாக அமைதல்
3. நடப்பு செலவினங்கள் விட நடப்பு மாற்றல் குறைவாக இருத்தல்
4. நடப்பு செலவினங்களை விட மூலதனச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு அதிகம்.
5. அரசின் உத்தேச மொத்தச் செலவினங்கள் வருமானங்களை விட குறைவாக அமைதல்.

46. "அரசினது அதிகரிக்கும் பொருளாதார முயற்சி விதி" என்பது
1. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல்.
2. பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்
3. விலை உறுதி நிலையைப் பேணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொருளாதார தலையீடானது எதிர்காலத்தில் தொடர்ச்சியாக அதிகரித்தல்.
5. தேசிய வருமானத்தில் அரசாங்க செலவினத்தின் சதவீதப் பங்கு

47. பொருளாதாரக் கட்டமைப்பு சார் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தில் இடம்பெறாதது.
1. பொருளாதாரத்தை தாரண்மைப்படுத்தல்
2. அரசாங்க நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல்
3. அரசாங்க செலவினங்களை அதிகரித்தல்
4. நேரடி வெளிநாட்டு முதலீடுகளை கட்டுப்படுத்தல்
5. பேரின பொருளாதார உறுதி நிலை ஏற்படுத்தல்.

48. வரிப்பழு என்பதன் பொருள்
1. ஒருவரின் வரி செலுத்தும் சக்தி
2. அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியை பிறர் மீது சுமத்தல்
3. வரியை அப்பால் நகர்த்தக்கூடிய தன்மையும் பொருளாதார விளைவும்.
4. அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியை இறுதியாக தாங்குதல்
5. வரி விதிப்பால் ஏற்படும் விளைவுகள்

49. பின்வருவனவற்றுள் வரியை நகர்த்தக்கூடிய தன்மை உள்ளது.
1. மொத்த விற்பனை வரி 2. கலால்வரி
3. பொருட்கள் சேவைகளின் வரி 4. நேரில்வரி
5. மேற்கூறிய யாவும் சரியானவை

50. தேறிய முற்பணக்கணக்கு என்பது
1. குறிப்பிட்ட ஆண்டின் ஆரம்ப முற்பணம்– குறிப்பிட்ட ஆண்டின் இறுதி முற்பணம்.
2. குறிப்பிட்ட ஆண்டின் இறுதி முற்பணம்– முன்னைய ஆண்டின் இறுதி முற்பணம்
3. குறிப்பிட்ட ஆண்டில் வழங்கப்பட்ட முற்பணம் ~ குறிப்பிட்ட ஆண்டில் கிடைத்த முற்பணம்
4. வருட ஆரம்ப முற்பணம் ~ வருட இறுதி முற்பணம்
5. மேற்கூறிய யாவும் தவறானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. அபிவிருத்தியடையும் நாடொன்றில் பொருளாதார இரட்டைத் தன்மை என்பது?

1. மரபுசார் துறைக்கும் நவீன துறைக்குமிடையே ஒருங்கிணைப்பு இன்மையாக.
2. செல்வந்தர்களுக்கும் வறியோருக்குமிடையே காணப்படும் பாரிய இடைவெளியை.
3. நுகர்வுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் என்பவற்றின் மீதான முதலீடுகளுக்கிடையே காணப்படும் சமமின்மையை.
4. நுகர்வுக்கும் முதலீட்டிற்குமிடையிலான சமமின்மையை
5. ஏற்றுமதி சார்ந்த தொழில் மயமாக்கத்துக்கும் இறக்குமதிப் பதிலீட்டுத் தொழில் மயமாக்கத்திற்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிக்கும்.

52. கடன் பெறுதல் மூலம் நிதியைப் பயன்படுத்தப்படும் ஒரு பற்றாக்குறையானது

1. மொத்த நுகர்வுச் செலவினை எப்பொழுதுமே உயர்த்தும்.
2. அதற்கான நிதியங்கள் வெளிநாட்டு மூலங்கள் வாயிலாகக் கிடைக்குமாயின் தேசிய படுகடனைப் பாதிக்காது.
3. தேசிய படுகடனை அதிகரிக்கச் செய்யும்.
4. எப்பொழுதுமே பணநிரம்பலை அதிகரிக்கச் செய்யும்.
5. மெய் வளங்கள் திரட்டப்படுவதை பாதுகாப்பதில்லை.

53. விலை உறுதிப்பாடு ஏற்படுவது?

1. பொருளாதாரத்தில் எல்லா விளைவுகளும் நிலையாக இருக்கும் போது.
2. பணவீக்க விகிதம் நிலையாகவிருக்கும் போது
3. பணவீக்க விகிதம் நிலையாகவிருக்கும் பொழுது.
4. பொது விலைமட்டம் நிலையான விகிதத்தில் அதிகரிக்கும் போது.
5. மெய்தலா வருமான மட்டம் மாறாதிருக்கும் போது.

54. அரசாங்கம் அரச செலவு அதிகரிப்பு மூலம் வேலை வாய்ப்பை அதிகரிக்க முயற்சிக்கும் போது, குறைந்த விளைவை ஏற்படுத்தும் சூழ்நிலையாக அமைவது.

1. பெருக்கியின் பெறுமதி அதிகரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. எல்லை நுகர்வு நாட்டம் உயர்தல்
3. எல்லை வரிவீதம் உயர்தல்
4. தனியார் முதலீட்டு மட்டம் உயர்தல்
5. ஏற்றுமதிகளில் விற்பனை உயர்தல்

55. பொது படுகடன் பெறுகைக்கான தேவை என்பதன் மிக சரியான விளக்கம்.
1. வரி வருமானத்தை, வருடாந்த பொதுச்செலவு மிஞ்சியிருத்தல்
2. சர்வதேச நாணய நிதிக்கு, அரசு செலுத்த வேண்டிய பணம்
3. அரசின் சென்மதிநிலுவைப் பற்றாக்குறையின் தேறிய திரட்சி
4. அரசின் பாதீட்டு தேறிய திரட்சி
5. அரசின் வெளிநாட்டு மொத்தக் கடன் தொகை

56. அரசாங்கம் பணவீக்க வீதத்தை குறைக்க விரும்புகையில் பணக் கொள்கையை பயன்படுத்தும் போது பெரும்பாலும்
1. நுகர்வோர் செலவைக் குறைப்பதற்கு வரியை உயர்த்துதல்
2. நுகர்வோர் செலவைக் குறைப்பதற்கு வட்டிவீதத்தை உயர்த்துதல்
3. நாணய மாற்று வீதத்தை மேல்நோக்கி உயர்த்த தூண்டுதல்.
4. மெய் வருமானத்தை உயர்த்துவதற்கு வரியை குறைத்தல்
5. வரி உயர்வதினைத் தடுப்பதற்கு பொதுப்படுகடன் பெறுகையை உயர்த்துதல்.

57. பின்வருவனவற்றுள் எது விருத்திமுறை/ வளர்வீத வரி முறையின் இயல்பு ஆகும்.
1. உயர்வருமான வகுப்பினர், குறைந்த வருமான வகுப்பினரை விட கூடிய வரியை செலுத்துவர்.
2. சராசரி வரிவீதத்தை விட எல்லை வரிவீதம் உயர்வாகும்.
3. குறைந்த வருமானத்தவரிலும் பார்க்க உயர் வருமானத்தவரிடமிருந்து குறைந்த வீத வரி வசூலிக்கப்படும்.
4. எல்லா வருமானத்தவரிடமிருந்தும் சமமான வரி அறவிடப்படும்.
5. குறைந்த வருமானத்தவரிலும் பார்க்க உயர் வருமானத்தவரிடம் உயர் விகித வரி அறவிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. பொருளாதார வகைப்படுத்தலின் படி இலங்கை அரசின் நடப்புச் செலவினத்தில் உள்ளடக்கப்படும் விடயங்களின் ஒன்று.

1. மூலதன மாற்றல் கொடுப்பனவுகள்
2. வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி
3. மெய்ச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்
4. வட்டிகளும் இலாபங்களும்.
5. கட்டிடவாக்கற் பொருட்களின் கொள்வனவு

59. சமூக நலப்பொருட்களை அரசாங்கம் உற்பத்தி செய்து வழங்குவதற்குரிய முக்கிய காரணம்.

1. அதனை உற்பத்தி செய்வது செலவு கூடியதாகும்.
2. குடும்ப அலகு மேற்கொள்ளும் தீர்மானங்கள் உச்சமான சமூக நலனை தோற்றுவிப்பதில்லை ஆதலால்.
3. தனியார் துறையினரால் உற்பத்தி செய்து வழங்கப்படும் பண்டமானது.
4. தனியார் துறையினருக்கு இலாபம் தரும் பொருளாக சமூகநலப் பொருட்கள் இல்லாமை.
5. சந்தையில் சமூகநலப் பண்டங்கள் அதிக விலையுடையனவாய் இருத்தல்.

60. பின்வருவனவற்றள் எது தேறிய விரிவுத் தாக்கத்தை ஏற்படுத்தும் இறைக்கொள்கையன்று.

1. வரிவீதங்களை மேல்நோக்கி மாற்றியமைத்தலும், செலவீனங்களை கட்டுப்படுத்தலும்.
2. பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதிதிரட்டல் வங்கிசார் மூலங்களில் இருந்து பெறுதல்.
3. வருமானவரி எல்லையை மேல் நோக்கித் திருத்துதலும் மூலதனச் செலவினங்களை அதிகரித்தலும்.
4. செலாவணி வடிவிலான வெளிநாட்டுக் கடன்கள் மூலம் பாதீட்டு பற்றாக்குறையை நிதியிடல்.
5. வரி வீதங்களைக் குறைத்தலும் நடைமுறைச் செலவினங்களைக் கட்டுப்படுத்தலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. பின்வரும் தரவுகளின் அடிப்படையில் விதிக்கப்பட்ட வரிவிதிப்பு முறைகள் முறையே.

| வருமானம் | வரியின் அளவு | |
|---|---|---|
| | 1 | 2 |
| 3000 | 600 | 300 |
| 2000 | 200 | 300 |
| 1000 | 50 | 300 |

1. தேய்வு முறை வரி. விருத்தி முறை வரி
2. தேய்வு முறை வரி, சமவிகித வரி
3. விருத்திமுறை வரி, சமவிகித வரி
4. விருத்திமுறை வரி, தேய்வு முறை வரி
5. விகிதாசார வரி, தேய்வு முறை வரி

62. அரச வரவு செலவுத்திட்டத்தில் ஆரம்பப் பற்றாக்குறை என்பது
1. வட்டி நீக்கப்பட்ட அரச செலவினம் அரசிறையிலும் உயர்வாக இருத்தல்.
2. மீண்டெழும் செலவினம் அரசிறையிலும் உயர்வாக இருத்தல்.
3. ஏக மொத்தச் செலவினம் அரசவருமானத்தை விட அதிகமாக இருத்தல்.
4. நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளை நீக்கிய பற்றாக்குறை.
5. சமூல மீதியிலிருந்து வெளிநாட்டு வட்டிக்கொடுப்பனவுகளை கூட்ட வருவது

63. 2006இல் வெளிநாட்டுக் கடன்சேவை வீதம் பொருட்கள் சேவை ஏற்றுமதி, மொத்த வெளிநாட்டு வருவாய் என்பவற்றில் முறையே.

1. 7.9%, 6.3% 2. 11.6%, 9.4% 3. 12.7%, 9.7%
4. 9.7%, 12.7% 5. 9.4%, 11.6%

64. வரி அரசிறை, வரியல்லா அரசிறை என்பன GDPஇல் முறையே

1. 15.3%, 1.7% 2. 14.2%, 1.9% 3. 17%, 15.3%
4. 12.4%, 2.9% 5. 25.4%, 15.3%

65. உட்கட்டுமான வசதிகளின் முக்கியத்துவம் அல்லாதது
1. உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.
2. நாட்டின் உற்பத்திமட்டம் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருட்கள் சேவைகளின் உற்பத்திச்செலவு குறைவடையும்.
4. பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வாழ்க்கைத்தரம் அதிகரிக்கும்.
5. நாட்டின் பணவீக்க விளைவுகள் ஏற்படும்

66. பொருளாதாரக் கீழ்க்கட்டுமான வசதி அற்றது.
1. துறைமுக வசதிகள் 2. பெருந்தெருக்கள்
3. வைத்திய சாலைகள் 4. மின்வலுப் பொருட்கள்
5. விமானத்தள வசதிகள்

67. வரி முறையொன்றை நடைமுறைப்படுத்தும் போது அரசு கவனத்திற் கொள்ளவேண்டிய அவசியமற்றது எனக்கருதும் கூற்று.
1. பணச்சந்தையின் வட்டி வீதம்
2. நிச்சயிக்கப்பட்ட வருமானம் பெறுவதை உறுதி செய்தல்
3. சமத்துவத்தை நிலைநாட்டல்
4. வரியை அறவிடுவதற்கான செலவினை இழிவுபடுத்தல்
5. சந்தை முறையை வரி பாதிக்காத வகையில் அறவிடுதல்

68. பின்வருவனவற்றுள் தூய பொதுப்பண்டம் ஒன்றுக்குரிய பண்பு அல்லாதது.
1. விலை குறிப்பிடப்படாமை
2. நுகர்வு எவ்வளவு அதிகரிப்பினும் முடிவடையாத்தன்மை
3. அரசாங்கத்தால் மட்டும் வழங்கக்கூடியதாக இருத்தல்.
4. கூட்டாக நுகரக்கூடிய தன்மை
5. இதை அரசாங்கம் வழங்கும் போது அமையச்செலவு பூச்சியமாகும்.

69. இலங்கை வரவு செலவுத் திட்டத்தில் நிதியீட்டம் செய்யப்படுகின்ற உள்நாட்டு வங்கித்துறை சாரா சந்தைக்கடன் மூலகங்களில் முக்கியமானது எது?
1. தேசிய சேமிப்பு வங்கியும் ஊழிய சேமலாப நிதியமும்
2. காப்புறுதி நிறுவனமும் தேசிய சேமிப்பு வங்கியும்
3. ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கை நிறுவனமும்
4. ஒய்வூதிய நிறுவனமும் காப்புறுதி நிறுவனமும்
5. ஊழியர் சேமலாப நிதியமும் ஒய்வூதிய நிறுவனமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிட காரணம் அல்லாதது.

1. தனியார் பண்டங்கள், மேன்மையற்ற பண்டங்களை வழங்குவதற்கு.
2. பொதுப்பண்டங்கள், தகுதிப்பண்டங்களை வழங்குவதற்கு
3. வெளிவாரி விளைவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு
4. உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல்
5. பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை எய்துவதற்கு

71. 100% நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்தும் பண்டம்

1. வீதிகள் 2. சுகாதாரம் 3. வீதி வெளிச்சம்
3. மதுபானம் 4. விமானத்தள வசதிகள்

72. தனியார் மயமாதலுக்கு எதிரான கருத்து

1. அரச தனியுரிமைக்குப் பதிலாக போட்டித்தன்மை ஏற்படும்
2. அரச தனியுமைரிமைக்குப் பதிலாக தனியார் தனியுரிமை ஏற்படலாம்
3. அரச நிறுவனங்களின் திறனற்ற முகாமையானது திறமையாக்கப்படும்.
4. அரசின் மாற்றுக்கொடுப்பனவுகள் குறையும்.
5. அரச வருமானம் அதிகரிக்கும்

73. நேர்வரியில் சமத்தவத்தை மேற்கொள்வதற்கான வரி விதிப்பு முறை எது?

1. தேய்வு முறைவரி 2. சமவிகிதவரி 3. தொகையீட்டுவரி
4. வளர் வீத வரி 5. சலுகை வரி

74. அரசாங்கத் தோல்விக்கு காரணம் அல்லாதது

1. திட்டமிடலின் போதான பிரச்சனை
2. வளங்களை ஒதுக்கீடு செய்வதில் செயற்திறனற்ற நிலை காணப்படல்.
3. ஊழல், துஷ்பிரயோகம், தீர்மானங்களில் காலதாமதம் என்பன இருத்தல்.
4. அரசியல் தலையீடு அதிகம் இருத்தல்
5. வெளிவாரி விளைவுகளால் மிகை உற்பத்தி, குறை உற்பத்தி காணப்படுகின்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. அரச பாதீட்டுடன் தொடர்புபடாத பற்றாக்குறை
   1. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை
   2. முதன்மை (ஆரம்பப்) பற்றாக்குறை
   3. மூலதனக் கணக்குப் பற்றாக்குறை
   4. சமூலப் பற்றாக்குறை
   5. கொடைக்குப் பிந்திய பற்றாக்குறை

76. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் அபிவிருத்திப் பாதீடு எது?
   1. மிகைநிலைப்பாதீடு   2. குறைநிலைப்பாதீடு
   3. அரச பாதீடு   4. தனியார் பாதீடு
   5. சமநிலைப்பாதீடு

77. வரி ஏய்ப்புத் தன்மைக்குட்பட்ட வரி
   1. வருமான வரி   2. நேரில்வரி   3. VAT
   4. கலால் தீர்வை   5. இறக்குமதித் தீர்வை

78. பேரினப் பொருளியல் சமநிலையின்மையினால் ஏற்படாத பொருளாதார விளைவு.
   1. உயர்ந்த பணவீக்கம்   2. உயர் பாதீட்டுப் பற்றாக்குறை
   3. பொருளாதார வளர்ச்சி
   4. எதிர்க்கணிய மெய்வட்டி குறைவீதம்
   5. நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடைதல்

79. வரி ஒதுக்கச் சான்றிதழ் என்பது அரசு பெறும்
   1. ஒரு வகை நிதிப்படுத்தப்பட்ட கடன்கள்
   2. குறுங்காலக் கடன்கள்
   3. நீண்டகாலக் கடன்கள்
   4. வெளிநாட்டு திட்டக் கடன்களில் ஒரு பகுதி
   5. கடன் என்பதனுள் அடங்காத விடயம்

80. வரவு செலவுத்திட்ட வெளிநாட்டு நிதியீட்ட மூலகங்களில் ஒன்று
   1. மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறல்
   2. வணிக வங்கியிடமிருந்து கடன் பெறல்
   3. ஐப்பானிடமிருந்து பெறப்படும் இருபக்க நன்கொடை
   4. ஊழியர் சேமலாப நிதி
   5. சந்தையல்லா கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. சமூலக் கடன் சேவைக் கட்டணத்துக்குள் உள்ளடங்குவது
1. மொத்தக் கடன் தீர்ப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள்
2. வெளிநாட்டு கடன் தீர்ப்பனவுகள், வட்டிக்கொடுப்பனவுகள்
3. உள்நாட்டு கடன் தீர்ப்பனவுகள், வட்டிக்கொடுப்பனவுகள்
4. மொத்தக் கடன் தவணைப்பணம், வெளிநாட்டுவட்டி
5. மொத்தக்கடன் தீர்ப்பனவுகள், உள்நாட்டு வட்டி

82. "வரியிடலில் சமத்துவம்" என்பது
1. சமவிகித முறையில் வரியினை அறவிடல்
2. நுகர்வோரின் செலவிடக்கூடிய வருமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது.
3. வருமான ஏற்றத்தாழ்விற்கமைய வரியினுள் ஏற்றத்தாழ்வு ஏற்படுதலன்று.
4. சம அளவு வருமானம் உழைப்பவர்கள் மீது சம அளவு வரி விதித்தல்.
5. வருமான ஏற்றத்தாழ்விற்கமைய வரியை சமனாக விதித்தல்.

83. அரசாங்கத்தின் முக்கியமான பொரளாதாரக் குறிக்கோளாக நீதித்தன்மை (Equity) முன்னெடுக்கப்படுகின்றது. அந்தக் குறிக்கோளினை அடைவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கையை இனங்காண்க.
1. ஒரு வருமான விருத்தி முறை வரியினை (Progressive income tax) அறிமுகம் செய்தல்.
2. முயற்சியாளர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்குதல்.
3. அதிக வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு மானியங்கள் வழங்குவதற்காக அரசாங்கச் செலவினை அதிகரித்தல்.
4. வீதிகள் அமைக்கப்படும் நோக்குடன் அரசாங்க செலவை அதிகரித்தல்.
5. ஒரு தேய்வு முறை வரியை அறிமுகம் செய்தல்.

84. பொருளியலாளர்கள் வரைவிலக்கணப்படுத்தும் "பொதுப் பொருட்கள்/ சேவைகள்" ஆகியவற்றை உருவாக்குவதற்குத் தேவையான அரசாங்க நடவடிக்கை அல்லாதது.
1. சட்டத்தினையும் ஒழுங்கினையும் பேணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தெருவிளக்குகளை அமைத்தல்
3. வெள்ளப்பெருக்கினைத் தடுத்தல்
4. சமுர்த்தித் திட்டம்
5. சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு

85. கீழ் வரும் அம்சங்களில் எது இலங்கை வரிமுறையில் காணப்படுவதில்லை.
1. வரி வருமானங்களில் மிக முக்கியமான மூலமானது நேர் வரிகளாகும்.
2. வரி வருமானங்களில் பெருமளவு பகுதியானது நேரில் வரிகளாகும்.
3. வரி செலுத்துவதைத் தவிர்ப்பது சார்பளவில் உயர்நிலையில் உள்ளமை.
4. வருமான வரியே மிகமுக்கியமான நேர் வரியாகும்.
5. பொருட்கள் சேவைகள் வரியே மிகமுக்கியமான வரியாகும்

86. கீழ் வரும் அரசாங்க செலவீடுகளில் கைமாற்றல் முறைச் செலவீடு என நீங்கள் கருதுவது யாது?
1. சுகாதார சேவைகள் மீதான செலவீடுகள்
2. சம்பளங்கள் கூலிகள் மீதான செலவினம்
3. மீள் கொடுப்பனவு கழித்த தேறிய கடன் வழங்கல்
4. யுத்த செலவீடுகள்
5. உர மானியம்

87. 2005-2006 இல் இலங்கை அரசின் நடைமுறைச் செலவின் கணிசமான பங்கு பொதுப்படுகடன் மீதான வட்டிக்கு பயன்பட்டது.
1. 26%-29% 2. 27%-28% 3. 44%-46%
4. 5%-6% 5. 10%-11%

88. நீர் ஏற்றுக் கொள்ளமுடியாத கூற்றினை அடையாளப்படுத்துக?
1. மறைமுகவரிகள் பொதுவாக நுகர்வோருக்கு சுமையாக மாற்றப்படுகின்றது.
2. நீதித்தன்மைப் பிரமாணத்திற்கு இசைவானதாக விருத்தி முறை வரி செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பண்டங்களின் மீதான வரிகள் கூடுதலாக தேய்வரி விளைவுகளை ஏற்படுத்துகின்றன.
4. இலங்கையின் வரிவருவாயில் நேர்வரிகள் அதிகமாக காணப்படுகின்றன.
5. பிரதானமான நேரில்வரி பெறுமதிசேர்வரியாகும்.

89. வரிவிதிப்பில் சிக்கனத்தன்மை என்பதனை வெளிப்படுத்தும் சரியான கூற்று பின்வருவனவற்றில் எதுவாக இருக்கலாம்.
1. வருமானம் அதிகரிக்க அறவிடப்படும் வரிவீதமும் அதிகரித்துச் செல்லும்.
2. வரியைச் செலுத்துவோர் வரிமுறையை இலகுவாக விளக்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.
3. அரசுக்கு வருமானத்தை பெற்றுக் கொடுப்பதல்லாமல் பொருளாதார செயற்பாடுகள் மீது எவ்விதமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாதிருத்தல்.
4. வரி அறவிடுவது தொடர்பாக அரசிற்கு ஏற்படும் செலவும் வரி இறுப்பாளனுக்கு ஏற்படும் செலவும் மிகக் குறைவாக இருத்தல்.

90. மூலதனச் செலவின் உண்மைச் சொத்துக் கையேற்பு 2006இல் மூலதனச் செலவில் வகிக்கும் பங்கு.
1. 63% 2. 50% 3. 54% 4. 46% 5. 37%

91. பின்வருவனவற்றில் எது இலங்கையரசின் மீண்டெழும் செலவு வகையில் உள்ளடங்கும்?
1. நீர்ப்பாசனத்திட்டமொன்றின் அமைப்பு
2. மின்சாரசபை, இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய வழங்கப்படும் மாற்றல்.
3. ஓய்வூதியங்கள்
4. புதிய தொலைத்தொடர்பு நிலையமொன்றை நிர்மாணித்தல்
5. தேறிய முற்பணக் கணக்கு

92. "வரியொன்றின் பொருளாதார சுமை" என்பதனை பின்வருவனற்றில் எது குறித்து நிற்கும்?
1. வரியின் சுமையை இலகுவில் மற்றவர் மீது சுமத்தக்கூடிய தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. குறைந்த வருமானம் பெறுவோர் மீது கூடிய வரியும் கூடிய வருமானம் பெறுவோர் மீது குறைந்த வரியும் விதிக்கப்படுதல்.
3. வரிவிதிப்பால் அரசு அதிகளவு வருமானங்களை பெறுதல்.
4. வரிவிதிப்பின் காரணமாக நடைமுறையிலுள்ள உற்பத்தி, நுகர்வு அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள்.
5. வரி வருமானத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அரசின் செலவு

93. தனியார் மயப்படுத்தல் என்பது?
1. அரச சொத்தினை முழுமையாகவே தனியார் துறைக்கு விற்பனை செய்வதனைக் குறிக்கும்.
2. அரச உரிமையில் மாற்றங்களை ஏற்படுத்தாது முகாமைத்துவத்தை மட்டும் தனியார் துறைக்கு ஒப்படைப்பதைக் குறிக்கும்.
3. அரச சொத்தினை நீண்டகால குத்தகைக்கு தனியார் துறைக்கு வழங்குவதைக் குறிக்கும்.
4. அரசு சொத்தினை பகுதியளவில் தனியார் துறைக்கு விற்பனை செய்தலாகும்.
5. மேற்கூறப்பட்ட எல்லாவற்றையும் குறித்து நிற்கும்.

94. வட்டி வீதமானது திறன் வாய்ந்த பணக்கொள்கையின் கருவியாக அமைவது.
1. அரசின் கடன் பெறும் செலவு உயர்வை அதிகரிக்கும்.
2. வங்கிக் கடன்களுக்கான கேள்வி, வட்டி நெகிழ்ச்சியுடையதாகும்
3. வங்கிக் கடன்களுக்கான கேள்வி, வட்டி நெகிழ்ச்சியற்றதாகும்.
4. பண நிரம்பலின் வட்டி நெகிழ்ச்சியுடையது
5. பணநிரம்பலின் வட்டி நெகிழ்ச்சியற்றது.

95. அரசாங்கம் எரிபொருள்கள், மின்சாரம் செலவினங்கள் மீதான வரியை (10%) விதிப்பின்
1. வரி, இரு பண்டங்கள் மீதும் தேய்முறை விளைவை ஏற்படுத்தும்
2. இரு பண்டங்களின் மீது மட்டும் வரி தேய்முறை விளைவை ஏற்படுத்தும்.
3. எல்லா வருமான வகுப்பினருக்கும் விகிதாசார முறை விளைவை ஏற்படுத்தும்.
4. வரி, இரு பண்டங்கள் மீதும் விருத்தி முறை விளைவை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. அரச நிறுவனங்கள் செயற்திறனற்று இயங்குவதற்கு காரணம் அல்லாதது.

1. செயற்திறனற்ற முகாமைத்துவம்
2. திறனற்ற விலைக்கொள்கை
3. அரசியல் தலையீடுகள் அதிகம் உள்ளமை
4. தொழில்நுட்ப விருத்தியின்மை, ஊழல்கள் காணப்படுகின்றமை
5. சந்தைமாற்றங்களுக்கேற்ப விலை மாற்றமடைகின்றமை

97. வரிவிதிப்பில் உறுதித்தத்துவம் என்பது

1. பொருட்கள் சேவைகளின் விலைமட்டங்களில் தளம்பல் ஏற்படாத வகையில் வரி விதித்தலாகும்.
2. வரிவிதிப்பு மாற்றமில்லாதிருத்தல் ஆகும்.
3. உழைப்பாளரின் உழைக்கும் ஆற்றலை தூண்டக்கூடியதாக இருத்தல்.
4. வரிவிதிப்பில் சமத்துவம் பின்பற்றப்படுதல் ஆகும்.
5. வரி விதிப்பு முறைகளை அனைவரும் சிக்கலின்றி விளங்கக் கூடியதாக இருத்தல்.

98. பின்வரும் அரச செலவு வகைகளில் நடப்பு மாற்றல்களில் உள்ளடக்கப்படாதது.

1. ஓய்வூதியக் கொடுப்பனவு
2. அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான நடப்பு மாற்றல்கள்
3. பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள், சீருடைகள் வழங்கல் செலவுகள்
4. அரச கூட்டுத்தாபனங்களுக்கு மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கான நன்கொடைகள்.
5. சமுர்த்திக் கொடுப்பனவுகள்

99. பாதீட்டுப் பற்றாக்குறையின் உள்நாட்டு சந்தையல்லா கடன் மூலகம்.

1. ஊழியர் சேமலாப நிதியம் 2. வர்த்தக வங்கி
3. காப்புறுதி நிறுவனங்கள் 4. விதவைகள் அநாதைகள் நிதியம்
5. காசு நிலுவையின் பயன்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. பின்வரும் வரவுசெலவுத் திட்ட சமன்பாடுகளில் பிழையானது

1. நடைமுறைக்கணக்கு மீதி = அரசிறை – நடைமுறைச்செலவு

2. சமூல நிலுவை = நடைமுறைக்கணக்கு நிலுவை - மூலதனச்செலவு

3. கடன்நிதிப் பற்றாக்குறை = நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை - நன்கொடைகள்

4. முதன்மைக்கணக்கு நிலுவை = அரசிறை - வட்டி நீக்கப்பட்ட அரச செலவு

5. தேறிய பணக்குறை = சமூலப்பற்றாக்குறை - கடன் மீள் கொடுப்பனவு

101. நடைமுறைக் கணக்கு மிகையினால் ஏற்படுவது

1. அரசின் சேமிப்பு நேர்க்கணியமாக இருக்கும்.
2. அரச வருமானத்திலிருந்து நடைமுறைச் செலவினை ஈடுசெய்வதுடன் மூலதனச் செலவின் ஒரு பகுதியினையும் ஈடுசெய்யலாம்.
3. இறைப் பற்றாக்குறை குறைவடைய கடன்களின் அளவு குறைவடையும்.
4. தனியார் துறைக்கான மூலதன வசதிகள் அதிகரிக்க தனியார் முதலீடு அதிகரிக்கும்.
5. மேற்கூறிய யாவும் ஏற்படும்.

102. உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான அரச தனியார் கூட்டாண்மைக்கு இலங்கையிலிருந்தான உதாரணம்.

1. களணி மேம்பாலத் திட்டம்
2. கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டம்
3. கட்டுநாயக்கா விமானத்தள விரிவாக்கல் திட்டம்
4. தேசத்தின் மீள்கட்டுமானத் திட்டம்
5. பெருந்தெருக்கள் அமைப்புத்திட்டம்

103. சுனாமியின் பின்னரான மீட்சி, மீள்கட்டுமான நடவடிக்கைகள் என்பவற்றில் உள்ளடங்காத திட்டம்

1. சுனாமியின் பின் இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வீடுகளை நிர்மாணித்தல்
3. ஜீவனோபாயத்தை பழைய நிலைக்கு கொண்டுவருதல்
4. சுகாதாரம் கல்வி என்பவற்றை வழங்குதல்
5. தேசிய உட்கட்டுமானத்தினை கட்டியெழுப்புதல்.

104. கட்டமைப்பு சீராக்கல் கொள்கையின் (S.A.P) குறைபாடு
1. அதிகளவான வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்
2. உயர்ந்த பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தியை ஏற்படுத்தல்
3. இறக்குமதி தாராளமயமாக்கலினால் உள்நாட்டு கைத்தொழில்கள் பாதிக்கப்படும்.
4. நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்.
5. பேரினப் பொருளாதார சமநிலையை ஏற்படுத்தல்

105. பாலம் இடப்படாத இடைவெளி (விரிவுநிதி) என்பது
1. சமூலப் பற்றாக்குறையினை விட மொத்த நிதியீட்டம் உயர்வாக இருத்தல்.
2. நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையைவிட மொத்த நிதியீட்டம் குறைவாக இருத்தல்.
3. சமூலப் பற்றாக்குறை முழுவதும் நிதியிடப்படல்
4. கொடைக்குப் பிந்திய பற்றாக்குறையினை விட கடன் நிதியீட்டம் குறைவாக இருத்தல்.
5. அரச வரவுகளும் அரச செலவுகளும் சமனாக இருத்தல்.

106. உள்நாட்டில் அதிக பணவீக்கம் காணப்படும் போது தயாரிக்கவேண்டிய பாதீடு.
1. மிகைநிலைப் பாதீடு
2. குறைநிலைப்பாதீடு
3. சமநிலைப் பாதீடு
4. பூச்சிய பாதீடு
5. தனியார் பாதீடு

107. நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான சீர்திருத்தம் அல்லாதது.
1. தனியார் மயமாக்கல் கொள்கைளை நடைமுறைப்படுத்தல்.
2. நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மூடிவிடல்
3. சந்தை மாற்றங்களுக்கேற்ப விலையிடல் கொள்கையை மாற்றியமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அரச உற்பத்தி முறையில் நவீனத்துவத்தைப் புகுத்துதல்
5. அரச நிறுவனங்களில் அரச தலையீட்டை அதிகரித்தல்.

108. விருத்திமுறை வரியின் நன்மைகளில் ஒன்று
1. அரசிற்கு குறைந்த வருமானம் கிடைத்தல்.
2. உழைக்கும் ஆற்றல் தூண்டப்படும்
3. வருமானச் சமமின்மை நீக்கப்பட்டு ஒப்புரவு ஏற்படும்
4. முதலீட்டாளர் ஊக்குவிக்கப்படுவர்
5. வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும்

109. சந்தைப் பொருளாதாரத்தில் அரச தலையீடின்றி எது உயர்வாக உற்பத்தி செய்யப்படும்?
1. ஆடம்பரப்பண்டம்
2. மதுபானம் போன்ற மேன்மையற்ற பண்டம்
3. கல்வி போன்ற மேன்மைப் பண்டம்
4. இலவசப் பண்டம்
5. தனியார் பண்டம் அல்லது பொருளாதாரப்பண்டம்

110. நேர்வரியை நேரில்வரியிலிருந்து வேறுபடுத்துவதில் பிரதான அம்சம்
1. வருமானம், சொத்துக்கள் மீது விதிக்கப்படுவது
2. வரிப் பெயர்ச்சித் தன்மையற்றது.
3. நேர்வரி கட்டாயம் செலுத்தப்படும்
4. விருத்தி முறை வரிக்கமைய விதிக்கப்படுதல்
5. மொத்த வரிவருமானத்தில் அதிக பங்கினை வகித்தல்

111. அண்மைக்காலத்தில் GDP இன் வீதமாக ஆரம்பப்பற்றாக்குறை
1. 2%-3% 2. 3%-4% 3. 8%-9%
4. 1%-2% 5. 4%-5%

112. வங்கித்துறை சார்ந்த உள்நாட்டு சந்தைக்கடன்களில் அரசாங்கம் கடன் பெறுவதால் ஏற்படும் விளைவாக கருதமுடியாதது.
1. நாட்டில் விரிவுத்தாக்கத்தை ஏற்படுத்தும்
2. நாட்டில் பணநிரம்பல் அதிகரிக்கும்.
3. தனியார் துறையினர் பாதிக்கப்படமாட்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வர்த்தக வங்கிகளில் கடன் பெறுவதால் ஏற்படும் பணவீக்கத்தை விட மத்திய வங்கியில் கடன்பெறுவதால் ஏற்படும் பணவீக்கம் உயர்வாக காணப்படும்.
5. உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரிக்கும்.

113. பின்வருவனவற்றில் பிழையான பாதீட்டுச் சமன்பாடு
1. அரசிறை = வரிஅரசிறை + வரியல்லா அரசிறை
2. அரசவரவுகள் = அரசிறை + நிதியீட்டம்
3. பொதுப்படு கடன்கள் = உள்நாட்டுக்கடன் + வெளிநாட்டுக்கடன்
4. சமூல மீதி = அரச வருமானம் – மூலதனச் செலவு
5. விரிவு நிதி = அரசவருமானம் – மூலதனச்செலவு

114. உயர் பாதீட்டுப் பற்றாக்குறையின் பொருளாதார நட்டம்
1. கடன்களின் வட்டிக் கொடுப்பனவுகள் குறைவடையும்
2. பொதுப்படுகடனில் அதிகரிப்பை ஏற்படுத்துதல்
3. சென்மதி நிலுவை மிகைநிலை அடையும்
4. வட்டிவீதம் குறைவடையும்
5. தேறிய விரிவுத் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை

115. பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களின் போதான கொள்கை அல்லாதது.
1. நாணயக் கொள்கை
2. இறைக் கொள்கை
3. நாணய மாற்று வீதக் கொள்கை
4. தனியார் மயமாக்கல் கொள்கை
5. நிரம்பல்பக்க கொள்கை

116. பின்வருவனவற்றுள் நாணயக் கொள்கையின் கட்டுப்பாடு எது?
1. வரிக்கட்டுப்பாடு
2. அரச செலவுக்கட்டுப்பாடு
3. வட்டிவீதக் கட்டுப்பாடு
4. இறைக்கட்டுப்பாடு
5. பௌதிகக் கட்டுப்பாடு

117. 2006இல் GDP இன் சதவீதமாக அரச செலவினங்களும் தேறிய கடன் வழங்கல்களும் என்னவாக உள்ளது.

1. 25.4% 2. 23.5% 3. 24.7% 4. 22.6% 5. 21.3%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

118. பின்வருவனவற்றுள் தனியார் பொருட்கள் (Private Goods) என்பதற்குப் பொருத்தமற்ற விடயம்

1. விலைப் பொறிமுறைக்கு உட்பட்டு வழங்கப்படுபவை
2. நுகர்வில் விலக்குதல் விதிக்க உட்படுபவை
3. உற்பத்தி/ நுகர்வில் அமையச்செலவு, எல்லைச் செலவு காணப்படும்.
4. தனியாரினாலும் அரசினாலும் இலாபநோக்கம் கருதி உற்பத்தி செய்து வழங்கப்படுபவை.
5. நுகர்வில் அமையச்செலவு ஏற்படுவதில்லை.

119. கீழ் கட்டமைப்பு வசதிகளை தனியார் வழங்குவதில் தனியார் துறையினை அனுமதிப்பது தொடர்பான முறை எது?

1. கட்டுதல், இயக்குதல், உரிமை கொள்ளல் (B.O.O)
2. நவீனப்படுத்தல், இயக்குதல், உரிமைகொள்ளல் (M.O.O)
3. நவீனமயப்படுத்தல், குத்தகையிடல், மாற்றுதல் (M.L.T)
4. கட்டுதல், வாடகைக்கிடல், (BR)
5. கட்டுதல், இயக்குதல் (BO)

120. கீழ்க்கட்டமைப்பு வசதிகளை தனியார் துறையினரும் வழங்க அனுமதிக்கப்பட்டமைக்கான காரணம் அற்றது?

1. அதிகரித்துக் கொண்டு செல்லும் பாதுகாப்புச் செலவு காரணமாக சில சேவைகளை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டமை.
2. அதிகரித்துச் செல்லும் கீழ்க்கட்டமைப்பு வசதிகளுக்கான தேவைகளை அரசினால் மட்டும் ஈடுசெய்ய முடியாதுள்ளமை.
3. வெளிநாட்டு முதலீடுகளை அதிகளவில் வரவழைப்பதற்கு கீழ்க்கட்டமைப்பு வசதிகளை விரைவாக அதிகரிக்கவேண்டிய தேவை ஏற்படல்.
4. கீழ்க்கட்டுமான வசதிகளை அரசினால் மட்டும் வழங்கமுடியாமல் இருக்கின்றமையும் அரசதுறையில் காலதாமதம் வினைத்திறனின்மை என்பன காணப்படுகின்றமையும்.
5. கீழ்க்கட்டுமானவசதிகள் குறைந்த செலவுகளை ஏற்படுத்துவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி.
   1. தொழில்நுட்ப பின்னடைவு
   2. சேமிப்பு, முதலீட்டைக் குறைத்தல்
   3. பொருளாதாரக் கீழ்கட்டுமான வசதிகள்
   4. சம்பள மட்டம்
   5. உற்பத்தித்திறன் குறைதல்

122. பொருளாதார அபிவிருத்தி இலக்கான வேலை வாய்ப்பிற்கான குறிகாட்டியல்லாதது.
   1. வேலையின்மை வீதம்
   2. தொழில்நுட்ப பெறுபேற்றுக் குறிகாட்டி
   3. தொழில் வீதம்
   4. ஊழியப்படை வளர்ச்சி வீதம்
   5. கீழுழைப்பு வீதம்

123, 124, 125ம் வினாக்களுக்கு இத்தரவுகளிலிருந்து சரியான விடையை தெரிவு செய்க. (எண்கள் மில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| 1. அரச வருமானம் | 2000 |
| 2. ஏக மொத்தச் செலவு | 3500 |
| 3. மூலதனச் செலவு | 1800 |
| 4. நடைமுறை மாற்றல் | 400 |
| 5. பகிரங்கக் கடன்கள் | 900 |
| 6. வெளிநாட்டு நன் கொடைகள் | 350 |

123. பொது நுகர்வு யாது?
   1. 1700   2. 400   3. 1500   4. 1300   5. 450

124. அரசாங்க சேமிப்பின் /($S_G$) அளவு என்ன?
   1. 300   2. 200   3. 500   4. 750   5. 900

125. நிதியிடப்படாத இடைவெளி எவ்வளவாக இருக்கின்றது.
   1. 1150   2. 600   3. 250   4. ~ 150   5. 1100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

## அறிமுகப் பொருளாதாரம்

| வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 36 | 03 | 71 | 03 | 106 | 02 |
| 02 | 02 | 37 | 04 | 72 | 04 | 107 | 05 |
| 03 | 04 | 38 | 04 | 73 | 02 | 108 | 02 |
| 04 | 03 | 39 | 01 | 74 | 05 | 109 | 01 |
| 05 | 04 | 40 | 01 | 75 | 01 | 110 | 05 |
| 06 | 04 | 41 | 05 | 76 | 02 | 111 | 02 |
| 07 | 03 | 42 | 04 | 77 | 05 | 112 | 04 |
| 08 | 02 | 43 | 04 | 78 | 03 | 113 | 01 |
| 09 | 05 | 44 | 01 | 79 | 04 | 114 | 02 |
| 10 | 04 | 45 | 02 | 80 | 03 | 115 | 04 |
| 11 | 04 | 46 | 03 | 81 | 03 | 116 | 05 |
| 12 | 04 | 47 | 02 | 82 | 02 | 117 | 03 |
| 13 | 04 | 48 | 04 | 83 | 04 | 118 | 05 |
| 14 | 04 | 49 | 05 | 84 | 04 | 119 | 03 |
| 15 | 03 | 50 | 02 | 85 | 02 | 120 | 02 |
| 16 | 02 | 51 | 03 | 86 | 01 | 121 | 05 |
| 17 | 01 | 52 | 02 | 87 | 05 | 122 | 02 |
| 18 | 04 | 53 | 04 | 88 | 05 | 123 | 03 |
| 19 | 04 | 54 | 03 | 89 | 05 | 124 | 04 |
| 20 | 04 | 55 | 05 | 90 | 03 | 125 | 04 |
| 21 | 03 | 56 | 03 | 91 | 02 | | |
| 22 | 04 | 57 | 01 | 92 | 04 | | |
| 23 | 04 | 58 | 04 | 93 | 01 | | |
| 24 | 03 | 59 | 01 | 94 | 03 | | |
| 25 | 02 | 60 | 03 | 95 | 02 | | |
| 26 | 03 | 61 | 02 | 96 | 04 | | |
| 27 | 03 | 62 | 05 | 97 | 01 | | |
| 28 | 03 | 63 | 02 | 98 | 05 | | |
| 29 | 02 | 64 | 05 | 99 | 03 | | |
| 30 | 02 | 65 | 02 | 100 | 02 | | |
| 31 | 02 | 66 | 04 | 101 | 03 | | |
| 32 | 03 | 67 | 03 | 102 | 04 | | |
| 33 | 01 | 68 | 01 | 103 | 01 | | |
| 34 | 02 | 69 | 01 | 104 | 04 | | |
| 35 | 02 | 70 | 04 | 105 | 04 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப் பொருளாதாரம்

| வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 36 | 02 | 71 | 04 | 106 | 03 |
| 02 | 02 | 37 | 04 | 72 | 02 | 107 | 04 |
| 03 | 03 | 38 | 05 | 73 | 03 | 108 | 04 |
| 04 | 01 | 39 | 05 | 74 | 04 | 109 | 02 |
| 05 | 05 | 40 | 03 | 75 | 01 | 110 | 02 |
| 06 | 01 | 41 | 03 | 76 | 02 | 111 | 03 |
| 07 | 05 | 42 | 01 | 77 | 03 | 112 | 01 |
| 08 | 02 | 43 | 04 | 78 | 02 | 113 | 04 |
| 09 | 05 | 44 | 03 | 79 | 04 | 114 | 03 |
| 10 | 02 | 45 | 02 | 80 | 01 | 115 | 02 |
| 11 | 01 | 46 | 02 | 81 | 03 | 116 | 02 |
| 12 | 05 | 47 | 01 | 82 | 04 | 117 | 03 |
| 13 | 02 | 48 | 01 | 83 | 02 | 118 | 01 |
| 14 | 05 | 49 | 01 | 84 | 05 | 119 | 05 |
| 15 | 03 | 50 | 04 | 85 | 04 | 120 | 01 |
| 16 | 04 | 51 | 03 | 86 | 01 | 121 | 04 |
| 17 | 01 | 52 | 03 | 87 | 03 | 122 | 02 |
| 18 | 01 | 53 | 04 | 88 | 04 | 123 | 04 |
| 19 | 01 | 54 | 01 | 89 | 01 | 124 | 01 |
| 20 | 02 | 55 | 04 | 90 | 04 | 125 | 02 |
| 21 | 01 | 56 | 02 | 91 | 03 | | |
| 22 | 01 | 57 | 02 | 92 | 02 | | |
| 23 | 01 | 58 | 02 | 93 | 04 | | |
| 24 | 03 | 59 | 01 | 94 | 01 | | |
| 25 | 04 | 60 | 03 | 95 | 02 | | |
| 26 | 03 | 61 | 01 | 96 | 05 | | |
| 27 | 01 | 62 | 03 | 97 | 04 | | |
| 28 | 03 | 63 | 02 | 98 | 04 | | |
| 29 | 04 | 64 | 03 | 99 | 05 | | |
| 30 | 04 | 65 | 01 | 100 | 01 | | |
| 31 | 03 | 66 | 03 | 101 | 03 | | |
| 32 | 05 | 67 | 03 | 102 | 04 | | |
| 33 | 02 | 68 | 02 | 103 | 02 | | |
| 34 | 03 | 69 | 04 | 104 | 05 | | |
| 35 | 02 | 70 | 03 | 105 | 02 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினப் பொருளாதாரம்

| வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 04 | 36 | 02 | 71 | 03 | 106 | 04 |
| 02 | 04 | 37 | 02 | 72 | 04 | 107 | 04 |
| 03 | 04 | 38 | 03 | 73 | 01 | 108 | 05 |
| 04 | 04 | 39 | 03 | 74 | 05 | 109 | 04 |
| 05 | 04 | 40 | 03 | 75 | 04 | 110 | 01 |
| 06 | 01 | 41 | 03 | 76 | 01 | 111 | 05 |
| 07 | 01 | 42 | 03 | 77 | 03 | 112 | 02 |
| 08 | 02 | 43 | 02 | 78 | 05 | 113 | 03 |
| 09 | 04 | 44 | 03 | 79 | 04 | 114 | 04 |
| 10 | 03 | 45 | 03 | 80 | 04 | 115 | 02 |
| 11 | 03 | 46 | 05 | 81 | 03 | 116 | 04 |
| 12 | 04 | 47 | 02 | 82 | 05 | 117 | 02 |
| 13 | 04 | 48 | 03 | 83 | 03 | 118 | 01 |
| 14 | 03 | 49 | 01 | 84 | 02 | 119 | 04 |
| 15 | 03 | 50 | 05 | 85 | 02 | 120 | 03 |
| 16 | 01 | 51 | 02 | 86 | 04 | 121 | 05 |
| 17 | 02 | 52 | 03 | 87 | 01 | 122 | 04 |
| 18 | 04 | 53 | 04 | 88 | 03 | 123 | 02 |
| 19 | 05 | 54 | 02 | 89 | 05 | 124 | 05 |
| 20 | 03 | 55 | 03 | 90 | 05 | 125 | 01 |
| 21 | 05 | 56 | 03 | 91 | 03 | | |
| 22 | 03 | 57 | 01 | 92 | 03 | | |
| 23 | 02 | 58 | 04 | 93 | 04 | | |
| 24 | 02 | 59 | 01 | 94 | 02 | | |
| 25 | 03 | 60 | 05 | 95 | 03 | | |
| 26 | 03 | 61 | 04 | 96 | 02 | | |
| 27 | 01 | 62 | 02 | 97 | 02 | | |
| 28 | 01 | 63 | 03 | 98 | 04 | | |
| 29 | 04 | 64 | 02 | 99 | 05 | | |
| 30 | 02 | 65 | 04 | 100 | 01 | | |
| 31 | 01 | 66 | 05 | 101 | 02 | | |
| 32 | 03 | 67 | 03 | 102 | 04 | | |
| 33 | 05 | 68 | 02 | 103 | 03 | | |
| 34 | 03 | 69 | 01 | 104 | 04 | | |
| 35 | 05 | 70 | 02 | 105 | 05 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசப் பொருளாதாரம்

| வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் | வினா இல | விடை இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 04 | 36 | 01 | 71 | 03 | 106 | 01 |
| 02 | 05 | 37 | 04 | 72 | 02 | 107 | 05 |
| 03 | 03 | 38 | 02 | 73 | 04 | 108 | 03 |
| 04 | 05 | 39 | 02 | 74 | 05 | 109 | 02 |
| 05 | 04 | 40 | 03 | 75 | 03 | 110 | 01 |
| 06 | 04 | 41 | 04 | 76 | 02 | 111 | 02 |
| 07 | 02 | 42 | 02 | 77 | 01 | 112 | 03 |
| 08 | 05 | 43 | 03 | 78 | 03 | 113 | 04 |
| 09 | 01 | 44 | 04 | 79 | 02 | 114 | 02 |
| 10 | 04 | 45 | 04 | 80 | 03 | 115 | 04 |
| 11 | 01 | 46 | 04 | 81 | 01 | 116 | 02 |
| 12 | 03 | 47 | 05 | 82 | 04 | 117 | 01 |
| 13 | 03 | 48 | 04 | 83 | 01 | 118 | 05 |
| 14 | 03 | 49 | 05 | 84 | 05 | 119 | 01 |
| 15 | 02 | 50 | 03 | 85 | 01 | 120 | 05 |
| 16 | 04 | 51 | ... | 86 | 05 | 121 | 03 |
| 17 | 03 | 52 | 03 | 87 | 02 | 122 | 02 |
| 18 | 02 | 53 | 02 | 88 | 04 | 123 | 04 |
| 19 | 01 | 54 | 03 | 89 | 04 | 124 | 01 |
| 20 | 04 | 55 | 04 | 90 | 03 | 125 | 05 |
| 21 | 02 | 56 | 02 | 91 | 03 | | |
| 22 | 05 | 57 | 01 | 92 | 04 | | |
| 23 | 01 | 58 | 02 | 93 | 05 | | |
| 24 | 05 | 59 | 02 | 94 | 04 | | |
| 25 | 04 | 60 | 01 | 95 | 01 | | |
| 26 | 01 | 61 | 04 | 96 | 05 | | |
| 27 | 04 | 62 | 01 | 97 | 01 | | |
| 28 | 04 | 63 | 03 | 98 | 04 | | |
| 29 | 04 | 64 | 01 | 99 | 04 | | |
| 30 | 04 | 65 | 05 | 100 | 03 | | |
| 31 | 01 | 66 | 03 | 101 | 05 | | |
| 32 | 02 | 67 | 01 | 102 | 02 | | |
| 33 | 03 | 68 | 05 | 103 | 01 | | |
| 34 | 03 | 69 | 01 | 104 | 03 | | |
| 35 | 02 | 70 | 01 | 105 | 04 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூல் பற்றி......

தேசிய ரீதியில் தமிழ் மொழியில் க.பொ.த .உயர்தர வகுப்புக்களில் பொருளியலை
ஒரு பாடமாக கற்கும் மாணவர்கள் பயனடையக்கூடிய விதத்திலும்
பரீட்சையில் பல்தேர்வு வினாக்களில் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத்
தீர்த்து அவர்களின் திறனை மேம்படுத்தும் வகையிலும்
இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

'பொருளியல் - I 500 பல்தேர்வு வினாக்கள்' எனும் இந்நூல் அறிமுகப்பொருளாதாரம்,
சந்தைப் பொருளாதாரம், பேரினப் பொருளாதாரம், அரச பொருளாதாரம்
ஆகிய அலகுகளில் ஆழமான பல்தே[illegible] வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
இந்நூல் மாணவர்களி[illegible] நல[illegible]ருதி உன்னத நோக்குடன்
வெளியிடப்பட்டுள்ளமை [illegible]புக்குரியது. இம் முயற்சி
வெற்றிபெற வாழ்த்துவதுடன் மேலும்
பல நூல்களை வெளியிட வேண்டுமென
பாராட்டி வாழ்த்துகின்றேன்.

திரு.சி.சிவகுமாரன்
முன்னாள் பொருளியல்வள ஆளணியர்,
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.

23.03.2008

[illegible]ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org